

# எப்போது அவர்களுக்கு நீதி கிடைக்கும்?

## இலங்கையின் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணையத்தின் தோல்விகள்

AMNESTY INTERNATIONAL

சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஓர் உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் பரவியுள்ளது. ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆர்வலர்கள் என 30 லட்சம் பேருக்கும் அதிகமானோர் இதில் உள்ளனர். மோசமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமைகள் உலகப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சர்வதேச தர அளவுகோல்களின் அடிப்படையிலான பிற உரிமைகளையும் உலக மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க இடம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது எங்கள் இலட்சியம்.

எந்த ஒரு அரசாங்கமோ, அரசியல் சித்தாந்தமோ, பொருளாதார நலனோ, மதமோ சாராத சுயாதீனமான அமைப்பு இது. இது பெருமளவில் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே செயல்படுகிறது.

**AMNESTY**
**INTERNATIONAL**

முதலில் பிரசுரிக்கப்பட்டது 2011ல். பிரசுரித்தோர்
**Amnesty International Ltd**
**Peter Benenson House**
**1 Easton Street**
**London WC1X 0DW**
**United Kingdom**

© சர்வதேச பொதுமன்னிப்பு சபை 2011

**Index: ASA 37/008/2011 Tamil**
மூல மொழி : ஆங்கிலம்
அச்சிட்டது சர்வதேச பொதுமன்னிப்பு சபை,
சர்வதேச செயலகம், ஐக்கிய ராஜ்ஜியம்

இப்பிரசுரத்திற்கான அனைத்து உரிமைகளும் தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது. பிரசுர உரிமைக் காப்பீட்டுச் சட்டத்தால் இப்பிரசுரம் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் கட்டணம் சூலிக்காமல் ஆலோசனை வழங்கும் நோக்கிலோ, பிரச்சார நோக்கிலோ அல்லது கல்வி நோக்கிலோ இதனை மறு பிரசுரம் செய்யலாம். இருந்தபோதும் இதனை மீண்டும் விலைக்கு விற்க முடியாது. இந்த பிரசுரத்தை அனுமதிக்கப்பட்ட வழியில் பயன்படுத்துவோர் பிரசுரத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதை முன்னிட்டு தம்மிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பிரசுர உரிமை உடையவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மற்ற சூழல்களில் இந்த பிரசுரத்தின் நகலைப் பயன்படுத்தவோ, மற்ற பிரசுரங்களில் பயன்படுத்தவோ அல்லது மொழி மாற்றி, வாசகங்களை மாற்றி பயன்படுத்தவோ விரும்புவோர் பிரசுரதாரர்களிடம் இருந்து எழுத்து மூல முன்-அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஒரு கட்டணம் செலுத்த வேண்டி வரலாம். அனுமதி பெறவேண்டும் என்றாலோ பிற கேள்விகள் இருந்தாலோ **copyright@amnesty.org** என்ற மின் அஞ்சலைத் தொடர்புகொள்ளவும்.

*அட்டைப் படம்*: படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவிட ம் தமது எழுத்துபூர்வ புகார்களை கையளிப்பதற்காக இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பெண்கள் வரிசையில் நிற்கின்றனர்.
© மனித உரிமைகளுக்கான மையம், இலங்கை
**http://sn.im/27x7d6**

**amnesty.org**

# பொருளடக்கம்

**1. அறிமுகம்**……………………………………………………………………………… 5

**2. LLRC யின் செயற்பாடுகள் – தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்களின் பட்டியல்** ……………….31

சாட்சி வாக்குமுலங்கள் வெளிக்கொணர்ந்த மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்கத் தவறியது ……………………………………………31

சாட்சிகள் LLRCயிடம் முறையிட்டிருந்த உரிமை மீறல்கள்…………………………………… 32

கொலைகள் ……………………………………………38

இலங்கை அரச படையினரும் விடுதலைப் புலிகளும் செய்திருந்த ஷெல் தாக்குதல்கள் ……………………………………………40

ஆட்கள் பலவந்தமாக கொண்டுசெல்லப்படுதல் / ஆட்கள் காணாமல்போதல். 51

சரணைந்த விடுதலைப் புலி தலைவர்கள் காணாமல் போனது பற்றிய குற்றச்சாட்டுகள் ……………………………………………53

எதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்படுதல் ……………………………………………55

**3. அரசாங்கத்துக்கு ஆதரவான பக்கச்சார்பு LLRCயிடம் வெளிப்பட்டிருந்தமை** …….…..57

அரசாங்கத் தரப்பு சாட்சிகளை விசாரித்தபோது அரசாங்கத்தின் செயற்பாடுகளை முழுமையாக ஆராய்வதற்குரிய கேள்விகளை கேட்கத் தவறியது ……………………………………………57

சாட்சிகளை விசாரித்தபோது தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை ஆணையாளர்கள் திணித்திருந்தனர் ……………………………………………66

அரசாங்கத்தை விமர்த்த நிபுணர்களிடமும் சட்சிகளிடமும் கடுமையாக எதிர்க்கேள்வி கேட்டது ……………………………………………67

பாதிக்கப்பட்டவர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தத் தவறியது ……………………………………71

சாட்சிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியது ……………………………………75

**4. LLRCயின் காரணமாய் எழுந்த அரசு நடவடிக்கைகள் ……………………………………77**

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விவகாரம் ……………………………………77

காணிப்பிரச்சினை ……………………………………80

மொழி ……………………………………80

சட்டம் ஒழுங்கு ……………………………………81

சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் ……………………………………82

**5. சர்வதேச அளவிலான சுயாதீன விசாரணை தேவை ……………………………………83**

**6. நிறைவுக் குறிப்புகள் ……………………………………86**

# 1. அறிமுகம்

“தாக்குதலோ ஷெல் அடியோ இல்லாத நேரத்தில் எங்களால் வெளியில் சமைக்க முடிந்தது. ஆனால் ஷெல் அடி அதிகமாக இருக்கும் நேரத்தில் நாங்கள் பங்கருக்குள்ளேதான் சமைக்கவும் தங்கியிருக்கவும் வேண்டும். வாரக் கணக்கில் என் பிள்ளைகள் ஒன்றுமே பேசவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் பயந்து போயிருந்தார்கள். ஷெல் விழுவது ஆட்கள் இறந்ததெல்லாம் அவர்கள் கண் முன்னே நடந்திருந்தது. சுற்றியும் சடலங்களாக கிடந்த பயங்கர நினைவுகளெல்லாம் அவர்களை எப்போதுமே தொந்தரவு செய்துகொண்டுதான் இருக்கும்.”
யுத்தத்தின் இறுதி மாதங்களில் வன்னியில் சிக்குண்டவர் ஒருவர்

இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே தசாப்தங்கள் கணக்கில் நடந்திருந்த இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி மாதங்களில் மட்டுமே ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இந்த இறுதி மோதல்களை சாட்சிகள் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காக இலங்கை அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. சுயாதீன கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரை மோதல் பகுதிகளுக்கு விட இலங்கை அரசு அனுமதி மறுத்திருந்தது. இருந்தாலும் சம்பவங்களை நேரில் கண்டவர்கள் தந்த வாக்குமூலங்கள், உதவிப் பணியாளர்கள் தந்த விரபங்கள் போன்றவற்றை சர்வதேச பொதுமன்னிப்பு சபை சுயாதீனமாகத் திரட்டியுள்ளது. அவற்றின் அடிப்படையில் பார்க்கையில் இந்த இறுதி யுத்ததில் மட்டும் பொதுமக்கள் குறைந்தபட்சம் 10,000 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்; பொதுமக்களை விடுதலைப் புலிகள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தினர், சிறார்களை வலுக்கட்டாயமாக படையில் சேர்த்தனர்; பொதுமக்கள் அடர்ந்து இருந்த இடங்களிலும் இலங்கை இராணுவம் ஷெல் தாக்குதல் நடத்தியது; மோதல் பிரதேசங்களில் சிக்குண்ட மக்கள் உணவு, குடிநீர், மருத்துவ உதவி போன்றவை கிடைக்காமல் மோசமாக அனாவசியமாக அல்லாடினர் போன்ற முடிவுகளுக்கு சர்வதேச பொதுமன்னிப்பு சபை வந்துள்ளது.

இவையெல்லாம் சர்வதேச சட்டங்களை மிகவும் மோசமாக மீறுகின்ற செயல்களாகும். இவற்றைச் செய்தவர்கள் சட்டத்துக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் வராமல் போகுமானால், குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து

தப்பிப்பதற்கு சர்வதேச அளவில் இது மிகவும் மோசமான முன்னுதாரணமாக அமைந்துவிடும். மேலும் குற்றவாளிகள் தொடர்ந்தும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து வருவது இலங்கையில் சமூகங்கள் இடையில் நல்லிணக்கம் உருவாவதையும் தடுக்கும். தற்சமயம் அங்கு நடந்துவருகின்ற மனித உரிமை மீறல்களை ஊக்குவிப்பதற்கு இவை இடம்தந்துவிடும். இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்துவிட்டன என்றாலும் அங்கு மனித உரிமை மீறல்கள் முடிவுக்கு வந்திருக்கவில்லை என்பதே யதார்த்தம்[1]. பலவந்தமாக ஆட்கள் கொண்டுசெல்லப்படுதல், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் பொலிசாரால் சித்ரவதைக்கு ஆளாகுதல் போன்ற செய்திகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை இலங்கையிலிருந்து தொடர்ந்தும் பெற்றுவரவே செய்கிறது. இலங்கையின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் 2009ஆம் ஆண்டு 5,545 முறைப்பாடுகளைப் பெற்றிருந்தது. இவற்றில் கிட்டத்தட்ட பாதியளவானவை பொலிசாருக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட புகார்கள் என அது தெரிவிக்கிறது. 2009க்குப் பின்னரும் பொலிசாருக்கு எதிராக ஆயிரக்கணக்கான புகார்கள் வந்துள்ளதாக அது கூறுகிறது.

உள்நாட்டளவிலும், சர்வதேச அளவிலும், கூட்டாளி நாடுகளான இந்தியா போன்ற நாடுகளும் அழுத்தம் தருகின்றன என்றபோதும், குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நம்பத்தகுந்த முயற்சி எதனையும் மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் இதுவரை மறுத்துவந்திருக்கிறது. மாறாக, கடந்த இரண்டு தசாப்த காலங்களில் பலமுறை செய்திருந்ததுபோல, உள்நாட்டளவில் ஒரு ஆணையத்தை நியமித்து, அந்த ஆணையம் குற்றங்களை விசாரிக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் வழங்கும் என்று கூறியிருந்தது. ஆனால் சர்வதேச அழுத்தங்களை திசை திருப்புவதும், உள்நாட்டளவில் விமர்சகர்களின் வாயை அடைப்பதும்தான் அதன் நிஜ நோக்கம்.

இலங்கை அரசின் இப்படியான திசைதிருப்பும் முயற்சியின் மிக அண்மைய உதாரணம்தான், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்த விசேட விசாரணை ஆணைக்குழுவான, படிப்பைனைக்கும் நல்லிணகத்துக்குமான ஆணைக்குழு (LLRC). இலங்கை அரசு இந்த ஆணைக்குழுவை அறிவித்த சமயத்தில், விமர்சனங்கள் சற்று ஓய்ந்தன என்றாலும், பிற்பாடு வெளியான ஆதாரங்கள் இலங்கையில் நடந்ததாக குற்றம்சாட்டப்படும் குற்றங்களின் பாரிய அளவையும் தீவிரத் தன்மையையும் வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ள நிலையில், கூடுதலான சர்வதேச அழுத்தங்கள் உலகெங்கும் இருந்தும் வரவே செய்யும் என்பது தெளிவாகியுள்ளது. சர்வதேச சமூகம் அதிலும் குறிப்பாக இலங்கையில் நிஜமான நல்லிணக்கம் மலரவேண்டும் என்று விரும்பும் நாடுகள், LLRCயின் ஏராளமான குறைகளையும் கோளாறுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீடிக்கக்கூடிய சமாதானத்தை நோக்கி இலங்கை நகர வேண்டும், சர்வதேச சட்ட விதிகளுக்கு ஏற்ப பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நீதியும் பரிகாரமும் கிடைக்க இலங்கை அரசுக்கு வழிசெய்ய வேண்டும் என அவர்கள் தொடர்ந்து அழுத்தம் தருவது அவசியம் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது.

இலங்கையின் LLRC என்பது குற்றம்செய்தவர்களை அதற்கு பதில் சொல்ல வைப்பதற்குரிய நம்பத்தகுந்த வழிமுறை அல்ல. அதற்கு கொடுக்கப்பட்ட பணியிலும் அதிகாரங்களிலும் நிறைய தவறுகள் உள்ளன. தேசிய விசாரணை

ஆணையங்களுக்கு உரிய சர்வதேச தரத்தில் அது செயலட்டிருக்கவும் இல்லை[2]. நீதியை கிடைக்கச்செய்வதில், உண்மையை நிலைநாட்டுவதில், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் தேடித் தருவதில் உள்ளாட்டளவிலான இந்த வழிமுறையில் அமைப்பு ரீதியான கோளாறுகள் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி LLRCக்கு கடிதம் ஒன்றை சர்வதேச பொதுமன்னிப்பு சபை 2010 ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பியிருந்தது[3].

LLRC முன்பு வந்து சாட்சியம் வழங்குமாறு வந்திருந்த அழைப்பை சர்வதேச பொதுமன்னிப்பு சபை, ஹியுமன் ரைட்ஸ் வாட்ச், இண்டர்நேஷனல் கிரைஸிஸ் குரூப் போன்ற அமைப்புகள் ஒக்டோபர் 2010ல் நிராகரித்திருந்தன. ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் போதுமானதாக இல்லாமல் இருப்பது, ஆணையம் சுயாதீனமாக செயல்படுவதற்குரிய உத்திரவாதங்கள் போதிய அளவில் இல்லாமல் இருப்பது, சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்க போதிய ஏற்பாடுகள் இல்லாதிருப்பது உள்ளிட்ட LLRCயின் மோசமான குறைபாடுகளை இந்த அமைப்புகள் அச்சயம் சுட்டிக்காட்டியிருந்தன.[4] சுயாதீனமாக செயலபடக்கூடிய ஆணைக்குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல், சாட்சிகள் பாதுகாப்பு தொடர்பில் பலன் தரக்கூடிய அதிகாரங்கள் பெற்றிருத்தல், தேசிய சட்டங்களும் சர்வதேச சட்டங்களும் மீறப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் விசாரிப்பதற்கான அதிகாரம் பெற்றிருத்தல், குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்காமல் இருப்பதற்கான அரசாங்க நடவடிக்கைகள் கிடைக்கப்பெறுதல், பொலிசாரும் நீதிமன்றங்களும் பலன் தரக்கூடிய வகையிலும் பக்கச்சார்பின்றியும் சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற அம்சங்களுடன் நிஜமான, நம்பத்தகுந்த விசாரணை நடக்குமானால் அதன் முன் தோன்றி சாட்சியமளிக்கத் தயார் என இந்த அமைப்புகள் தெரிவித்திருந்தன.

LLRCயைக் கண்டு சர்வதேச சமூகம் ஏமாந்துவிடக்கூடாது என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது. இலங்கை அரசு பல தடவை நியமித்திருக்கின்ற புண்ணியம் இல்லாத உள்நாட்டு அளவிலான விசாரணைக் குழுக்களில் ஒன்றுதான் இதுவும். இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பாரும் குறிப்பாக இறுதி மாதங்களில் செய்ததாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பிற குற்றங்களால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு LLRCயின் பயனாக நீதி கிடைக்கும், உண்மை நிலைநாட்டப்படும், பரிகாரம் கிடைக்கும் என்று சர்வதேச சமூகம் நம்பிக்கொண்டிருக்கக்கூடாது.

சுயாதீனமான, சர்வதேச மட்டத்திலான விசாரணை ஒன்றை ஐ.நா.மன்றம் உடனடியாக அமைக்க வேண்டும் எஅ சர்வதேச பொதுமன்னிப்பு சபை கோருகிறது. அப்படி ஒரு வழிமுறை கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன. (1) சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றம் செய்தவர்கள் அவற்றுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற உலகளாவிய கொள்கையை நிலைநாட்டுவது, சர்வதேச சட்டங்களை துச்சமாக நினைத்து மீறும் இலங்கையின் முயற்சி மற்ற நாடுகளுக்கு ஒரு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதைத் தடுப்பது; (2) உள்நாட்டு அமைப்புகள் பக்கச்சார்புடையவை என்று பரவலாக கருத்து உள்ள நிலையில்நடுநிலையான வெளியார் அமைப்பு

விசாரிப்பதன் மூலம் பக்கச்சார்பின்றி விசாரிக்கப்பட்ட திருப்தி மக்களுக்கு கிடைக்கும். சமூக நல்லிணக்கம் உருவாவதற்கு அது உதவும். விடுதலைப் புலிகள், அரச படைகள், இவ்விருதரப்பாருடன் சேர்ந்து செயல்பட்டவர்கள் என அனைத்து தரப்பும் செய்த குற்றங்களை விசாரித்து உண்மையை வெளிக்கொணர்ந்து நீதி கிடைக்கச் செய்ய சர்வதேச அமைப்பினால் உதவ முடியும்.

LLRC நடவடிக்கைகளில் காணப்படும் பல கோளாறுகளையும் அதன் தோல்விகளையும் சர்வதேச சமூகத்தின் இந்த அறிக்கை அராய்கிறது. போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ள பிற குற்றங்கள் என்று எல்லா விதமான குற்றங்களும் அடையாளம் காணப்பட்டு விசாரிக்கப்படுவதில் LLRC அக்கரையின்றி இருப்பது, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் பொதுமான அளவில் இருக்கும் பட்சத்தில் சந்தேக நபர்களை சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, போதிய அதிகாரம் உடைய நீதிமன்றங்களில் விசாரித்து சட்ட ரீதியில் அவர்களை தண்டிப்பதற்கு LLRC போதிய முயற்சி செய்யாமல் இருப்பது போன்ற விடயங்களை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆராய்கிறது.

LLRC வெளியிட்ட விபரப் பதிவுகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆராய்ந்தது. LLRC விசாரணைகளின்போது மோசமான மீறல்கள் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் வெளிவந்திருந்தன (மருத்துவமனைகள் போன்ற பொதுமக்கள் இருக்கக்கூடிய இடங்கள் பரவலான ஷெல் தாக்குதலுக்கு உள்ளானது, சட்டவிரோத ஆட்கொலைகள், பலவந்தமாக ஆட்கள் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போனது போன்ற சம்பவங்கள் வெளிவந்திருந்தன) என்றாலும், அவை தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தவறியுள்ளனர்.

- குற்றம் இழைத்தவர்களை தனித்தனியாக அடையாளம் காட்டக்கூடிய சாட்சி வாக்கு மூலங்கள் இருந்தும் அவற்றை முறையாக விசாரிக்க LLRC தவறியது. விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லது இராணுவத்தோடு சேர்ந்து செயல்படும் ஆயுதக் குழுக்கள் போன்றவற்றின் உறுப்பினர்கள் ஆகியவற்றின் மீதான குறிப்பாக அரச படை உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அது தவறிவிட்டது.

- அச்சுறுத்தல்கள் மற்றும் பழிவாங்கள்களில் இருந்து சாட்சிகளைக் காப்பாற்ற எவ்வித முயற்சியையும் LLRC எடுக்கவில்லை.

- அரச படையினர் மற்றும் அவர்களோடு சேர்ந்து வேலைசெய்யும் ஆயுதக் குழுகள் செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கத்தினரையும் அரசாங்க ஆதரவு சாட்சிகளையும் போதுமான அளவில் விசாரிக்க LLRC தவறியுள்ளது.

- குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் நோக்கிலான பரிந்துரைகள் எதனையும் இதுநாள்வரை LLRC செய்திருக்கவில்லை.

LLRC செயற்பாடுகள் அனைத்திலுமே, சாட்சிகளை மேம்போக்காக கையாளும் ஒரு வழிமுறையையே ஆணையாளர்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர். தவிர உண்மையை நிலைநாட்டுவதில் அவர்கள் அக்கறை காட்டாத காரணத்தினாலும் சாட்சிகள் தந்த துப்புகளை மேற்கொண்டு விசாரிக்கத் தவறியதாலும், குற்றவாளிகளை தமது காரியங்களுக்கு பதில் சொல்ல வைப்பது தொடர்பில் LLRCயின் பதிவுகள் அர்த்தமுள்ள பங்களிப்பு வழங்கும் என்பதற்கு வாய்ப்பு இல்லை. இலங்கையின் பாதுகாப்பு படைகளும் விடுதலைப் புலிகளும் படு மோசமான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதற்கான தகவல்கள் இருந்தும், அவற்றை விசாரிப்பதற்கான கடமை அதிகாரிகளுக்கு உள்ளது என்றிருந்தும் அவற்றை LLRC ஒழுங்காக விசாரிக்கத் தவறியுள்ளது. மேலும் இலங்கையில் குற்றவாளிகள் தொடர்ந்தும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து வருகின்ற ஒரு சூழலில் LLRC விளைவாக அந்நிலை மாறும் என்பதற்கு வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

செய்த காரியத்துக்கு பதில் சொல்ல நேருதல் என்ற விஷயத்தில் இலங்கை மோசமான இடத்திலேதான் இருக்கிறது என்பதை இலங்கைக்கு உள்ளும் வெளியிலும் உள்ள நோக்கர்கள் ஒப்புக்கொள்கின்றனர். LLRCக்கு வழங்கப்பட்ட பணியும் அதிகாரமும் தெளிவில்லாமல் உள்ளதென்றும், அதற்கு போதிய அளவு சுதந்திரம் இல்லையென்றும், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் இல்லையென்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனாலும் பொறுப்பேற்கும் தன்மையை ஓரளவிலாவது கொண்டுவந்து, முடங்கிப்போயுள்ள நாட்டின் நல்லிணக்க நடவடிக்கைக்கு சிறிதளவு ஊக்கம் தர LLRC உதவும் என்று கூறும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர். இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய வலுவான அரசியல் பெரும்பான்மையின் காரணமாகவும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவும் LLRCபோல் இதனைச் செய்ய முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அந்த மனோதிடத்தை LLRCக்கு வருமா என்பது தெளிவில்லாமல் இருக்கிறது.

LLRCபோல் போர்க்குற்றங்களையெல்லாம் விசாரித்து பரிகாரம் வழங்க முடியாது என்றே இதுவரை நடந்துள்ள அனைத்து விஷயங்களும் அமைந்திருக்கின்றன. அப்படியிருக்க LLRC ஒரு நம்பத்தகுந்த உள்நாட்டளவிலான விசாரணை வழிமுறை - போர்க்குற்றங்கள் போன்ற மோசமான விதிமீறல்களையும் அது ஒழுங்காக விசாரித்து பரிகாரம் வழங்கும் என்று சர்வதேச கொள்கை வகுப்பாளர்கள் கருதி வருவார்களேயானால்,  இலங்கையில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதிலும், நீதியை நிலைநாட்டுவதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் ஆபத்துமிக்க தாமதம் ஏற்படுவதற்கு அவர்களும் காரணமாய் இருந்தார்கள் என்ற சூழல் உருவாகிவிடும். இலங்கையில் உண்மையான நோக்கங்களோடு முன்னெடுக்கப்படும் உள்நாட்டு விசாரணை வழிமுறை வந்து அதனை உக்குவிக்கும் வகையில் மேலதிக  ஐ.நா. விசாரணைகள் நடத்தப்பட்டால்தான் இலங்கையில் நிஜமான நல்லிணக்கம் உருவாக முடியும். அதைவிட்டு இலங்கை அரசாங்கம் நடத்துகின்ற இந்த கண்ணாமூச்சி ஆட்டத்துக்கு சர்வதேச சமூகம் ஆட்படும் என்றால், அது முன் அனுபவம் இருந்தும் கோட்டை விட்ட விடயமாய் போய்விடும். இலங்கையின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த

பல்லாயிரக்கணக்கானோர் எதிர்கொண்டுவரும் உரிமை மீறல்களை புறந்தள்ளியதாக ஆகிவிடும்.

## சர்வதேச விசாரணை வழிமுறை வேண்டும் என்ற கோரிக்கைகளின் நிலை

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் நடந்த விஷயங்களை சர்வதேச சமூகத்தின் பார்வையிலிருந்து மறைத்துவிட வேண்டும் என இலங்கை அரசாங்கம் முயன்றிருந்தது என்றாலும், அனைத்து தரப்பினரும் செய்திருந்த அட்டூழியங்களின் கோரம் பற்றி தகவல்கள் வெளியாகவே செய்தன. வெளிவந்த தகவல்களின் தீவிரம் உணர்ந்து சண்டை முடிந்த உடனேயே மே 2009ல் ஐ.நா. தலைமைச் செயலர் பான் கீ மூன் இலங்கை சென்றிருந்தார். அந்த பயணத்தின் முடிவில் ஐ.நா. தலைமைச் செயலரும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருந்தனர். 23 மே 2009 வெளியான அந்த அறிக்கையில் "சர்வதேச மனித உரிமை சட்டங்களும் மனிதாபிமான சட்டங்களும் மீறப்பட்ட சம்பவங்களில் அவற்றுக்கு காரணமானவர்கள் சட்டத்துக்கு பதில் சொல்ல வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. தலைமைச் செயலர் வலியுறுத்தியிருந்தார்." "பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கும்" என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வாக்குறுதி அளித்திருந்தார். "மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதிலும் பேணி முன்னெடுக்கப்படுவதிலும், சர்வதேச மனித உரிமை தர அளவுகோல்களுக்கு அமைய நடந்துகொள்வதிலும், சர்வதெச சட்டங்களின் கீழ் தனக்குள்ள கடப்பாடுகளை பூர்த்தி செய்வதிலும் இலங்கை வலுவான அக்கறை காட்டும்"[5] என்று அந்த அறிக்கையில் ஜனாதிபதி ராஜபக்ஷ வலியுறுத்தியிருந்தார்.

அந்த உறுதியேற்றலுக்கு அமைய, இலங்கையில் விதிமீறல்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்தார். மர்ஸூகி தருஸ்மான் (இந்தோனேஷியா) இக்குழுவின் தலைவர் ஆவார். ஸ்டீவன் ரட்னர் (அமெரிக்கா), யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர். இந்த நிபுணர் குழு தங்களது ஆய்வறிக்கையை 12 ஏப்ரல் 2011 அன்று பான் கீ மூன் அவர்களிடம் சமர்ப்பித்திருந்தது. "நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவை நிரூபிக்கப்படும் பட்சத்தில், இலங்கை அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் பரவலான அளவில் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் மோசமாக மீறப்பட்டுள்ளன என்பதன் அறிகுறியாக இவை அமையும். இவ்விரு தரப்பார் மீதும் தெரிவிக்கப்படும் சில நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் போர்க் குற்றங்களாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் அமையக்கூடியவை."[6]

"சுயாதீனமான சர்வதேச விசாரணை வழிமுறை ஒன்றை உடனடியாக அமைக்க ஐ.நா. தலைமைச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் இந்த நிபுணர் குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்த விசாரணை வழிமுறை பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது:

(1) குற்றச்செயல்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான உள்நாட்டளவிலான வழிமுறையை எந்த அளவுக்கு ஒழுங்காக இலங்கை அரசு செய்துவருகிறது என்பதை கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டும். விதிமீறல் குற்றச்சாட்டுகள் நிஜமாக விசாரிக்கப்படுகின்றனவா என்பதையும் அவதானிக்க வேண்டும். கண்காணிப்பில் தெரியவந்த விபரங்களை ஐ.நா. தலைமைச் செயலரிடம் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒருமுறை தெரிவித்துவர வேண்டும்.

(2) உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை சுயாதீனமாக விசாரிக்க வேண்டும், நிஜமானகவும் பலன் தரும் வகையிலும் நடத்தப்படும் உள்நாட்டளவிலான விசாரணைகளுக்கு இந்த சுயாதீன விசாரணை மதிப்பளிக்க வேண்டும்.

(3) யுத்தத்தின் கடைசி கட்டங்களில் நடந்த சம்பவங்களுக்கு காரணமானவர்கள் தொடர்பில் இந்த விசாரணைகளில் வெளிவரும் எதிர்காலத்தில் பயன்படக்கூடிய தகவல்களை சேகரிக்கவும், பத்திரப்படுத்திவைக்கவும் வேண்டும். நிபுணர் குழு சேகரித்த தகவல்களும், ஐநாவின் கட்டமைப்பில் உள்ள பிற பிரிவுகளால் சேகரிக்கபட்ட தகவல்களும் இவ்வாறு பத்திரப்படுத்தப்பட வேண்டும்.[7]

25 ஏப்ரல் 2011 அன்று, பான் கீ மூன் அவர்கள் இந்த நிபுணர் குழு அறிக்கையை வெளியிட்டார். சுயாதீனமான சர்வதேச அளவிலான பொறுப்பேற்க வைக்கும் வழிமுறை ஒன்றை அமைக்க ஐ.நா. தலைமைச் செயலருக்கு அதிகாரம் உள்ளது என்று சட்ட நிபுணர்கள் கருத்து கூறுகிறார்கள் என்றாலும், அப்படி ஒரு வழிமுறையை அமைக்க தனக்கு அதிகாரம் இல்லை என்று கூறியிருந்தார்.[8] ஐ.நா. பாதுகாப்பு சபை அல்லது ஐ.நா. மனித உரிமை சபையின் அனுமதி தனக்கு கிடைப்பதற்காக தான் காத்திருக்கப் போவதாக அவர் குறிப்புணர்த்தியிருந்தார். ஆனால், ஆகஸ்ட் 2011 வரையில் இந்த நிபுணர் குழு அறிக்கயை மனித உரிமைகள் சபையிடம் ஐ.நா. தலைமைச் செயலர் உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்திருக்கவில்லை. நிபுணர் குழுவின் அறிக்கையைப் பெற்று அடுத்த நாள் அதாவது 13 ஏப்ரல் அன்றே இலங்கையின் வெளியுறவு அமைச்சு அந்த அறிக்கையை நிராகரிப்பதாக பதில் தந்திருந்தது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவற்றை ஆழமாக பரிசீலிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டிருந்தாலும் அதனை தாங்கள் நிராகரிப்பதாக அது கூறியிருந்தது.

இந்த நிபுணர் குழுவின் முடிவுகளைப் புறந்தள்ளுவதற்கான ராஜீய நடவடிக்கைகளில் இலங்கை அதிகாரிகள் இறங்கியிருந்தனர். அப்போது விவாதங்களில் அவர்கள் அதிகம் பயன்படுத்திய வாதம் LLRCதான். அது ஒரு முழு அதிகாரம் படைத்த விசாரணை வழிமுறை என்று இலங்கை அதிகாரிகள் வருணித்திருந்தனர். ஆனால் கிடைக்கின்ற ஆதாரங்கள் என்னவோ அதற்கு நேர் எதிரானவையாகவே இருக்கின்றன.

துஷ்பிரயோகம் தொடர்பான மோசமான குற்றச்சாட்டுகளுக்கு பரிகாரம் தேடவும், குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து வரும் நிலையை முடிவுக்கு

கொண்டுவரவும் தேவையான அரசியல் மனோதிடம் இலங்கைக்கு இல்லை என்றே சரித்திரம் சொல்கிறது. ஆயுத மோதல்களின் இறுதிக் கட்டங்களில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும், மனிதாபிமான விதிகளையும் மீறியதாக குற்றம்சாட்டப்படும் அரசாங்கத் தரப்பினரை அடையாளம் காணக்கூட இலங்கை முயற்சி செய்திருக்கவில்லை. அப்படியிருக்க நீதி கிடைக்க வேண்டும் என்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அது செய்யும் என்று எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாது. மேலும், 2008ல் மேற்கொள்ளப்பட்ட யுனிவர்சல் பிரியாடிக் ரெவியூ என்ற மனிதாபிமான சூழ்நிலை தொடர்பான ஆய்வின் பரிந்துரைகளைக் இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்திருந்தது. சர்வதேச மனித உரிமை சட்டங்களையும் மனிதாபிமான சட்டங்களையும் பல்வேறு வகைகளிலும் மீறியிருந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், உரிய தண்டனை வழங்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என இலங்கை தெரிவித்திருந்த வாக்குறுதியைக் காப்பாற்ற அது எந்த முயற்சியும் செய்திருக்கவில்லை.

சர்வதேச சட்டங்களின் கீழ் தனக்குள்ள கடப்பாடுகளைக் கடைப்பிடிக்க இலங்கை மறுத்துவருகிறது. யுத்தகாலத்தில் நடந்த மோசமான விதிமீறல்கள் பற்றிய புதிய தடயங்கள் வெளியாகிவரும் நிலையில், இலங்கையின் போக்கு சகித்துக்கொள்ள முடியாததாக மாறிவருகிறது. இவற்றில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய புதிய தடயம் என்பது, ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து இயங்கும் தொலைக்காட்சியான சானல் 4 ஒளிபரப்பிய ஓர் மணி நேர ஆவணப்படமான 'ஸ்ரீலங்காஸ் கில்லிங் ஃபீல்ட்ஸ்' ஆகும். அந்த ஆவணப்படத்தில் தொழில் ரீதியாக எடுக்கப்படாத பல யுத்த களக் காட்சிகள், கைத்தொலைபேசியில் பதிவுசெய்யப்பட்ட வீடியோக்கள் இடம்பெற்றிருந்தன. போர்க்குற்றங்களாகவும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் அமையக்கூடிய பல குற்றங்களை யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பும் செய்திருந்தமைக்கான தெளிவான ஆதாரமாக இந்த வீடியோக்கள் உள்ளன. இதனைக் கண்டு பல நாடுகள் குறிப்பாக இலங்கையின் தோழமை நாடுகளான இந்தியாவும் அமெரிக்காவும்கூட, இலங்கை பிடிவாதமாக இருப்பது குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன. குற்றச்செயல்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பிலும், நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டுவருவது தொடர்பிலும், நிஜமான வலுவான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்காதவரை, சர்வதேச அளவில் ஒரு விசாரணை வழிமுறை வேண்டும் என்று எழும் குரல்களுக்கு தாம் ஆதரவு தருவோம் என்று இந்த நாடுகள் கூறியிருந்தன.

LLRC என்பது அப்படி ஒரு நிஜமான வலுவான விசாரணை வழிமுறை அல்ல என்று இந்த அறிக்கையின் ஊடாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை வாதிடுகிறது. அதனை உணர்ந்து, ஐ.நா.மன்றம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச அளவிலான விசாரணை வழிமுறை ஒன்றை அமைக்க தலைமைச் செயலர் பான் கீ மூனுக்கு அதிகாரம் இருக்கிறது என்றே நாங்கள் நம்புகிறோம். அதேநேரம் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்கச் செய்ய பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை வழிமுறை வேண்டும் என்ற ஐ.நா.தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய பரிந்துரைக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையும் மனித உரிமைகள் சபையும் முழு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

- மனித உரிமைகள் சபை, பாதுகாப்பு சபை, சம்பந்தப்பட்ட பிற ஐ.நா. நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஐ.நா.தலைமைச் செயலர் சேர்ந்து செயலாற்றி ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். செய்த காரியங்களுக்கு பொறுப்பு ஏற்க வேண்டிய நிலையை இலங்கையில் கொண்டு வருவதற்கு இது மிகவும் அவசியம்.

- இலங்கைக்கான ஒரு சுயாதீன சர்வதேச விசாரணையை ஐ.நா.மன்றம் உடனடியாக ஆரம்பிப்பதற்கு அதன் உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆதரவு வழங்க வேண்டும். மேலும், இலங்கையில் போர்க் குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் செய்த்வர்களாக சந்தேகிக்கப்படுவோரை விசாரித்து அவர்கள் மீது சர்வதேச சட்ட விதிக்ளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கின்ற பொதுவான பொறுப்பில் உறுப்பு நாடுகள் தத்தமது பங்கை நிறைவேற்ற வேண்டும்.

## பின்னணி

இலங்கையில் குற்றமிழைத்தவர்கள் அவற்றுக்கு பொறுப்பேற்பது தொடர்பான பிரச்சினைகளில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.தலைமைச் செயலர் பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமிக்கப்போவதாக அறிவித்த பின்னர்தான் மே 2010ல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை நியமித்திருந்தார். நிபுணர் குழு நியமிக்கும் நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் எதிர்த்திருந்தது. இலங்கையில் மே 2009ல் முடிவுக்கு வந்த யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில்போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றை அரச படையினரும் விடுதலைப் புலிகளும் செய்திருக்கலாம் என்று பரவலாகவும் நம்பத்தகுந்த வகையிலாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்ததன் எதிரொலியாக தலைமைச் செயலர் இந்த நிபுணர் குழுவை நியமித்திருந்தார்.

பொறுப்பேற்கச் செய்வது தொடர்பான ஒரு பலன் அளிக்கக்கூடிய உள்நாட்டு வழிமுறை இந்த LLRC ஆணைக்குழு என்று இலங்கை அரசாங்கம் அண்மைய காலங்களில் பிரச்சாரம் செய்துவருகிறது. குற்றச்சாட்டுகளை கையாளுவதற்கான வழிமுறை இந்த ஆணைக்குழுதான் என அது தெரிவித்துவருகிறது. சர்வதேச அளவிலான சுயாதீன விசாரணை வேண்டும் என நிபுணர் குழு ஏப்ரலில் அளித்த பரிந்துரைக்கு எதிரான தமது வாதத்தில் முக்கிய கருவியாக அவர்கள் பயன்படுத்துவது இந்த LLRC யைத்தான்.\

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் உருவாக காரணமாக இருந்த சரித்திரத்தை திரும்பிப் பார்த்து எதிர்காலத்தில் அப்படியான மோதல்கள் ஏற்படாமல் இருப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதுதான் LLRC ஆணைக்குழுவின் முக்கிய பணியாக இருக்கிறது. 21 பிப்ரவரி 2002க்கும் 19 மே 2009க்கும் இடைப்பட காலகட்டத்தில் நடந்த பின்வரும் விவகாரங்களை விசாரித்து தகவல் தரும் பணி"

ஆணையாளர்களுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷவால் வழங்கப்படுவதாக LLRC க்கு கொடுக்கப்பட்ட அதிகார உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 21 பிப்ரவரி 2002ல் அமலுக்கு வந்த போர்நிறுத்தம் முறிந்து போவதற்கு வழிவகுத்த சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள், போர்நிறுத்தம் முறிந்ததிலிருந்து 19 மே 2009 வரையிலான காலப்பகுதியில் நடந்த சம்பவங்களின் வரிசை;

2. எந்த ஒரு தனிப்பட்ட மனிதருக்கோ, குழுவுக்கோ அல்லது அமைப்புக்கோ இந்த விஷயத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பு இருக்கிறதா என்பது;

3. அந்த சம்பவங்ககளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள், கரிசனை கொள்ள வேண்டிய விடயங்கள். எதிர்காலத்தில் அப்படியான விஷயங்கள் மீண்டும் நடக்காமல் இருப்பதை உறுதிசெய்தல்;

4. இந்த சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்தம் குடும்பத்தினர், வாரிசுகள் போன்றோரின் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு கையாளப்பட வேண்டிய வழிமுறைகள். அவ்வழிமுறைகளை செயல்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள்;

5. எதிர்காலத்தில் இப்படியான பாதிப்புகள் வராமல் தடுப்பதற்கும், தேசிய ஒருமைப்பாட்டை முன்னேற்றுவதற்கும், சமூகங்கள் இடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கும் தேவையான அமைப்பு ரீதியான நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் சட்ட இயற்றல் நடவடிக்கைகள். தவிர இந்த உத்தரவின் கீழ் விசாரிக்கப்பட்ட வேறு விடயங்கள் தொடர்பாக வேறு பரிந்துரைகளை வழங்குதல்....[9]

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் செய்வதற்கோ அல்லது இக்காரியங்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கோ LLRCக்கு வெளிப்படையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பில் இந்த விஷயங்ளுக்கும் இடம் இருக்கும் வகையில் LLRC அவற்றை அர்த்தப்படுத்தவோ நடைமுறைப்படுத்தவோ இல்லை. ஆணையத்தின் உறுப்பினர்கள் யார் என்று கருதும் பட்சத்தில் இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்பது விளங்கும். LLRCயின் தலைவராக இருப்பவர் இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர். விசாரணைகளுக்கும், மிகவும் முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகளில் நடவடிக்கை எடுப்பதற்கும் தனது பதவிக் காலம் முழுக்க தடையாய் இருந்தவர் என்று இவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. குறிப்பாக 2006 ஜனவரியில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் இலங்கை பாதுகாப்புப் படையினரால், சட்டத்துக்கு

அப்பாற்பட்ட தண்டனை என்ற பாணியில் கொல்லப்பட்ட சம்பவத்தில் (திருகோணமலை ஐவர் சம்பவம் என்று பொதுவாக சொல்லப்படும் விடயம்)[10] சட்ட நடவடிக்கைகளுக்கு இவர் தடையாக இருந்ததாக சொல்லப்படுகிறது.

LLRCயின் விசாரணைகள் ஆகஸ்ட் 2010ல் கொழும்பில் ஆரம்பமாகியிருந்தன. கொழும்பில் நடந்த விசாரணையில் அரசு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மத குருமார்கள், பிற முன்னணிப் பிரமுகர்கள் போன்றோர் தோன்றி வாக்குமூலம் அளித்திருந்தனர். 2002ல் கொண்டுவரப்பட்ட போர்நிறுத்தத்திற்கு ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன, நாட்டில் நல்லிணக்கத்தைக் கொண்டுவருவது எப்படி என்பது போன்ற கேள்விகளுக்கு அவர்களிடம் கருத்துகள் பெறப்பட்டிருந்தன. கொழும்பில் மொத்தத்தில் 140 பேரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன. அதில் பலர் சொல்லப்போனால் பெரும்பான்மையானோர் தற்போதைய அரசு மற்றும் அவற்றின் கொள்கைகளுடைய ஆதரவாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர். ஒரு சிலர்தான் அரசாங்கத்தை விமர்சிக்கக்கூடியவர்களாக கருதப்படுபவர்கள். கொழும்பில் நடந்த விசாரணையில் வாக்குமூலம் அளித்தவர்களில் பெரும்பான்மையானோர் சிங்களப் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள், சுமார் முப்பது பேர் தமிழர்கள், ஐந்து பேர் மட்டுமே முஸ்லிம்கள்.

நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் LLRC தனது விசாரணைகளை நடத்தியிருந்தது, யுத்தத்தால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் இவற்றில் வாக்குமூலம் அளித்திருந்தனர்.

LLRC கொடுக்கப்பட்டிருந்த விசாரணைக் காலம் இரண்டு முறை நீட்டிக்கப்பட்டிருந்தது. 2011 மே மாத மையப் பகுதியில், ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதாக இருந்தது. ஆனால் LLRC ஆறு மாத காலம் கூடுதல் அவகாசம் கோருவதாக ஊடகச் செய்திகள் சுட்டிக்காட்டிருந்தன. அந்த நீட்டிப்பை வழங்க ஜனாதிபதி ராஜபக்ஷ தயாராக இருப்பதாகவும் தெரிந்தது. தற்போது நவம்பர் 2011ல் LLRC தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் வழங்கும் என்று உள்ளது. 2009ல் இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இருதரப்பாருமே போர்க் குற்றங்களைச் செய்ததாக குற்றம்சாட்டப்படுவது தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு இடம்தராமல் வாதிட இலங்கை அரசுக்கு நேரம் வாங்கித் தருவதற்கு உதவும் வகையில் இந்த நீட்டிப்பு அமைந்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தை அவதானிப்பதிலும் அங்குள்ள பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதிலும் இருபது வருடங்களுக்கும் மேலாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஈடுபட்டுவருகிறது. இலங்கையில் கடந்த காலங்களில் பல தேசிய விசாரணை ஆணையங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் யதார்த்தத்தில் நீதி வழங்கவும், உண்மையை வெளிக்கொண்டுவரவும், மனித

உரிமை மீறல்களை சந்தித்தவர்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்கவும் அவை தவறி வந்துள்ளன என்பதை நாங்கள் அறிவோம்[11]. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருடன் சர்வதேச பொதுமன்னிப்பு சபை செய்திருந்த வேலைகள், இலங்கையில் சில துஷ்பிரயோகங்கள் பல ஆண்டுகளாக ஒரே பாணியில் மீண்டும் மீண்டும் நடந்துவருகின்றன என்பதற்கான எங்களுடைய ஆவணங்கள் போன்றவற்றை வைத்துப் பார்க்கையில் நீதி கிடைக்கச் செய்யாமலும், உண்மையை வெளிக்கொண்டுவராமலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்காமலும் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவது சாத்தியமல்ல என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இவற்றில் எந்த ஒரு விஷயத்தையும் வெற்றிகரமாக செய்வதற்கான வல்லமை LLRCக்கு இல்லை.

மற்றவர்கள் பார்க்கக்கூடிய வகையில் உள்ள LLRCயின் பதிவுகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆராய்ந்து மதிப்பீடு செய்ததில், அதுவும் ஐ.நா. நிபுணர் குழுவினர் வந்த முடிவுக்குத்தான் வரமுடிகிறது. பின்வரும் விஷயங்களை நிபுணர் குழு தீர்மானித்திருந்தது:

படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை கடந்த கால நிகழ்வுகள் - அதாவது 2002ல் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து 2009ல் யுத்தம் முடிவுக்கு வந்த காலகட்டம் வரையிலான காலகட்டம் தொடர்பான தமது கொள்கையின் முக்கிய அம்சமாக அரசாங்கம் காட்டியிருந்தது. இலங்கையின் இனப்பிரச்சினை மோதல்கள் தொடர்பான தேசிய மட்டத்திலான கலந்துரையாடலின் துவக்கமாக LLRC ஒரு பயனுள்ள சந்தர்ப்பத்தை பிரதிபலித்தது உண்மைதான். நிறைய பேர், குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் தானாக முன்வந்து இந்த ஆணையத்தில் பேசினார்கள் என்பதை வைத்துப் பார்க்கும்போது அப்படி ஒரு கலந்துரையாடலுக்கான அவசியம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனாலும் சுயாதினமாக, பக்கச்சார்பின்றி செயல்படுதல் போன்ற முக்கிய தர அளவுகோல்களைப் பூர்த்தி செய்ய LLRC தவறிவிட்டது.அதன் ஆணையாளர்களாக இருப்பவர்களின் பின்னணி, அவர்களில் சிலரது சுய நலனுக்கும், ஆணையத்தின் நோக்கத்துக்கும் இடையேயுள்ள ஆழமான முரண்பாடுகள் போன்றவை இதற்குக் காரணம். LLRC ஆணையத்துக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மற்றும் பணிகள், அது செயல்பட்ட விதம், இப்போதுவரை அது கையாண்டுவரும் வழிமுறை எல்லாம், சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களின் மோசமான மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்குரியனவாக இல்லை. பல வருட கால இனப் பிரச்சினையின் ஆணிவேராக அமைந்திருக்கக்கூடிய காரணிகளை ஆராயும் தன்மைகொண்டதாகவும் இல்லை. மாறாக இது யுத்தத்துக்கான அரசியல் பொறுப்பு என்று பரவலாகத் தெரிவிக்கப்படும் கற்பிதத்தின் மீதே கூடுதலான கவனம் செலுத்துகிறது. தவறு செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல், அவர்களை

செய்த காரியத்துக்கு பதில் சொல்ல வைத்தல் போன்றவற்றில் அரசாங்கம் முன்னிறுத்தும் பிழையான மற்றும் பாதியளவான வரையறையின் அங்கமாகத்தான் LLRC விளங்குகிறது. ஆணையம் இதுநாள் வரையில் செய்துள்ள பணிகளைப் பார்க்கும்போது ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் என்ன நடந்தது என்பதை நிஜமாகவே கண்டறியும் வேலையை செய்ததாகத் தெரியவில்லை. யுத்தத்தில் இருதரப்பாரும் செய்ததாக சொல்லப்படும் மோசமான உரிமை மீறல்களை பக்கச்சார்பின்றியும் முறைப்படியும் விசாரிக்கும் முயற்சியை அவர்கள் செய்ததாகவும் தெரியவில்லை. பாதிக்கப்பட்டவர்களை அவர்களது கண்ணியம் கெடாத வகையிலும் அவர்களுடைய பாதிப்புகளை புரிந்துகொள்ளும் வகையிலும் நடத்தியிருக்கவில்லை. சாட்சிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படும் நிலையில் இருந்தது என்றாலும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கியிருக்கவில்லை.

மொத்தத்தில், LLRC ஆழமான கோளாறுகள் உள்ளன. குற்றவாளிகளை செய்தகாரியத்துக்கு பதில் சொல்லவைப்பதில் பலன் தரும் வழிமுறை ஒன்றுக்கு அவசியமான சர்வதேச தரத்தில் இது இல்லை. இலங்கையின் ஜனாதிபதியும் ஐ.நா.பாதுகாப்பு செயலரும் வெளியிட்ட கூட்டறிக்கையில் பொறுப்பேற்க வைத்தல் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளை பூர்த்தி செய்வதாக அது இல்லை.[12]

## LLRCக்கு வழங்கப்பட்ட பலவீனமான அதிகாரவரம்பு, பணிவரம்பு

LLRCதான் சிறப்பான பொறுப்பேற்க வைத்தல் வழிமுறை நிலைநிறுத்த இலங்கை அரசாங்கம் இப்போது முயன்று வருகிறது என்றாலும், குற்றமிழைத்தவர்களை அதற்கு பதில் சொல்ல வைக்கும் முயற்சியில் LLRC ஈடுபடவில்லை என்பதை பதிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. ஜனாதிபதி ராஜபக்ஷ ஆணைக்குழுவுக்கு வழங்கிய பணிவரம்பு என்பது "21 பிப்ரவரி 2002ல் அமலுக்கு வந்த போர்நிறுத்தம் முறிந்து போவதற்கு வழிவகுத்த சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள், போர்நிறுத்தம் முறிந்ததிலிருந்து 19 மே 2009 வரையிலான காலப்பகுதியில் நடந்த சம்பவங்களின் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்தம் குடும்பத்தினர், வாரிசுகள் போன்றோரின் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு கையாளப்பட வேண்டிய வழிமுறைகளை" கண்டறிவதுதான். பாதிப்புகளை நிவர்த்தி செய்வது என்பதன் பொருள் என்ன என்பது இந்த பணிவரம்பில் விளக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் அரசியல் சாசனம் வழங்குகின்ற அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதற்காக நஷ்ட ஈடு பெறுவது சிரமம் என்றாலும், மனித உரிமை மீறல்களை அனுபவித்தவர்கள் நாட்டின் உச்சநீதிமன்றத்தை அணுகி நஷ்ட ஈடு பெறுவது என்பது நீதி பெறுவதை விட சுலபம் என்பதை கவனத்தில் கொள்வது முக்கியம். பாதிப்பு நிவர்த்தி என்று சொல்லப்படுவதன் அர்த்தம் அப்போதுதான் விளங்கும். இன்னொரு பக்கம் பார்க்கயில், சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமையக்கூடிய காரியங்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது

என்பது இலங்கையில் மிக மிக அரிதாகவே நடந்துள்ளது (இது பற்றி கீழே விரிவாகக் காண்போம்).

LLRCயைப் பொறுத்தவரையில், அதன் லட்சியம் என்பது "பாதிப்பு நிவர்த்தி" வழங்குதல் என்று ஜனாதிபதி தெளிவாக சொல்லியிருக்கிறார். ஆனால் அதன் பொருள் என்ன என்பது குறிப்பிட்டு வரையறுக்கப்படவில்லை. சட்டப்படி யார் பொறுப்பு என்று கண்டறிவதும் இதில் அடங்குமா என்பதும் தெளிவில்லாமல் இருக்கிறது.

## கொள்கைகளின் வரையறை

மனித உரிமைகளின் பாதுகாப்புக்கும் மற்றும் மேம்பாட்டுக்குமான கொள்கைத் தொகுயின் புதுப்பிக்கப்பட்ட வடிவத்தில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்கும் நிலையை மாற்றுதல் தொடர்பான பிரிவில் 8ஆம் ஷரத்து " நியாயாதிக்க எல்லைப் பிரச்சினைகள் வருவதைத் தவிர்க்க வேண்டுமாயின், விசாரணை ஆணையத்தின் பணி வரம்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். சிவில், குற்றவியல் மற்றும் நிர்வாக நீதிமன்றங்களின் பணிக்கு மாற்றாக செயல்படுவது விசாரணை ஆணையத்தின் நோக்கம் அல்ல என்ற கொள்கைக்கு அமைய அது செயல்பட வேண்டும்." ஆனால் LLRCயின் பணிவரம்பில் அப்படியான விஷயம் எதுவும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

"பின்னர் நீதி வழங்குதலில் பயன்படக்கூடிய தடயங்களை விசாரணை ஆணையங்கள் பத்திரமாக வைக்க முயல வேண்டும் என்று ஷரத்து எண் 8(e) கூறுகிறது. LLRC யின் வெளியிடப்பட்ட பதிவுகளைப் பார்க்கையில் அப்படிப் பாதுகாப்பதற்கான எந்த ஒரு முயற்சியையும் அது எடுத்ததாகத் தெரியவில்லை. மேலும், அரசாங்கத் தரப்பு பாதுகாப்பு படையினர் மீது குற்றவாளிகளாக ஆக்கக்கூடிய எந்த ஒரு தடயத்தையும் பெறுவதை தவிர்க்கவே LLRC அதிக ஆர்வம் காட்டியிருந்தது என்றும் தெரிகிறது. இவ்விவகாரம் கீழே விரிவாக அலசப்பட்டுள்ளது.[13]

பொறுப்பேற்கவைத்தல் வழிமுறையை வளர்ப்பதிலோ அதன் பணிவரம்பை அமைப்பதிலோ பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மக்கள் கருத்துகளை உள்வாங்க எந்த ஒரு முயற்சியை செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும் வருத்தத்துக்குரிய விடயமாகும்.[14]

LLRCயின் எந்த அளவில் செயல்படும் அது என்ன நடைமுறையைக் கடைப்பிடிக்கும் என்பது போன்ற விஷயங்களை ஆணையாளர்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டிய நிலை உருவானது. போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நியாயம்தான் என வெளிப்படையாகவே வாதிட்டிருந்த முன்னாள் அரசாங்க அதிகாரிகள், வேறு பல பொறுப்புகளில் அரசாங்கத்துக்காக வேலை

பார்த்திருந்தவர்கள் எல்லாம் ஆணையாளர்களாக இருக்கிறார்கள் எனும்போது இதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்த ஆணையத்தின் நியாயாதிக்க எல்லைகளை இவர்கள் மிகவும் குறுகலாக அர்த்தப்படுத்திவிட்டார்கள்.

LLRCயின் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்க்கையில், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் நீதி கிடைக்கச் செய்யும் பணியை ஜனாதிபதி தங்களுக்கு வழங்கியதாக ஆணையாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணிவரம்பை அர்த்தப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக இலங்கையின் இனப் பிரச்சினைக்கும் மோதலுக்குமான அடிப்படை காரணங்கள் பற்றி மக்கள் மற்றும் அதிகாரிகளின் கருத்தறியும் ஒரு சுற்றாய்வாகவே ஆணையாளர்கள் இதனை எடுத்துக்கொண்டுள்ளனர். 2002 ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்தம் முறிந்து போனதற்கான காரணங்கள் என்ன. அவற்றுக்கு யார் பொறுப்பு என்பனவற்றை கண்டுபிடிப்பதாக இவர்கள் தமது வேலையை அமைத்துக்கொண்டனர். (இந்த வேலை வேறு மனித உரிம மீறல்களுக்கு காரணமானவர்களை அடையாளம் காணுவது வேறூ என சர்வதேச பொதுமன்னிப்பு சபை இங்கே சுட்டிக்காட்டுகிறது.) இனமோதல் தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களை சாட்சியம் வழங்குவதற்காக இந்த ஆணையம் அழைத்திருந்தது. உதாரணத்துக்கு வீட்டு வசதி இல்லாதவர்களின் பிரச்சினை போன்றவர்களை செவிமடுத்தால் யதார்த்தமான தீர்வு வரும் என LLRC கருதியிருந்தது. ஆனால் ஆணையம் வந்து சாட்சியம் அளிக்கும் பெருஜ்பாலானோர் காணாமல் போன தமது உறவினரைத் தேடுபவர்களும், அதிகாரிகளால் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தம் குடும்பத்து உறுப்பினரின் விடுதலை கோருபவர்களும் ஆவர் என்று தெளிவானதை அடுத்து, தடுத்துவைக்கப்பட்டவர்கள் சம்பந்தமான வழக்குகளைத் தீர்ப்பதற்கும், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அவர்தம் உறவினர்கள் சென்று பார்ப்பதற்குரிய வசதிகளை மேம்படுத்துவதற்குமான யதார்த்த நடவடிக்கைகளை LLRC பரிந்துரைத்தது.

LLRC கொழும்பிலே ஆகஸ்ட் 11 அன்று தனது முதல் அமர்வை துவங்கியபோது தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிவரம்பு மற்றும் ஆணையத்தின் நோக்கம் ஆகியவை தொடர்பான தனது புரிதல் பற்றி ஆணையத்தின் தலைவரான சி.ஆர். டி சில்வா பின்வருமாறு விளக்கினார். சர்வதேச சட்டங்களை மீறியவர்களை சட்டத்துக்கு பதில் சொல்லவைத்தல் என்பது அந்தப் புரிதலில் இல்லை என்பதை கவனிக்கவும்.

... மேதகு ஜனாதிபதி அவர்கள் இந்த ஆணையத்தை நியமித்து அதற்கு கொடுத்துள்ள முதல் பணி என்பது 2002ல் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்தம் முறிந்துபோனமைக்கான அடிப்படைக் காரணங்களை அடையாளம் காண்பதும், அது முறிந்துபோனமைக்கு யார் யார் காரணம் எந்தெந்த அமைப்பு காரணம் என்பதை அடையாளம் காண்பதும் ஆகும்.

இரண்டாவதாக, எதிர்காலத்தில் இவ்வாறான விஷயங்கள் நடக்காமல் தடுக்க கடந்த கால அனுபவங்களில் இருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள் என்னென்ன என்று அடையாளம் காண்பது.

மூன்றாவதாகவும் மிக முக்கியமானதாகவும், இலங்கையில் தேசிய ஒருமைப்பாடும் பல்வேறு சமூகங்களிடையிலான நல்லிணக்கமும் ஏற்படுவதை உறுதிசெய்து, சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு புதிய யுகத்துக்கு நாட்டை இட்டுச் செல்வதற்கான வழிவகைகளை உருவாக்குவது.

...எமது விசாரணைகள் மற்றும் விவாதங்களின் முக்கியக் கருவாக மக்களே இருப்பார்கள். அதை மனதில் வைத்துதான் மக்களை வந்து வாக்குமூலம் அளிக்கச் சொல்லி நாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம். எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிவரம்பு மற்றும் அதிகாரவரம்புக்கு உட்பட்ட எந்த விஷயத்தையும் மக்கள் எங்களிடம் சொல்லலாம். மேலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் வந்து விசாரணை அமர்வுகளை நடத்த ஆணையம் தீர்மானித்துள்ளது. மக்களுக்கு தங்களுடைய கஷ்டங்கள் பற்றி வெளியில் சொல்ல சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவதும், கடந்த கால பிரச்சினைகள் முதல் போருக்குப் பின்னர் தற்சமயம் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் வரை அடையாளம் காண்பதே இதன் நோக்கம்.[15]

முந்தைய யுத்தப் பிரதேசத்தில் ஆணையம் மேற்கொண்ட முதல் அமர்வு என்பது வவுனியாவில் நடந்தது. அங்கு உரையாற்றிய ஆணையத்தின் தலைவர் மக்கள் "கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும்" என்று வலியுறுத்தியிருந்தார். குழந்தைகளின் கல்வி, மருத்துவ தேவைகள், குடியிருப்பு வசதி போன்றவற்றில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி சொல்லுங்கள் என்று அவர் கேட்டிருந்தார். மக்கள் தங்கள் "குறைகள்","சிரமங்கள்","அசௌகரியங்கள்" பற்றிச் சொல்லச் சொல்லி டி சில்வா ஊக்குவித்தார். ஆனால் மனித உரிமை மீறல்கள் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை (ஆனால் மற்றவர்கள் அது பற்றிப் பேசத்தான் செய்தனர்.) மேலும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது பற்றி அவர் எந்த உறுதிமொழியையும் வழங்கியிருக்கவில்லை.[16]

மன்னாரில் ஜனவரியில் நடந்த விசாரணை அமர்வின்போது வாக்குமூலம் அளித்த மன்னார் ஆயர் ராயப்பு ஜோசஃப் அப்பகுதி மக்கள் சந்தித்த பல்வேறு மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றிப் பேசியிருந்தார். பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனவர்கள், சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையில் கொல்லப்பட்டவர்கள் போன்றோர் அடங்கிய நூற்றுக்கணக்கானோரின் பட்டியலை அவர் ஆணையத்திடம் வழங்கியிருந்தார். இந்த துஷ்பிரயோகங்கள் நடந்திருப்பதை அரசாங்கம் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர் கோரினார். மேலும் "யுத்த காலம் முழுக்கவும் குறிப்பாக அதன் இறுதிக் கட்டங்களில் நடந்த விஷயங்ளின் நோக்கம் அது தொடர்பான உண்மைகள் பொதுவாக

ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்" என்று அவர் கூறியிருந்தார். இதற்கு பதிலளிப்பதாகப் பேசிய ஆணையத்தின் தலைவர், தடுப்புக்காவல், காணிப் பிரச்சினைகள், மொழி விவகாரம் போன்றவை தொடர்பில் ஆணையம் வழங்கும் இடைக்காலப் பரிந்துரைகள் பற்றி நெடுநேரம் விவாதித்தாரெ ஒழிய பேராயர் முன்வைத்த அரசபடையினர் செய்ததாக கூறப்படும் மோசமான மனித உரிமை குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள அவர் தவறிவிட்டார்.

சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆட்கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்றவற்றையும் LLRC விசாரிக்க வேண்டும் என மன்னாரில் கடந்த ஜனவரியில் சாட்சியம் அளித்த வேறொருவர் கோரியிருந்தார். எதேச்சதிகாரமாகத் தடுத்துவைக்கப்படுதல் பற்றிய தனது கவலைகளை அவர் வெளிப்படுத்தினார். LLRC வழங்கும் பரிந்துரைகளை அரசாங்கம் மதித்து நடக்குமா என்ற சந்தேகமும் அவநம்பிக்கையும் தொடர்ந்து மக்களிடையே காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். ஆனால் அவருக்கு பதிலளித்துப் பேசிய ஆணையாளர், "உங்களது உரை எங்களுக்கு உதவப்போவதில்லை. என்னென்ன குறை அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றி மட்டும்தான் தாங்கள் அறிய விரும்புகிறோம்." என்று கூறியிருந்தார்.[17]

ஆணையத்துக்கு வழங்கப்படுள்ள பணிவரம்பினை இந்த அளவுக்கு குறுகலாக ஆணையாளர்கள் அர்த்தப்படுத்தியதில் ஆச்சரியம் இல்லை. ஏனென்றால் போர்க்குற்ற குற்றச்சாட்டுகளில் அரசாங்கத்தின் செயல்களை வெளிப்படையாகவே நியாயப்படுத்திருந்த முன்னாள் அரசு ஊழியர்களும், வேறுபல பொறுப்புகளில் அரசாங்கத்தில் வேலை பார்த்திருந்தவர்களும்தான் ஆணையாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இதுநாள்வரையில் செய்திருக்கும் பணிகளை ஆராய்கையில், அவர்கள் மேற்கொண்டு எதனையும் செய்ய வாய்ப்பு இல்லை.

மேலும், LLRCயின் முன்பு தோன்றி சாட்சியம் வழங்கும் அனைவருக்கும் விசாரணை ஆணையங்கள் சட்டம் பிரிவு 14ன் பாதுகாப்பு வழங்கப்படுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். (இந்த ஆணையம் அமைக்கப்பட்டது அந்த சட்டத்தின் கீழ்தான்). சாட்சிகளுக்கு விசேட சட்ட விலக்குகளை இச்சட்டம் வழங்குகிறது. LLRCயின் முன்பு தோன்றி வாய்வழியாகவோ இல்லை எழுத்துமூலமாகவோ சாட்சியம் வழங்குபவர்கள் மீது, "சட்ட நடவடிக்கை அல்லது குற்றவியல் அல்லது சிவில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து" பாதுகாப்பு வழங்கப்படுவதாக பிரிவு 14 கூறுகிறது. ஆணையத்தின் முன்பு கொடுக்கப்பட்ட சாட்சியங்கள் எந்த ஒரு சட்ட நடவடிக்கையிலும் நீதிமன்ற நடவடிக்கையிலும் அதைச் சொன்னவருக்கு எதிராக பயன்படுத்தபடுவதையும் இந்த சட்டம் தடைசெய்கிறது.

ஆக பிரிவு எண் 14ழை பயன்படுத்தியதால், ஆணையத்தின் முன்பு தோன்றிய சாட்சிகள், அவர்கள் தெரிவித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துகின்ற வழிமுறைக்கு ஜனாதிபதி தடங்கல் ஏற்படுத்திவிட்டார்.

சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆட்கொலைகள், பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல் போதல் போன்ற சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமையக்கூடிய காரியங்களைச் செய்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிப்பதென்பது அனைத்து நாடுகளுக்கும் இருக்கின்ற கடப்பாடு ஆகும். அப்படிப்பட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கையிலிருந்து விலக்கு அளித்தால் அது உண்மையை அறிந்துகொள்வதிலும், நீதி பெறுவதிலும், நிவாரணம் பெறுவதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கின்ற உரிமையை மறுப்பதாகிவிடும். அவ்வாறு செய்வதற்கு சர்வதேச சட்டங்களும் தடை விதித்துள்ளன. உண்மை வெளிவருவதற்கும், குற்றச்செயல்களுக்கு பொறுப்பு யார் என்று இறுதியாக தீர்மானிக்கப்படுவதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு முழுமையான நிவாரணம் கிடைப்பதற்கும் தடையாக இருக்கும் இப்படிப்பட்ட மன்னிப்புகள், விலக்கு அளித்தல் போன்ற நடவடிக்கைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை எவ்வித பாரபட்சமும் இன்றி எப்போதும் எதிர்த்துவரவே செய்துள்ளது.

தவறுசெய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான ஒரு வழிமுறையாக நிச்சயம் தோல்வியடையவே செய்யும் என்ற சூழ்நிலையில்தான் LLRC வகுக்கப்பட்டும் ஆரம்பிக்கப்படும் இருந்தது. இலங்கையில் இதற்கு முன் வந்த விசாரணை ஆணையங்கள் எதுவுமே மனித உரிமை மீறல் தொடர்பில் நீதி வழங்குவதில் வெற்றிபெற்றதில்லை. காரணம் அதிகாரத்தில் உள்ளவர்கள் அதற்கு இடம் அளித்ததில்லை. அவ்வப்போது நியமிக்கபடும் இந்த விசாரணைக் ஆணையங்களில் வெளிவரும் துஷ்பிரயோக துபுத் தகவல்களை இலங்கையின் குற்றவியல் நீதித்துறை மேற்கொண்டு விசாரிக்க வேண்டும். ஆனால் அது எப்போதுமே பல மட்டங்களிலும் அரசியல் அழுத்தங்களுக்கு ஆட்படும் நிலையிலேயே உள்ளது. சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடுகளும் மோசமான அளவிலேயே இருந்துவருகின்றன.

இலங்கையில் கடந்த இருபது வருடங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் பெருமளவானவை விசாரிக்கப்படாமலேயேதான் இருந்துள்ளன. ஆகவே அவை நீதிமன்ற விசாரணைக்கு வருவதென்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படியே அது நீதிமன்றத்தின் முன்பு வந்தாலும் கிட்டத்தட்ட எல்லா வழக்கிலுமே எவர் ஒருவர் மீதும் குற்றத்தை உறுதிசெய்து தீர்ப்பு வந்ததில்லை. ஆதாரங்கள் போதாது என்று கூறி எதிராளிகள் குற்றமற்றவர் என்ற தீர்ப்புதான் அதிகமாக வரும். சாட்சிகளும் வாக்குமூலம் அளிக்க மறுத்துவிடுவார்கள், விசாரணை நடப்பது மீண்டும் மீண்டும் தாமதாமாகிக்கொண்டே போகும், முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகளில் கூட அரசு தரப்பு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிவிடும். போதுமான வளங்கள்

இல்லை, அமைப்பில் செயல்திறன் இல்லை என்பதால் ஏற்படுகின்ற பிரச்சினை இது என்று மட்டும் கூறிவிட முடியாது,(அதுவும் ஒரு பங்கில் பிரச்சினைதான் என்றாலும்) குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பதும் இதில் பிரச்சினைதான். இதற்கு முன்பாக அமைக்கப்பட்டு பலன் தராமல் போன வேறொரு விசாரணை ஆணையத்தின் கோளாறுகளை ஆராய்ந்த சர்வதேச பொதுமன்னிப்பு சபை 2009 ஜூனில் பின்வருமாறு முடிவு தெரிவித்திருந்தது.

> இலங்கையில் விசாரணை ஆணையங்கள் என்பன நீதி கிடைக்கச் செய்வதற்கான வழிமுறையாக எப்போதுமே பணியாற்றியதில்லை. எதிர்தரப்பினர் மீது பக்கச்சார்புடைய தாக்குதல்களை மேற்கொள்வதற்கும், மனித உரிமை மீறல்களில் அரசாங்கம் உடந்தையாக இருந்துள்ளது என்று வலுவான ஆதாரங்கள் கிடைத்துள்ளதால் எழுகின்ற விமர்சனங்களை திசைதிருப்புவதற்குமான ஒரு கருவியாகவே இலங்கையில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றன விசாரணை ஆணையங்கள் செயல்பட்டுவந்துள்ளன. நீதி பரிபாலனைக்கான இயல்பு கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு பார்க்கும் பட்சத்தில், உண்மையை வெளிக்கொணருவதற்கான ஒரு வழிமுறையாகவாவது இவை செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். யதார்த்தத்திலோ, ஒரு சில வழக்குகளில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பணத்தளவில் ஓரளவுக்கு நஷ்ட ஈடு ஆணையங்களின் விளைவாய் கிடைத்துள்ளன. ஆனால் வழக்கமான குற்றவியல் விசாரணைகள் தாமதப்படவே இவை வழிவகுத்துள்ளன. தடயங்கள் பயனற்றுப் போகவும், சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆபத்து அதிகரிக்கவுமே இவை இடம்தந்திருந்தன.[18]

## சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியமை

1989ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பலவந்தமாக கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனதாக புகார்கள் வந்துள்ளன. இதிலே பலவற்றை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பல விசாரணை ஆணையங்கள் விசாரித்திருக்கின்றன. இத்தனை ஆண்டுகளில் நூற்றுக்கணக்கானோர் மீது இலங்கையின் சட்டமா அதிபர் அலுவலகம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. ஆனால் அரசாங்க புள்ளிவிபரங்களின் பிரகாரமே, ஆட்கடத்தலுக்காகவும், சட்டவிரோத தடுத்துவைப்புக்காகவும் ( பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல்போது சாதாரணமாக உடன் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு இது) குற்றம்நிரூபிக்கப்பட்டிருப்பது வெறும் முப்பது பேர் மீதுதான். (சர்வதேச பொதுமன்னிப்பு சபை வெளியிட்ட இருபது ஆண்டுகால கண்துடைப்பு என்ற தலைப்பிலான ASA 370052009 ஆவணத்தில் இறுதிக் குறிப்பு எண் 20ல் இது பற்றிய கூடுதல் விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.) சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிந்தவரை, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல் போனது தொடர்பில்2007க்குப் பின்னர் இலங்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

சித்ரவதை செய்தல் மற்றும் பிற வகையில் கொடூரமாகவோ, மனிதத் தன்மையற்ற விதமாகவோ, இழிவாகவோ நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதலுக்கு எதிரான சட்டத்தின் (The CAT Act) முப்பது பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தும் மூன்று பேர் மீது மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது. இதில் கடைசியாக ஒருவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதென்பது 2007ல் நடந்தது. ஜூன் 2008 அளவில் பார்க்கையில் குற்றம்சாட்டப்பவர்களில் 17 பேர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். (சித்ரவதை செய்தல் மற்றும் பிற வகையில் கொடூரமாகவோ, மனிதத் தன்மையற்ற விதமாகவோ, இழிவாகவோ நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதல் *(CIDTP)* ஆகியவை இலங்கையில் நடந்துவரும் விதம் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் கிஷாலி பிண்டோ – ஜெயவர்த்தன தலைமையில் ஆராய்ந்து சித்ரவதைக்கு ஆளானோரின் புனர்வாழ்வுக்கான டென்மார்க்கிலுள்ளஆராய்ச்சி மையம் (RCT) 2009ல் வெளியிட்ட ஆவணத்தைப் பார்க்கவும்.)

சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிந்தவரை, இலங்கையில் பொதுமக்களைக் கொன்றமைக்காக பாதுகாப்புப் படையினர் தண்டிக்கப்பட்டது என்பது இரண்டு முறைதான் நடந்திருக்கிறது. ஒன்று கிரிஷாந்தி குமாரசாமி என்பவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லபட்டதோடு அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் கொல்லப்பட்ட சம்பவம். (சர்வதேச பொதுமன்னிப்பு சபை, கிரிஷாந்தி குமாரசாமிக்காக ஓர் அவசர நடவடிக்கை (ASA 222/96) என்ற தலைப்பில் 20 செப்டம்பர் 1996 வெளியிட்ட ஆவணத்தைப் பார்க்கவும்.) மற்ற சம்பவம் 1996ல் யாழ்ப்பாணம் கோண்டாவில்லில் 22 வயது யுவதியான வேலாயுதம் பிள்ளை ரஜினி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஆகும். ரஜினி வழக்கு அந்த அளவுக்கு பிரபலம் ஆகியிருக்கவில்லை. மார்ச் 2011ல் மூன்று சிப்பாய்களுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பை எதிர்த்து அவர்கள் மேல் முறையீடு செய்கிறார்கள்.

இலங்கையில் குற்றம்செய்தவர்கள் சட்டத்திலிருந்து தப்பித்துவருவது என்பது பல ஆண்டுகளாக நடந்துவருகிறது. உயர் அதிகாரிகள் பலர் இதன் விளைவாக தண்டனையிலிருந்து தப்பித்துள்ளனர். 1988ல் நடந்த பிரபல விஜெதாஸ லியனராச்சி கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார் மீது சதித் திட்டம் தீட்டியதாகவும், சட்டவிரோதமாக அடைத்துவைத்ததாகவும் குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது. ஆனால் 199ல் இவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகளே வழங்கப்பட்டிருந்தான். இந்த வழக்கு பின்னர் பட்டலந்த ஆணையத்தின் முன் 1995 கொண்டுவரப்பட்டது. இரகசிய விசாரணைக் கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த லினைராச்சி சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்று இந்த ஆணையமும் கண்டறிந்திருந்தது. ஆனால் இவ்வழக்கில் மேற்கொண்டு ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(1989 மற்றும் 1990 ஆகிய வருடங்களில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமல்போன 25 பள்ளிமாணவர்கள் தொடர்பான) எம்பிலிப்பிட்டிய வழக்கில் சதிவேலையில் ஈடுபட்டதாகவும், கொல்லும் எண்ணத்தில் கடத்தியதாகவும், சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்படதாகவும் குற்றம்நிரூபிக்கப்பட்டவர்களுக்கு பத்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் மேல்முறையீட்டில், நான்கு சிப்பாய்கள் மீதும் உயர்நிலைப் பள்ளி தலைமை அசிரியர் மீதும் 2002ல் குற்றம் உறுதிசெய்யப்பட்டிருந்தது. ஆனால் செவன இராணுவ முகாமின் தளபதியான உயர் மட்ட இராணுவ அதிகாரியான பிரிகேடியர் லியனகே இதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார். "அதிகார படிநிலையில் உள்ள மற்றவர்களுக்கு இதில் எந்த அளவுக்கு பொறுப்பு சாட்ட

3 ஜூன் 2011 அன்று நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஐ.நா. நிபுணர் குழு மற்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபையிடம் இலங்கையின் சட்டமா அதிபர், குற்றம் இழைத்தவர்களாகத் தெரியும் நபர்களையோ அமைப்புகளையோ LLRC அடையாளம் காணும் பட்சத்தில் அவர்கள் பற்றி மேலதிகமாக விசாரிக்கப்படும், அவர்கள் சம்பந்தமான விசாரணைகள் சட்டமா அதிபர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் என்று கூறியிருந்தார். அவ்வாறு விசாரிக்கப்பட வேண்டியவர்கள் எவரையுமே LLRC இதுவரை அடையாளம் காணவில்லை என்றும் ஐ.நா. நிபுணர் குழுவிடம் அவர் தெரிவித்திருந்தர். ஆனால் LLRCயின் பதிவுகள் அவருடைய இந்தக் கூற்றில் உண்மையில்லை என்று காட்டுகிறது.

யுத்த காலத்தில் நடந்த சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமையக்கூடிய விடயங்களை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுப்பதில் நாட்டின் குற்றவியல்துறை அதிகாரிகளுக்கு ஆர்வம் இல்லை என்பதையும், LLRC கொடுக்கப்பட அதிகாரங்களிலும் பணிவரம்பிலும் குற்றங்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற விடயம் இல்லாமல் இருக்கிறது என்பதையும், இதுவரை நடந்த விசாரணைகளின் மோசமாகவே உள்ளன என்பதையும் வைத்துப் பார்க்கும்போது, உண்மையை வெளிக்கொண்டுவந்து நீதியை நிலைநாட்டி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய ஒரு பலனுள்ள வழிமுறையாக LLRC இல்லை இனிமேலும் ஆக முடியாது.

## சுயாதீனமாக செயல்படுவதற்குரிய இயல்புகள் ஆணையத்திடம் இல்லை

மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முயலும் ஆணை LLRCக்கு தெளிவாக வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, அதன் உறுப்பினர்கள் யாவர் என்பதும் அதன் நம்பகத்தன்மையை மெலும் குலைப்பதாக உள்ளது. அரசபடையினர் மனித உரிமை மீறல் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளை வெளிப்படையாகவே நிராகரித்திருந்தவர்களும் இந்த ஆணையத்தில் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் அந்தப் பாரபட்சம் LLRC செயல்பட்ட விதத்திலிருந்தும் வெளிப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற குற்றச்சாட்டுகளை ஐ.நா. உள்ளிட்ட இடங்களில் வெளிப்படையாகவே நிராகரித்திருந்தவர்கள் LLRCயின் ஆணையாளர்களில் அடங்குவர். LLRCயின் தலைவரான சி.ஆர். டி சில்வா மீது பாரபட்சமாக நடந்துகொண்டதாகவும், முக்கியமான மனித உரிமை வழக்குகளில் விசாரணைக்கும் சட்ட நடவடிக்கைக்கும் தடையாக இருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் இருந்தன. திருகோணமலை ஐவர் என்று சொல்லப்படும் வழக்கு, ஏசி எஃ தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் 2006 ஆகஸ்டில் மூதூரில் கொல்லப்பட்ட வழக்கு உள்ளிட்ட வழக்குகளிலும் இவர் தடங்கலாக இருந்தார் என்று குற்றம்சாட்டப்படுகிறது.

மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான 16 முக்கிய வழக்குகளை விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் 2006ல் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம்தான் இவ்விரு வழக்குகளையும் விசாரித்திருந்தது. இந்த விசாரணை ஆணையத்தின் அறிக்கை பொதுவாக வெளியிடப்படவே இல்லை. அவற்றின் விளைவாக எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. விசாரணைகளின் நோக்கத்துக்கு எதிரான சுய நலன்களை டி சில்வா கொண்டிருந்தார் என்றும் ஆணையாளர்கள் சுயாதீனமாக பலன் ஏற்படும் வகையிலும் செயல்படுவதற்கு அவர் வலிந்து தடங்கல்களை ஏற்படுத்தினார் என்றும் அவர் அவர் மீது அந்த ஆணையத்தின் உறுப்பினர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.[19]

LLRC உறுப்பினர்களில் பிரச்சினைக்குரிய நபர் டி சில்வா மட்டும்தான் என்றில்லை. ஆணையாளர்கள் பெரும்பான்மையானோர் சிங்கள இனத்தவர் (இலங்கையில் இனப் பிரச்சினை ஒரு முக்கிய விவகாரம் என்றிருக்கும் நிலையில் எட்டு பேர் கொண்ட ஆணையத்தில் ஐந்து பேர் சிங்களவர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான்), ஆண்கள் அரசாங்க அதிகாரிகளாக இருந்தார்கள். ஆணையத்தில் தலைவரான சி.ஆர்.டி சில்வா, இலங்கை அரசின் முன்னாள் சட்டமா அதிபராகவும், சொலிசிட்டர் ஜெனராலாகவும் இருந்தவர். ஆணையத்தின் உறுப்பினரான டாக்டர் ரோஹன் பெரேரா வெளியுறவு அமைச்சகத்தில் சட்ட ஆலோசகராக் இருந்தவர், பேராசிரியர் கருணரத்ன ஹங்கவத்த நீதித்துறையின் முன்னாள் துணைச்செயலர், ஹெச்.எம்.ஜி.எஸ். பாலிஹகார ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி. மற்றுமொரு சிங்களரான மேக்ஸ்வெல் பரணகம, உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர்.

புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் தொகுதியின் பிரிவு 7 கூறுவது பின்வருமாறு: " விசாரணை ஆணையத்தின் உறுப்பினர்களைத் தெர்வுசெய்யும்போது பெண்களுக்கும், மனித உரிமை மீறல்களால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பிற வகுப்பினரின் பிரதிநிதிகளுக்கும் போதுமான இடம் அளிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்."

"உறுப்பினர்களின் திறன் மற்றும் பக்கச்சார்பின்மை தொடர்பாக மக்களுக்கு தெளிவு ஏற்படுத்தும் விதமாக (விசாரணை ஆணையம்) அமைக்கப்பட வேண்டும். மனித உரிமை விவகாரங்களிலும் தேவையேற்படும் பட்சத்தில் மனிதாபிமான சட்டங்களிலும் ஆணையாளர்கள் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருத்தல் நலம்" என்று புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் தொகுதியின் பிரிவு 7(a) கூறுகிறது.[20]

LLRC ஆணையாளர்களில் இருவர்தான் தமிழர். சி.சண்முகம் கருவூலத்துறையின் முன்னாள் செயலர், இலங்கை நாணய வாரியத்தின் உறுப்பினர் இவர். திருமதி.மனோகரி ராமநாதன் (ஆணையத்தின் ஒரே பெண் உறுப்பினர் இவர்தான்)

நீதித்துறையில் சட்டம் இயற்றும் துணை அதிகாரியாக பணிபுரிந்த சட்டத்தரணி இவர்.

இந்த ஆணையத்தின் ஒரே முஸ்லிம் உறுப்பினர் எம்.டி.எம். பாஃபிக், இவரும் ஒரு சட்டத்தரணி. மனித உரிமைகள் விடயத்தில் கணிசமான அனுபவம் உள்ள ஒரே உறுப்பினர் என்றால் அது இவர்தான். இலங்கையின் மனித உரிமைகள் ஆணையத்தில் முன்பு பணியாற்றியவர் இவர்.

விசாரணை அமர்வுகளுக்கு முன்பாகவும் விசாரணைகளின்போது ஆணையாளர்கள் தெரிவித்த கருத்துகள், ஆணையம் ஒரு நடுநிலையான சுயாதீனமான அமைப்பு என்று நம்புவதற்கு இடமளிக்காத வகையில் அமைந்துள்ளன. விசாரணை நடவடிக்கைகள் முழுக்கவுமே அரசாங்க செயற்பாடுகளையும் கொள்கைகளையும் நியாயப்படுத்தும் விதமாகவே ஆணையாளர்கள் நடந்துகொண்டதாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகள் செய்த துஷ்பிரயோகங்கள் மீதுதான் இவர்களது கவனம் குவிந்திருந்தது. சிலவேளைகளில், மனிதாபிமான சட்ட மீறல்களில் அரச படையினர் ஈடுபட்டனர் என்பது தொடர்பில் மிகவும் முக்கியமான சில கேள்விகளைக் கேட்கவும் இவர்கள் தவறியுள்ளனர்.[21]

LLRC ஆணையத்தில் டி சில்வாவின் பங்கு குறித்து இதேபோன்ற கவலைகளை ஐ.நா.தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழுவும் தெரிவித்திருந்தது. அக்குழுவினர் பின்வருமாறு முடிவுதெரிவித்திருந்தனர்:

> மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களை விசாரிக்கின்ற ஒரு அமைப்பு சுயாதீனமாகவும், பக்கச்சார்பின்றியும், திறன் மிக்கதாகவும் இருப்பது அவசியம் என என சர்வதேச சட்டங்கள் கூறுகின்றன. அது நிஜத்திலும் சுயாதீனமாக இருக்க வேண்டும் அது சுயாதீனமானது என்ற நம்பிக்கையை மற்றவர்களிடத்தில் ஏற்படுத்தவும் வேண்டும்.
>
> LLRCயைப் பொறுத்தவரையில், அதன் உறுப்பினர்களில் குறைந்தது மூன்று பேரது சுய நலன்களுக்கும் ஆணையத்தின் நோக்கங்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. சுயாதீனமாகவும், பக்கச்சார்பின்றியும் செயல்படக்கூடிய அவர்களது திறனை குலைப்பதாகவும், சுயாதீனமானவர்கள்தான் என்று பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதைக் குலைப்பதாகவும் இந்த முரண்பாடுகள் அமைந்துள்ளன. டி சில்வாவைத் தாண்டி, இன்னொரு ஆணையாளர் யுத்தத்தின் இறுதிக் காலங்களில் ஐநாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியாக இருந்தவர். இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும், யுத்தத்தின்போது உருவெடுத்த இராணுவ மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளில் அரசின் பார்வையில் இருந்து அவற்றை நியாயப்படுத்துபவராகவும் அவர்

இருந்துள்ளார். மூன்றாமவர் இலங்கை வெளியுறவுத்துறையின் சட்ட ஆலோசகராக இருந்தவர். ஆணையம் விசாரிக்கும் காலப் பகுதியில் வெளியுறவுத்துறைக்கு சர்வதேச சட்டங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கியவராகவும் இவர் இருந்துள்ளார்.

அவர்களது பிற தகுதிகள் எதுவாக இருந்தாலும், ஆணையத்தின் நோக்கங்களுக்கும் அவர்களது நலன்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஆணையாளர்களாக இருப்பதென்பது கொஞ்சமும் முறையில்லாத காரியம். அரசாங்கத்தில் தாங்கள் உயர்மட்ட அதிகாரிகளாக இருந்த சமயத்தில் நடந்ததாக குற்றம்சாட்டப்படும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பின்றி விசாரணை நடத்தி குற்றச்செயல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் பங்களிக்க வேண்டும் என்பதை இவர்கள் ஆணையாளர்களாக உள்ள ஒரு அமைப்பிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது.எந்த நோக்கிலிருந்து பார்த்தாலும், தாங்கள் முக்கிய பொறுப்பில் இருந்த ஒரு அரசாங்கம் நடந்துகொண்ட விதத்தை சுயாதீனமாக மதிப்பீடு செய்யும் திறனை இவர்களால் வெளிப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. இவர்களை நியமித்த ஜனாதிபதியிடம் இருந்தும் அதனை எதிர்பார்க்க முடியாது. ஆணையத்தின் உறுப்பினர்களில் குறைந்தது ஒருவர் வெளியிட்டிருந்த LLRCக்கு வெளியேயென்றாலும் அது செயல்பட்ட காலகட்டத்தில் வெளியிட்டிருந்த கருத்துகள் இவ்விவகாரம் தொடர்பான கவலைகளை பிரதிபலிப்பதாக உள்ளன.[22]

## குற்றவாளிகளை சட்டத்திற்கு பதில் சொல்லவைக்கும் விஷயத்தை முன்னெடுக்கத் தவறியது

LLRC ஆணையம் உருவாகப்பட்ட விதம் அனைத்திலுமே அது சட்டத்துக்கு பதில்சொல்ல வைக்கும் ஒரு வழிமுறையாக இருக்க முடியாது என்பதற்கான அடையாளங்கள் இருக்கின்றன. "கடந்த காலத்தில் நடந்தவற்றை சரித்திரமெனக் கருதி விட்டுவிட வேண்டும்" என்று இலங்கை அரசாங்கம் ஐ.நா. தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழுவிடம் கூறியிருந்தது. LLRCயின் கருவாக்கத்தின் பின்னணியில் இருப்பதும் இந்த மனோபாவம்தான். "அரசாங்க அணுகுமுறையின் முக்கிய அம்சமான LLRC குற்றம் இழைத்தவர்களை தனிப்பட்ட ரீதியில் அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் கவனம் செலுத்தவில்லை, ஆனால் அரசியல் பொறுப்பு என்ற பெரிய அளவிலான கற்பிதத்தில்தான் கவனம் செலுத்துகிறது. அரசியல் பொறுப்பின் அடிப்படையில்தான் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அராசாங்கத்துக்கு

வருகிறது" என இலங்கை அரசாங்கம் நிபுணர் குழுவிடம் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.[23]

மீறல்களைச் செய்தவர்களை அடையாளம் காட்டக்கூடிய விபரங்கள் சாட்சியம் அளித்தவர்களிடம் இருந்தும் அதிகாரிகள் அவர்களது கூற்றை மறுதளிக்கவே முயன்றிருந்தனர்.

"குறிப்பிட்ட ஒரு குற்றத்தை இழைத்தவராகத் தெரிபவர்கள்" அடையாளம் காணப்பட்டால் அது பற்றி மேலதிகமாக விசாரிக்கப்படும், அது பற்றி சட்டமா அதிபர் அலுவலகத்துக்கு தெரியப்படுத்தப்படும் என்று 22 பிப்ரவரி 2011 அன்று இலங்கையின் சட்டமா அதிபர் ஐநா நிபுணர் குழிவிடம் தெரிவித்திருந்தார். ஆனால் "தற்போது வரையில் LLRCயில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் எதனிலும் குற்றமிழைத்த ஆட்களையோ குழுக்களையோ அடையாளம் காணக்கூடிய தவல்கள் வந்திருக்கவில்லை."[24] என்று அவர் கூறியிருந்தார். இது உண்மையல்ல என்பதை நாங்கள் கீழே விபரமாக விளங்கப்படுத்தியுள்ளோம். சொல்லப்போனால், குற்றத்தில் சம்பந்தம் உடைய சிலரை சாட்சிகள் அடையாளம் காட்டியிருந்தனர், அவர்கள் எந்தக் கட்சியை எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள், எந்த இராணுவ முகாமை, எந்த படையணியைச் சேர்ந்தவர்கள் என்பதையெல்லாம் பலரும் அறிந்துள்ளனர். உதாரணங்கள் பின்வருமாறு:

- கிழக்கு இலங்க்கையில் உள்ள ஏராவூர் பற்று, செங்கலடியில் வட்டார செயலகத்தில் 11 ஒக்டோபர் 2010 அன்று வாக்குமூலம் அளித்த சாட்சி எண் 6, 23 மே 2009 அன்று கடத்தப்பட்ட தனது கணவன் விடுவிக்கப்படுவதற்காக தனது வீட்டை அடமானம் வைத்து மொரக்கட்டான் இராணுவ முகாமைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் ரூ.1,50,000 கொடுத்ததாக தெரிவித்திருந்தார். தன்னிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட நபரின் பெயரையும் (அவர் இப்போது இறந்துவிட்டார்) குற்றப்புலனாய்வு பிரிவை (CID) சேர்ந்த இராணுவ முகாமோடு தொடர்புடைய மூன்று பொலிஸ்காரர்களின் பெயரையும் அவர் தெரிவித்திருந்தார். தனது கணவனை பிடித்துவைத்துக்கொண்டு பணம் கேட்பவர்கள் இவர்கள்தான் என்று அந்நபர் இப்பெண்ணிடம் தெரிவித்திருந்தார்.[25]
- மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 ஒக்டோபர் 2010 அன்று வாக்குமூலம் அளித்த சாட்சி எண் 8, 19 பிப்ரவரி 2009 அன்று நெல்வயலில் நின்றுகொண்டிருந்த தனது கணவர் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனதற்குப் பொறுப்பானவர்

> என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்த நபருடைய பெயரைத் தெரிவித்திருந்தார். மடப்பாலம் விசேட அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த அந்த அதிகாரியின் முழுப் பெயரையும் அவர் சொல்லியிருந்தார்.[26]

இந்த தகவல்கள் இருந்தும், இவர்கள் தொடர்பான தடயங்களைத் திரட்டுவதில் LLRC ஆணையாளர்கள் ஆர்வம் காட்டியிருக்கவில்லை என்பதை பொதுப்பார்வைக்கு வந்துள்ள LLRCயின் பதிவுகளே சொல்கின்றன. சாட்சிகள் எல்லாம் இலங்கை அரசாங்கத்தினரை குற்றம்சாட்டும் பட்சத்தில் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தும் வேலையை LLRC ஆணையளர்கள் செய்வார்கள் என்பதற்கு அறவே வாய்ப்பு இல்லை.

## 2. LLRCயின் செயற்பாடுகள் – தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்களின் பட்டியல்

குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபிக்கவும், இன்னும் பரந்துபட்ட அளவிலே பார்க்கையில் நீதியை நிலைநாட்டி, செய்த செயலுக்கு சட்டப்படி பதில் சொல்ல வைப்பதற்கும் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டுள்ளன என்பதையே காட்டுவதாக LLRC நடவடிக்கைகளுடைய பதிவுகள் அமைந்திருப்பது விரக்தியூட்டுவதாய் இருக்கிறது. சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களுக்கு ஆணையாளர்கள் சுருக்கமாகவும் மேம்போக்காகவும் அளித்த பதில்களில் எந்தவிட முனைப்பும் இல்லை. தேசிய படைகள் ஆற்றியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச் செயல்கள் தொடரில் அரசாங்க அதிகாரிகளிடம் சவால் மிக்க கேள்விகள் எதுவும் கேட்கப்பட்டிருக்கவில்லை. பலவந்தமாக ஆட்கள் பிடித்துச் செல்லப்பட்டது போன்ற துஷ்பிரயோகங்களை யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினர் செய்தது பற்றிமுன்பு யுத்தம் நடந்த பகுதிகளில் இருந்து வந்த நபர்கள் சொன்னபோது, அதனைச் செய்தவர்களின் யார் எனக் கண்டறிவதில் ஆணையாளர்கள் எவ்வித ஆர்வமும் காட்டியிருக்கவில்லை. சாட்சிகள் தெரிவித்த குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்கத் தவறிய ஆணையாளர்கள் – வெறும் சம்பிரதாயத்துக்காகவென அவர்களைக் கையாண்டிருந்தனர்.சாட்சிகள் பலர் தங்களுடைய நெருங்கிய சொந்தங்களைப் பறிகொடுத்தது பற்றிய கவலையில் இருந்தவர்கள். சாட்சிகள் தெரிவித்த குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையை ஆணையம் கொஞ்சமும் மதித்து நடக்கவில்லை என்பதைக் காட்டுவதாகவே அதன் பதிவுகள் அமைந்திருக்கின்றன.

### சாட்சி வாக்குமூலங்கள் வெளிக்கொணர்ந்த மோசமான உரிமை மீறல்களை விசாரிக்கத் தவறியது

கொழும்புக்கு வெளியில் LLRC நடத்திய முதல் விசாரணை அமர்வான வட இலங்கையில் உள்ள வவுனியாவில் 14 மற்றும் 15 ஆகஸ்ட் 2010 ஆகிய தேதிகளில் நடந்த அமர்வில் தெரிவிக்கப்பட்ட சாட்சி வாக்குமூலங்களிலும் சரி அதன் பின்னர் நடந்த ஒவ்வொரு விசாரணை அமர்வில் வெளிவந்த வாக்குமூலங்களும் சரி, மனித உரிமைச் சட்டங்களும் மனிதாபிமானச் சட்டங்களும் மோசமாக மீறப்பட்ட குற்றங்களை விடுதலைப் புலிகள் அரச படையினர் என்ற இருதரப்பாரும் செய்திருந்ததாக குற்றம்சாட்டியிடிருந்தன. ஆனால் 13 செம்படம் 2010 அன்று LLRC வெளியிட்ட இடைக்கால அறிக்கையானது (இதுவரையில் அரசாங்கம் எடுத்த எல்லா நடவடிக்கைகளுக்கும் LLRC யின் இந்த அறிக்கைதான் அடிப்படையாக இருந்துள்ளது) மனித உரிமை மீறல் குற்றச்ச்சாட்டுகள் பற்றி எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை. குற்றம்செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பான எந்த ஒரு பரிந்துரையையும் அது செய்திருக்கவில்லை.

மாறாக முந்தைய விசாரணை அமர்வுகளில் சாட்சிகள் குறிப்பிட்டிருந்த – நெடுங்காலமாக ஒப்புக்கொள்ளபட்ட பிரச்சினைகளுக்கு யதார்த்தமான தீர்வுகளாக சில யோசனைகளைச் சொல்வதோடு நிறுத்திகொண்டுவிட்டது.

இனி நாங்கள் வருவது இதுவரை காலம் LLRC செய்துள்ள வேலையை மதிப்பிடுவதற்கான ஒரு முயற்சி ஆகும். LLRC வெளியிட்டுள்ள அதன் அமர்வுகளின் பதிவுகளையும் பிற ஆதாரங்களையும் இந்த மதிப்பீடு அடிப்படையாகக் கொண்டுள்ளது. பொதுமக்கள் வாய்வழியாகவும் எழுத்துமூலமாகவும் தந்த சில முக்கிய வாக்குமூலங்களில் உரிமை மீறல்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது ஆனால் அவற்றை LLRC வெளியிடவில்லை என்பது சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு தெரியும்.[27]

## சாட்சிகள் LLRCயிடம் முறையிட்டிருந்த உரிமை மீறல்கள்

LLRCயிடம் செய்யப்பட்டிருந்த முறைப்பாடுகளில் பெரும்பான்மையானவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்: பலவந்தமாக ஆட்கள் கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனது, தடுத்துவைக்கப்பட்டது உள்ளிட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய புகார்கள் ஒரு வகை, ஆயுத மோதல்களால் எழுந்துள்ள பொருளாதார கஷ்டங்கள் ஒரு வகை, யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர நேர்ந்த விடயம் பற்றிய புகார்கள் ஒரு வகை. சாட்சிகள் பல ஒன்றுக்கு மேற்பட்ட புகார்களைத் தெரிவித்திருந்தனர். இதில் ஒரே ஒரு வகையான புகார்களை சொல்லத்தான் ஆரம்பத்திலிருந்தே மக்களை LLRC அழைத்திருந்தது. அது பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றிய புகார்கள். அது எல்லாம் நடந்திருந்தும், LLRCயின் அமர்வுகளின்போது பல்வேறு ஆயுதக் குழுக்கள் மற்றும் அரச படையினர் பல்வேறு மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அது பற்றி மேலதிக குற்றவியல் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அடித்தளம் அமைக்கக்கூடிய கேள்விகளைக் கேட்க ஆணையாளர்கள் தவறிவிட்டிருந்தனர்.

உரிமை மீறல்குக்கு பொறுப்பான ஆட்கள் எந்தப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று சாட்சிகள் பல அடையாளம் காட்டியிருந்தனர்.( ஆனாலும் ஆட்கடத்தல் சம்பவங்கள் கணிசமானவற்றில் அவற்றைச் செய்தவர்கள் 'அடையாளம் தெரியாத நபர்கள்' என்றுதான் தெரிவிக்கப்பட்டிருந்தனர்.) வாக்குமூலம் வழங்கியவர்களில் ஒரு சிலரே குற்றத்துக்கு காரணமானவர்களை அடையாளம் காட்டியிருந்தனர். ஆனாலும் அவர்கள் சொன்னதை வைத்து ஆணையாளர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

சாட்சிகள் அரச படைகளைக் குற்றம் சாட்டினர் – குறிப்பாக இராணுவத்தினரையும் (விசேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட) போலீஸ் படையினரையும், இலங்கை அரசாங்கத்துக்காக வேலை செய்த ஆயுதக் குழுக்களையும் (இதில் கருணா

குழுவும்[28], ஈ.பி.டி.பி.[29]யும் முக்கிய இடம் வகிக்கின்றனர்) குற்றம் சாட்டினர். தமது குடும்பத்தவர்களை கைது செய்தது அல்லது கடத்தியதாகவும் அவர்களில் பலர் அதன் பிறகு எங்கிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை எனவும் இவர்கள் கூறுகின்றனர். கொலைகள் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

- யாழ்ப்பாணம் அரியாலையில் பேசிய பெண்ணொருவர், 2007 ஜனவரியில் ஒரு நாள் மாலை தனது வீட்டுக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் தனது மகனைக் கைது செய்து கூட்டிச் சென்றதாகவும் அதன் பின்னர் அவர் என்ன ஆனார் என்று தனக்குத் தெரியவில்லை என்றும் கூறினார். தனது மகன் கைதாவதை அவரது மனைவியும் மூன்று பிள்ளைகளும் பார்த்ததாகவும் அவர் தெரிவித்தார். தனது மகனைக் கண்டுபிடிப்பதற்காக பல அமைப்புகளையும் தான் தொடர்புகொண்டதாகவும், ஆனாலும் அவர் எங்கிருக்கிறார் என்று கண்டறிய முடியவில்லை என்றும் அவர் கூறினார். ஜூலை 2009 வாக்கில் (அதாவது LLRCயில் சாட்சியம் அளிப்பதற்கு ஐந்து மாதங்கள் முன்னதாக, தனது மகன் ஊரளவு இராணுவ முகாமில் இருப்பதை அப்பகுதி மக்கள் கண்டதாகத் தனக்கு தெரியவந்ததென்று அவர் கூறினார்.[30]

- மடுவில் வாக்குமூலம் அளித்த சாட்சி எண் 7, 2008ல் ஒரு நாள் அதிகாலை 1:15 மணியளவில் தனது கணவரை கடத்திக் கொண்டு சென்றார்கள் என்றும், அவரைக் கடத்தியது பத்து வருடகாலமாக குடும்பத்துக்கு தெரிந்த ஒரு நபர்தான் என்றும், அவர் சி.ஐ.டி.க்கு வேலை பார்ப்பதாக தனக்கு தெரியவந்ததாகவும் அவர் கூறினார்..[31]

- வெள்ளணையில் வாக்குமூலம் அளித்த சாட்சி எண்கள் 2 & 3, 2007ல் தமது குடும்பத்து உறுப்பினர்கள் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு பின்னர் காணாமல் போனதன் பின்னணியில் இருப்பது அப்பகுதி சோதனைச் சாவடிகளில் காவல் நிற்கின்ற கடற்படை ஆட்கள்தான் என்று தாங்கள் சந்தேகிப்பதாகச் சொன்னார்கள்.[32] மன்னாரில் வாக்குமூலம் அளித்த சாட்சி எண் 2ன் 23 வயது மகன் 2007ல் காணாமல் போனதற்கும் கடற்படையினர் மீதே பழிசுமட்டியிருந்தார். கரைசல் சந்திப்பில் ஒரு மதுக்கடையில் இருந்து வீடு திரும்புகையில் இவர் காணாமல் போனதாகவும், அப்பகுதியில் சிவில் உடையில் வந்த கடற்படையினர் அடையாள அட்டைகளை பரிசோதித்தனர் என்றும் அப்பகுதி மக்கள் மூலம் அறியக் கிடைத்ததாகவும் சாட்சி தெரிவித்திருந்தார்.

- ஏராவூர் பத்தில் வாக்குமூலம் அளித்த சாட்சி எண் 16, விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து தப்பித்து வீடுவந்த தனது மகனை, 2007

ஜூலையில் கிரானில் உள்ள டி.எம்.வி.பி. [33] அலுவலகத்தோடு தொடர்புடைய நபர் ஒருவர் கடத்தியதாகத் தெரிவித்தார். [34]

- ஏராவூரில் வாக்குமூலம் அளித்த இன்னொருவர், தனது குடும்பத்தில் இருந்து ஐந்து பேர் கடத்தப்பட்டதாகக் கூறினார். வெளிநாடு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த தனது மகளும் (இவர் மூன்று பிள்ளைகளுக்கு தாய்) அதில் ஒருவர் என்று சாட்சி தெரிவித்தார். டி.எம்.வி.பி. அமைப்பின் உறுப்பினர் என்று அடையாளம் காணப்படும் ஒரு நபரால் தனது மகள் கடத்தப்பட்டதாக சாட்சி தெரிவித்தார். காணாமல் போனவர்களைத் தேடினால் தனது வீட்டை வெடிவைத்து தகர்த்து விடுவோம் என தனது மகளைக் கொண்டு சென்றவர் மிரட்டியதை சாட்சி ஏராவூர் காவல் நிலையத்தில் புகார் சொல்லியிருந்தார். 1985ல் தனது கணவனை இனந்தெரியாத ஆள் ஒருவர் சுட்டுக் கொன்றிருந்தார் என்பதையும், 2006 ஏப்ரலில் தனது மருமகனை கருணா பிரிவினர் சுட்டுக் கொன்றிருந்தார்கள் என்பதையும் இவர் LLRCயிடம் சொல்லியிருந்தார்.[35]

விடுதலைப்புலிகள் மீது, தமது குடும்பத்தினரை கட்டாயமாக இயக்கத்தின் படையில் சேர்த்ததாகவும், அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் பலரை ஒன்று காணவில்லை அல்லது அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் சாட்சிகள் குற்றம்சாட்டியிருந்தனர்:

- முல்லைத்தீவு துணுக்காயைச் சேர்ந்த விவசாயி ஒருவர், தனது குடும்பம் பொக்கணைக்கு இடம்பெயர்ந்திருந்த சமயத்தில் தனது மகளை 25 பிப்ரவரி 2009 அன்று விடுதலைப் புலிகள் கொண்டு சென்றதாகக் கூறினார். அதிலிருந்து பத்து நாள் கழித்து, தனது மகள் நெஞ்சிலும் இரண்டு கால்களிலும் குண்டடி பட்டு மருத்துவனையில் இருப்பதாக இவருக்கு தெரியவந்துள்ளது. பொக்கணைக்கு இராணுவம் முன்னேறி வந்ததை அடுத்து மகள் எங்கே இருக்கிறாள் என்பது இவருக்கு தெரியாமல் போனது. ஆனாலும் தனது மகள் இராணுவத் தடுப்புக்காவலில் இருக்கிறாள் என்று தான் கேள்விப்பட்டதாக அவர் சொன்னார்.[36]

- மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணொருவர், 14 வயது மட்டுமே ஆன தனது மகனை 2006ல் விடுதலைப் புலிகள் கொண்டுசென்றதாகச் சொன்னார். தனது மகனை 2008ல் கிளிநொச்சியில் பார்த்ததுதான் குடும்பத்தார் அவரைக் கடைசியாகக் கண்டதாம்.[37]

- கிளிநொச்சியில் வாக்குமூலம் அளித்த பெண்ணொருவர், விடுதலைப் புலிகள் தனது மகனை வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்ததாகவும், குடும்பம் நடத்திக்கொண்டிருந்த ஒரு சிறிய கடையிலிருந்து 4 ஜூலை

2008 அன்று கொண்டு சென்றதாகவும் சொன்னார். பின்னர் பிப்ரவரி 2009ல், இவர் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்தபோது மகன் இவரது குடும்பத்துடன் சேர்ந்துகொண்டிருந்தாராம். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கடந்த காலத்தில் தொடர்பு இருந்ததென்றாலும் அது மிகவும் குறுகிய காலத்துக்குதான் என்றாலும் அவர்கள் அனைவரும் இராணுவத்தில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதை அடுத்து மகன் இராணுவத்தில் சரணடைந்திருந்தாராம். பின்னர் அவர் வெலிக்கந்தையில் தடுத்துவைக்கப்பட்டாராம்.[38]

யுத்தம் நடந்த இடங்களுக்கு அருகில் உள்ள பகுதிகளை சேர்ந்த சிங்களர்களும் வாக்குமூலம் கொடுத்திருந்தனர். (எல்லைக் கிராமங்கள் என்று சொல்லப்படும்) இந்த இடங்களில் தமிழர்களும் சிங்களர்களும் ஒன்றாக அருகருகே வாழ்கின்றனர். பொதுமக்களை விடுதலைப் புலிகள் கொன்றது, ஆட்கள் இடம்பெயர்ந்தது. உடல் ரீரீதியான மன ரீதியான பாதிப்புகளை மக்கள் சந்தித்தது, யுத்தத்தோடு தொடர்புடைய பொருளாதார பிரச்சினைகள் போன்றவை தொடர்பில் அவர்கள் பேசினார்கள்.

- புத்தளத்தை சேர்ந்தவர் ஒருவர் LLRCயிடம் பின்வருமாறு கூறினார்:

  "இந்தப் பகுதியில் பயங்கரவாதிகள் அதிக எண்ணிக்கையில் தாக்குதல் நடத்தி வந்தனர். 1998ல் ஒரு சம்பவம் நடந்தது, பின்னர் 2009 பிப்ரவரியில் மில்லியட்டவில் நடந்த தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இதிலே நான் நேரடியாகவே பாதிக்கப்பட்டுள்ளேன். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யப் போனபோது நிலக் கண்ணியில் சிக்கி எனது இரு கால்களிலும் அடி பட்டது. ஒரு கால் போய்விட்டது. இன்னொரு கால் முழுசாக போகவில்லை. தொண்டு நிறுவனம் ஒன்றின் மூலம் இழந்த ஒரு காலுக்கு செயற்கைக் கால் கிடைத்தது. ஆனால் அரசாங்கத்திடம் இருந்து எனக்கு ஒரு உதவியும் கிடைக்கவில்லை." [39]

1995 ஒக்டோபர் நவம்பர் மாதங்களில், விடுதலைப் புலிகள் தமது குடும்பத்தவரை பெருமளவில் கொன்று குவித்ததாக சியம்பலந்துவ என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்திருந்தனர். காட்களை அழித்து தற்காலிக விவசாயம் செய்துவந்தவர்கள் இவர்கள்.[40]

ஷெல் தாக்குதலில் ஆட்கள் உயிரிழந்ததாகவும் காயம்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

- யாழ்ப்பாணம் வெள்ளணை தீவின் புனித அந்தோணியார் தேவாலயத்தில் 14 நவம்பர் 2010 அன்று வாக்குமூலம் அளித்த மூன்று பெண்கள், ஷெல் தாக்குதல்களின்போது தமது கணவனைப் பறிகொடுத்தது பற்றிச் சொன்னார்கள். 23 மார்ச் 2009 அன்று புதுமாத்தளனில் ஒரு ஷெல் விழுந்ததில் தனது கணவர் காயம் பட்டு உயிரிழந்தார் என சாட்சி எண் 5 தெரிவித்திருந்தார். கிளிநொச்சியில் ஒரு கடை வைத்திருந்ததாகவும் யுத்தம் காரணமாக புதுமாத்தளன் இடம் பெயர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். தனது கணவன் மீது ஷெல் விழுந்ததும் மருத்துவமனையில் அவர் இறந்ததும் தனது கண் முன்னே நடந்ததாக அவர் குறிப்பிட்டார். 20 பிப்ரவரி 2009 அன்று சுதந்திரபுரத்தில் விழுந்த ஷெல்லில் தனது கணவன் இறந்ததாக சாட்சி எண் 6 சொன்னார். 7 பிப்ரவரி 2009 அன்று மாத்தளனில் விழுந்த ஷெல்லில் தனது கணவன் மாண்டதை சாட்சி எண் 7 குறிப்பிட்டார். அவருக்கு ஒரு மகன் இருக்கிறாராம். [41]

முஸ்லிம்கள் தாங்கள் வடக்கிலிருந்து வலுக்கட்டாயமாக துரத்தப்பட்டது, 1990களின்போது கிழக்கிலங்கையின் முஸ்லிம் கிராமங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்கள் போன்றவை குறித்து பேசினார்கள்.

- 1990ல் தனக்கு அப்போது 12 வயது இருந்த சமயத்தில் யாழ் குருநகரில் இருந்து வந்த தங்களை விடுதலைப் புலிகள் அநுராதபுரத்திற்குப் போகச் சொல்லி உத்தரவிட்டதாக ஆணையாளர்களிடம் சொன்னார். "... காலை சுப்ஹு தொழுகை முடிந்தவுடன் விடுதலைப் புலிகள் ஒரு அறிவிப்பு செய்தனர். முஸ்லிம் ஆண்கள் அனைவரும் ஜின்னாப் பள்ளியில் கூட வேண்டும் என்று அறிவித்தனர். ... புலிகள் அமைப்பின் பெண் உறுப்பினர் ஒருவர் எங்கள் பகுதிக்கு வந்து எங்கள் அனைவரையும் வீடுகளை விட்டு வெளியே வரச் சொன்னார். .... எங்கள் வீட்டின் சாவிகளை எங்களிடம் இருந்து வாங்கிக்கொண்டு, அவற்றில் டேப் ஒட்டி சில குறிப்புகளை எழுதி ஒரு பெட்டியில் போட்டுக்கொண்டார். எங்கள் உடல்களில் ஏதும் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்று பரிசோதித்தனர். எங்கள் பெட்டி படுக்கைகளையும் பரிசோதித்தனர். பின்னர் எங்களை அங்கிருந்து போக அனுமதித்தனர்." [42]

- முல்லைத்தீவில் பேசிய ஒருவர், 27 ஒக்டோபர் 1990 அன்று முஸ்லிம் பண்டிகை தினத்தன்று தண்ணீரூற்று, நிரவிபுரம், நிரவிபிட்டி, ஹிஜ்ராபுரம் போன்ற கிராமங்களில் உள்ள பள்ளிவாசல்களுக்குள் விடுதலைப் புலிகள் நுழைந்ததாகவும், அடுத்த 24 மணி நேரங்களுக்குள் முஸ்லிம்கள் அனைவரும் ஊரை காலி செய்து விட்டு சென்றுவிட வேண்டும், இல்லாவிட்டால் கொல்லப்படுவார்கள் என்று அறிவித்ததாகவும் கூறினார். "உயிரோடு சென்றுவிடுங்கள் உங்கள் உடைமைகள் சொத்துக்கள் எதுவும்

உங்களுக்கு கிடையாது. அது எதனையும் நீங்கள் கொண்டுசெல்ல முடியாது." அவ்வகையாக 1300 குடும்பங்கள் அன்று ஊரை விட்டு சென்றதாக அவர் LLRCயிடம் தெரிவித்தார். நெடுங்கேணியில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் தஞ்சமடைந்திருந்தன.ஆனால் அப்போது இராணுவ ஹெலிகாப்டர் தாக்கி நான்கு பேர் கொல்லப்பட்டிருந்தனர். பின்னர் இந்த குடும்பங்கள் ஒருவழியாக புத்தளம் வந்து சேர்ந்திருந்தனர். இவர்களில் பலர் இன்றளவும் புத்தளத்திலேயே வாழ்ந்து வருகின்றனர்.[43]

தமது சொந்தப் பிரதேசங்களுக்கு திரும்ப விரும்பும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இடைஞ்சல்கள் பற்றி இவ்விரு சட்சிகளுமே கவலை வெளியிட்டனர். இருபது ஆண்டு இடைவெளிக்குப் பின் தமக்கு சொந்தமான காணிகளை திரும்பப் பெறுவது, வாழ்வாதாரங்களை மீன்த்ம் உருவாக்குவதில் உள்ள சிரமங்கள் பற்றி இவர்கள் பேசினர்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், சாட்சிகளின் பாதுகாப்பு, அவர்களுக்குள்ள மதிப்பு, குற்றம்சாட்டப்படுபவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பவை தொடர்பில் எல்லாம் எவ்வித அக்கறையும் காட்டாமல் LLRC செயல்பட்டிருந்தது. வாக்குமூலம் அளித்தவர்கள் பலரின் பெயர்கள், மோசமான மீறல்களைச் செய்ததாக குற்றம்சாட்டப்பட்டவர்கள் சிலரது பெயர்கள் எல்லாம் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள LLRC பதிவுகளில் காணப்படுகின்றன. ஆட்களுடைய பெயர் விபரம் வெளியானால் மக்களிடையே விமர்சனம் சலசலப்பு எழுமே, யாரேனும் பழிவாங்கலில் இறங்கக்கூடுமே என்ற அக்கறை இல்லாமல் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வகையான பிரச்சினைகள் வரக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டுதான், சம்பந்தப்பட்டவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன் குற்றம்சாட்டப்படுபவரின் பெயர்கள் பொதுப்படையாக வெளியிடப்படக்கூடாது என்று சர்வதேச வழிமுறைகள் சொல்கின்றன. குற்றம்சாட்டப்படும் நபர்களின் பெயர்களை வெளியிட்டால் பிரச்சினைகள் வரலாம். இது பற்றி புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுதி பின்வருமாறு கூறுகிறது:

> விதிமீறல் செய்தவர்களை ஆணையம் தனது அறிக்கையில் அடையாளப்படுத்துவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பின்வரும் உத்திரவாதங்கள் இருப்பது உறுதிசெய்யபட வேண்டும்: (a) ஒருவரது பெயரை வெளியிடும் முன்பு அவர் மீதான குற்றச்சாட்டை உறுதிசெய்யும் துப்புத் தகவல்கள் இருக்கிறதா என்று ஆணையம் பார்க்க வேண்டும். (b) குற்றம்சாட்டப்படும் நபர்கள் தங்கள் தரப்பில் சம்பவங்களை எடுத்துச்சொல்ல விசாரணை ஆணையம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

விசாரணை அமர்வுக்கு வந்தோ அல்லது, எழுத்து மூலமான அறிக்கையாகவோ அவர்கள் பதில் தர வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

இருந்தாலும், விதிமீறல்களைச் செய்தவர்களை LLRC ஆணையத்தின் நடவடிக்கைகள் அடையாளம் காட்டியுள்ளன என்று இலங்கை அதிகாரிகள் கூறுவது உண்மையல்ல.[44]

## கொலைகள்

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போனது என்று வருணிக்கப்படுகின்ற சம்பவங்கள் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் புரையோடிப்போயுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் படுமோசமான சில காலகட்டங்கள் இருந்தன. பாதுகாப்பு படையினராலும் அவர்களோடு சேர்ந்து செயல்படுகின்ற தமிழ் கட்சிகளும் தமது குடும்பத்தினரை வீடுகளுக்குள் புகுந்து இழுத்துச் சென்றதாகவும் அல்லது அவர்கள் வேலை செய்யும் இடங்களிலிருந்து கடத்திச் சென்றதாகவும், அப்படிக் கொண்டுசெல்லப்பட்டவர்களின் கதி என்னானது என்பது இதுவரை தெரியவரவில்லை என்றும் சாட்சிகள் குற்றம்சாட்டியிருந்தனர். சில சமயங்களில் கொலைகள் நடந்ததையும் ஆட்கள் காணநேர்ந்ததுள்ளது. கடத்தப்பட்டவர்கள் பின்னர் சாலையோரத்திலோ அல்லது புழக்கம் இல்லாத கிணறுகளிலோ சடலமாகக் கண்டெடுக்கப்பட்டது பற்றிய தகவல்கள் தமிழ் ஊடங்களில் தொடார்ந்தும் வெளிவருகின்ற ஒரு நிலைமை ஆண்டுக்கணக்கில் இருந்தது.

**Testimony of Witness 8, Velanai, 14 November 2010[45]**

**Witness 8:** On the 19th of August 2006 at 9.45pm many men came to my house. Most of them were staying outside but some of them entered the house. At that time my husband was getting ready to go to sea (for fishing) but they came and called his name (Maxie). They broke open the door and came inside the house. We saw their faces. They were EPDP and Army men in civils. They pointed a gun at my forehead and they told us not to shout or scream and they pushed us into a room and kept us in the room.

**Mrs Ramanathan:** What is her husband's name? [46]

**Witness 8:** Her elder sister had been outside and they pushed her by the neck and asked everybody to go inside. They asked us to show our ID cards. They said his ID card was not necessary. We will take him, make investigations and release him after that and they took him away. All the 3 were taken away.

**Interpreter:** Who were the 3 people were taken away?

**Witness 8:** My husband, his elder brother and younger brother. My uncle living a short distance away and did not know what was happening came there.

**Chairman:** Now ask her whether she has any information where these people are?

**Witness 8:** No information

**Chairman:** Has anybody seen them?

**Witness 8:** No, not seen.

**Chairman:** Give all the particulars to the Secretariat.

**Testimony of Witness 7, Chavakachcheri Cultural Hall, 13 November, 2010**[47]

**Witness 7:** From 12th of December 2008 my husband is missing.

**Chairman:** Where was her husband taken into custody?

**Witness 7:** I don't know. Some people came to my house at midnight and called my husband out. They came and over the fence they said "Thambi, Thambi" come. He went out to see who they were. After a few minutes we didn't hear any sound so we went there to see him. There were about 10 or 15 people in Army uniform and they dragged him (away). At Murugan Kovil there is an Army camp. And there was a vehicle that proceeded towards Point Pedro.

**Chairman:** Does she have any information about these people?

**Witness 7:** No information

**Chairman:** No one has seen your husband anywhere?

**Witness 7:** No

**Chairman:** So give your particulars to that...

**Witness 7:** She has already given sir. She has come only to present the case.

**Chairman:** Yes, we will look into that.

Witness 9, a Justice of the Peace, testifying at the Divisional Secretary in Ariyalai, Jaffna said that after 2006 more than 10 people had been killed or murdered in his village. "The Grama Sewaka Officer of my Division was killed while on duty." He urged the LLRC to provide an allowance to the families of missing people and those who were killed so that they could afford to educate their children.[48]

Elsewhere in Sri Lanka's north and east killings were also reported. In their submission to the LLRC on behalf of the Catholic Diocese of Mannar, the Bishop of Mannar Rt. Rev Dr Rayappu Joseph, Rev Fr Victor Sosai, Rev Fr Xavier Croos under the heading "extrajudicial killings" presented a list of 166 people whom they said had been reported to them as killed during the last phase of the armed conflict, from Mannar district. The Bishop noted:

This number is not complete. Thousands of persons have been reported killed

during the three decade old war from the North and East, most of them, since 2007 and particularly in the last five months of war in 2009. This includes a large number from the district of Mannar. Rev Fr Pakiaranjith, a priest of our diocese was also killed on 26th September 2007 in Vellankulam Road near Thunnukai, while he was taking assistance to displaced people. Hundreds of civilians from the Mannar district have also been deliberately killed by the military at the beginning of the war in early 1980s, such as the mass massacre at 11th mile post on the Mannar – Medawachiya Road on 4th December 1984. Based on eyewitness testimonies, we believe thousands of people would have been killed in the last five months of war between January – May 2009 and we believe a large number of these people are also from the Mannar district."[49]

A witness from Chettikulam, near Vavuniya described the murder of a son, apparently killed by the LTTE, or someone claiming to be from the LTTE:

**Excerpt of Testimony of Witness 5, Chettikulam Divisional Secretary's Office, 14 August 2010**

**Witness 5:** I am from Chettikulam, Kanthinagar village. I came here to speak to you about my family but I am really happy to observe the proceedings here. .... About my personal matter, my son was abducted and taken away about one km away from my home and shot dead.

**Mrs Manohari Ramanathan:** Who shot him?

**Witness 5:** They gave the name of the LTTE and I think it might be anybody who was using the name of the LTTE. My son was selling some publications of the EPDP political party. While he was involved in that he was abducted. I was not able to recover his body immediately because those perpetrators were still standing there. Only after 8 months that I was able to visit that place again. I was able to visit that place with the police from Chettikulam and Vavuniya as well and we were able to recover only his skull. It was sent to Colombo for investigation. So far we have not heard any information about that. The CID comes and holds inquiry and they ask whether we have got the death certificate, but we don't have such a certificate. They asked me whether we could identify the persons who had abducted and killed my son. I told them that I cannot say that, because I don't know. But the villagers know. They are afraid to come forward and reveal their identities the reason for which you can easily understand. I request you, the Commission if possible to help me to obtain the death certificate of my son.

[Witness withdrew]

## இலங்கை அரச படையினரும் விடுதலைப் புலிகளும் செய்திருந்த ஷெல் தாக்குதல்கள்

பொதுமக்கள் தங்கியிருக்கின்ற பகுதிகளில் மருத்துவமனை போன்ற இடங்களிலும்கூட யுத்தத்தின் கடைசி கட்டங்களின்போது ஷெல் வீச்சுகள் நடந்திருந்தன என்பது இலங்கையில் தெரிவிக்கப்படும் மிக மோசமான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஒன்றாகும்.

ஐ.நா.மன்ற தலைமைச் செயலரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வழங்கிய அறிக்கையில் பின்வரும் நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இடம்பெற்றிருந்தன:

> 2008 செப்டர்ம்பருக்கும் 19 மே 2009க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில், இலங்கை இராணுவம் வன்னியில் தனது இராணுவ தாக்குதல்களை முன்னெடுப்பதற்கு பெரிய அளவிலும் பரவலாகவும் ஷெல் வீச்சை பயன்படுத்தியிருந்தது. இதனால் பெரிய எண்ணிக்கைகளில் பொதுமக்கள் கொல்லப்படிருந்தனர். வன்னி மக்களை தண்டிக்கும் விதமாக இந்த இராணுவ நடவடிக்கைகள் அமைந்திருந்தன. நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்த ஒரு நிலபரப்பில் 3 லட்சத்து 30 ஆயிரம் பேர் வரையிலானோர் சிக்குண்டிருந்தனர். ஷெல் வீச்சிலிருந்து இவர்கள் தப்பிக்க முயன்றாலும், விடுதலைப் புலிகள் இவர்களை பிடித்துவைத்திருந்தனர். இலங்கை அரசாங்கம் ஊடகங்கள் மற்றும் பிற விமர்சகர்களின் வாயை அடைக்கவும் மிரட்டிவைக்கவும் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களை விடுக்கவும், பயமுறுத்தும் விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் செய்திருந்தது. வெள்ளை வேன்களைப் பயன்படுத்தி ஆட்களைக் கடத்துதல், ஆட்கள் காணாமல்போகச் செய்தல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.
>
> யுத்தமற்றப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் சென்று குவிவதை அரசாங்கம் ஊக்குவித்தது ஆனால் அவ்வாறு யுத்தமற்றப் பகுதிகளாக அடுத்தடுத்து அறிவிக்கப்பட்ட மூன்று இடங்களில் அரச படையினர் பெரிய அளவில் ஷெல் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். கனரக ஆயுதங்களை பயன்படுத்தமாட்டோம் என்று கோடிகாட்டியிருந்த பின்னரும் அவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். ஐ.நா.மன்றப் பணியகம், உணவு விநியோகப் பாதைகள், கடற்கரைப் பகுதியில் இருந்து காயமடைந்தவர்களையும் அவர்களது உறவினர்களையும் ஏற்றிச் செல்வதற்காக வந்திருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கக் கப்பல்கள் ஆகியவற்றையும் அது தாக்கியிருந்தது. பாதிப்புகள் குறித்து தமது உளவு அமைப்புகளும், ஐ.நா. மன்றமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் பிறரும் தகவல் தந்திருந்தனர் என்றாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் தாக்குதல் நடத்தியிருந்தது. யுத்தின் இறுதிக் கட்டங்களில் உயிரிழந்த பொதுமக்களில் பெரும்பாலானோர் அரசாங்க ஷெல் வீச்சில் கொல்லப்பட்டவர்கள்தாம்.

யுத்த முன்னரங்கங்களில் இருந்த மருத்துவமனைகளில் அரசாங்கம் திட்டமிட்டு ஷெல் தாக்குதல் நடத்தியிருந்தது. வன்னிப் பகுதியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலுமே மோர்ட்டார் மற்றும் ஆர்டில்லரி குண்டுகள் விழுந்திருந்தன. மருத்துவமனைகள் எந்தெந்த இடங்களில் உள்ளன என்று அரசாங்கம் நன்கு அறிந்திருந்தும் சில மருத்துவமனைகளில் மீண்டும் மீண்டும் குண்டுகள் விழுந்தன.[50]

இவ்வகையான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு பதிலாக, இலங்கை இராணுவத்தின் செயல்களை நியாயப்படுத்தும் வாதத்தில் ஆணையம் கணிசமான நேரத்தை செலவிட்டிருந்தது என LLRCயின் விசாரணை அமர்வு பதிவுகள் காட்டுகின்றன. அரசாங்க ஆதரவு சாட்சிகளிடம் ஆணையாளர்கள் மென்மையாக நடந்துகொண்டதுக்கு மாறாக அரச படைகள் உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டிய சாட்சிகளை ஆணையாளர்கள் வறுத்தெடுத்தையும் அவதானிக்க முடிகிறது. அந்த சாட்சிகளின் நம்பகத்தன்மையை குலைப்பதையும் அரச படையினருக்கு பதிலாக விடுதலைப் புலிகளை குற்றம்சாட்ட அவர்களை இட்டுச்செல்வதுபோலவும் ஆணையாளர்கள் நடந்துகொண்டிருந்தனர்.

ஆணையாளர்கள் பாதிக்கப்பட்டவர்களை நடத்திய விதத்தை "அக்கறையின்றியும் நிராகரிக்கும் பாணியிலும்" இருந்தது என்று ஐ.நா. நிபுணர்கள் குழு வருணித்திருந்தது. உரிமை மீறல்கள் பற்றி தகவல் தந்தவர்களை ஆணையாளர்கள் கேள்வி கேட்ட விதத்தை "அரைகுறையாக ஏனாதானோவென்றிருந்து" என அவர்கள் சொலின்றனர். "ஆனால் பிற சந்தர்ப்பங்களில், பாதுகாப்பு படையினரின் நடத்தை பற்றி குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டபோது, அவர்களது குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்க சாத்தியமில்லை என்று ஆணையாளர்கள் வலிந்து வாதாடியிருந்தனர். அச்சாட்சிகள் கூறுவது நம்பத்தகுந்தது அல்ல என்று காட்டுவதற்காகவே அவர்களின் கூற்றில் உள்ள குறைகளை வலிந்து சுட்டிக்காட்டிருந்தனர்"[51], முல்லைத்தீவில் 20 செப்டம்பர் 2010 அன்று வாக்குமூலம் அளித்த ஒருவருக்கும் ஆணையாளர்களுக்கும் இடையே நெடுநேரம் நடந்த விவாதத்தை இதற்கு ஓர் உதாரணமாக நிபுணர் குழு அறிக்கை காட்டியுள்ளது. பொதுமக்கள் சென்ற படகு ஒன்றில் கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தி எட்டு பேரை கொன்றிருந்ததாக அந்த சாட்சி தெரிவித்திருந்தார்.[52]

ஷெல் வீச்சின் காரணமாக தம் குடும்பத்தவர்கள் உயிரிழந்ததையும் சாட்சிகள் தெரிவித்திருந்தனர். குறிப்பாக முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் சாட்சியமளித்தவர்கள் அவ்வாறு கூறினர். சில புகார்களில் மட்டும் ஷெல்வீச்சுக்கு காரணம் இலங்கை இராணுவத்தினரா அல்லது விடுதலைப் புலிகளா என்று தீர்மானிக்க ஆணையாளர்கள் முயன்றிருந்தனர். ஆனால் பிற புகார்களில் அவற்றை செய்யத் தவறியிருந்தனர்.

**Testimony of Witness 3, Mullaitivu Divisional Secretariat, 20 September 2010[53]**

**Witness 3:** I am at Battapalai. On the 16th of May 2009 we crossed over to the Army controlled area. While we were proceeding through the Mullivaikkal – myself, my eldest daughter, 2 grandchildren and my son-in-law, all were going. So we went into the Army controlled area. My eldest daughter was hit by a shell and she died. My eldest daughter she was hit by a shell; she died instantly. So my eldest son and my son-in-law took her and laid her at the bridge because she was dead. There was another shell attack at the spot and the Army had come, and one of my grand daughter's also was injured; that girl was taken by the Army.

**Q.** Who fired the shells?

**Witness 3:** Both sides; there were shelling from both sides.

**Q.** Now where is your grand daughter?

**A.** One grandchild died and those who came behind us said that my son-in-law is also dead and they said one grandchild was missing. So I don't know whether my grandson who sustained injuries is alive. The son-in-law died; one of the daughters died; and one of her grandchildren had sustained injuries but he was alive. She was told that he was alive. Now I want to find out whether you could trace that grandchild.

[end of testimony]

**Testimony of Witness 3, Chavakachcheri Cultural Hall, 13 November, 2010[54]**

**Witness 3:** My husband and my son died of shell attack at Puthukuduiruppu.

**Chairman:** When was that?

**Witness 3:** 22nd of January 2009. I have 2 daughters and they are studying. Now she says that father is no more; son is no more; she has 2 daughters; and she needs some financial help. She must be given some support.

**Chairman:** What she wants is financial assistance (or compensation)? Yes we will try to explore the possibility of getting you some financial assistance.

Application form she has filled it and brought.

**Chairman:** So ask her to hand it over to the Secretariat.

ஷெல் வீச்சிலிருந்து தப்பிப்பதற்காக தாங்கள் ஒவ்வொரு இடமாக மாறி மாறிப் போனதை சாட்சி ஒருவர் வருணித்தார். ஆனால் பெரும்பான்மையான வாக்குமூலங்கள் சின்னதாகவே இருந்தன:

Witness 4, in at the Divisional Secretariat in Poonagari told Commissioners:

> "…. As the shelling was there and to escape from the shellings we moved from place to place. No sooner we get to a point we dig a bunker and stay there, and when there is shellings we move from that place to another place. We were moving from place to place to avoid the shelling."[55]

இதிலே தான் தனது 17 வயது மகனை பறிகொடுத்ததாக அவர் சொன்னார். விடுதலைப் புலிகளால் அம்மகன் கடத்தப்பட்டதாக அவர் சொன்னார்.

நீர்வெளியில் பேசிய சாட்சி ஒருவர், பொக்கணையில் மனிதாபிமான உதவிப் பொருட்கள் வாங்குவதற்காக காத்திருந்தவர்கள் கொல்லப்பட்டதாக கூறினார்.

**Excerpt of Testimony by Witness 9 Neerveli, Jaffna**

> **Witness 9**: …Something which we cannot digest very precisely I want to tell you. At an area called Pokkanai when we were waiting in the queue to collect milk powder there was shelling and a lot of people died. Again when we were in a place where the LTTE was selling some short eats (one particular item for Rs.50), there also again they were shelling and I saw 35-40 people dying on the spot. We were economically well off and prosperous. We had Land Master, we had tractors, we had generators, we have everything. Now we have lost all our belongings. We cannot easily forget all what we saw there; it is still in our memory (at the last stages of the war in Wanni).
>
> **Rapporteur**: Respondent was asked whether he would like to give evidence in camera and he stated as follows:
>
> **Witness 9**: Things were obvious; everybody has seen it; there is nothing to hide.

பூனகரியில் நடந்த விசாரணை அமர்வில் ஒரு சாட்சி நெடிய வாக்குமூலம் வழங்க அரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இருதரப்பும் நடந்துகொண்ட விதத்தை விவரமாக அவர் விமர்சித்திருந்தார். ஷெல் வீச்சு காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி அவர் தெளிவாக விளக்கினார்.:

**Excerpt of Testimony of Witness 5, Poonagari Common Hall, 19 September 2010**[56]

> After the liberation of the Eastern Province [in 2007] they started the war in the North and called it a humanitarian operation. Gradually we were displaced from Mukaman area and we moved towards Kilinochchi. People who were displaced in Mannar came to Jayapuram area and then through Wanneri they too came to Kilinochchi. While we were in Kilinochchi there were enough attacks, aerial attacks, aerial bombing as well as shelling. After that we were displaced to Pullaiyanpokuna, Wanneri and Watakachchi areas. At this point of time the LTTE supporters and their families were given safe passage to the South of Sri Lanka as well as to India. The other people who were non supporters of the LTTE and those families who have lost their children to the LTTE we were confined to this area. At the outset the LTTE

categorically said that it was the duty of each and every family to provide at least one member of the family as a fighter to the LTTE movement. After that our young boys and girls who had not received even one month's training were sent to the front. At the same time the LTTE announced that all able bodied men would have to come and work for them to construct bunkers and to attend to other duties. At this time the people were really frustrated and they were undergoing a state of trauma. At this point the people tried to escape the grip of the LTTE. Some people managed to travel with great difficulty through the jungles in order to escape from the LTTE but when they arrived at those areas were controlled by the Army. The Army also attacked them.

> That happened I think in 1989 period after the IPKF [Indian Peace Keeping Force] went off. Prabha ordered everybody to launch the attack. Really I was not in Batticaloa at the time I was in Jaffna but I heard that news. They were arrested and handed over to Pottu, Intelligent Wing, after that nobody knows what happened to them. That is the real story. That is done by the ... All brutal things done by Prabhakaran because I was always involved with the military wing. I was the military wing leader – one of the leaders. Then we are always involved with the military operations and we spent our time in the battle front and everywhere. Bomb blasts, killing of civilians, everything is done by them. Several times I also tried to correct Prabhakaran. After each incident I told him don't do this one; we joined for the freedom fighters like that, we are called freedom fighters that is why I also joined, everybody joined, then don't do this one. But he never gave a proper answer and he never stopped also. Again and again, twin tower bomb blast, Dalada Maligawa bomb blast, then everywhere bomb blast. Continuously they were doing that.[72]

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் சரித்திரத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சம்பவம் மற்றும் கருணா தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்ட வேறு பல சம்பவங்கள் பற்றியும் உண்மையை வெளிக்கொண்டுவரும் நோக்கில் குற்றவாளிகளைக் கண்டறியும் நோக்கில் ஆணையாளர்கள் விசாரணையை முன்னெடுத்திருக்கவில்லை.

**சிவநேசத்துரை சந்திரகாந்தன்**

பிள்ளையான் என்றும் அழைக்கப்படுகின்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் ஆவார். சிறார் போராளியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, படிப்படியாக இயக்கத்தில் மேலே வந்தவர். (மேலே விவாதிக்கப்பட்ட) கருணாவின் கீழ் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (டி.எம்.வி.பி.) அமைப்பின் துணைத்தலைவராக இருந்து பின்னர் தலைவரானவர். இவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தபோதும் சரி, டி.எம்.வி.பி. அமைப்பிற்கு வந்த பின்னரும் சரி பொதுமக்கள் மீதான பல தாக்குதல்களில் இவருக்கு நேரடி சம்பந்தம் உள்ளது என குற்றம்சாட்டப்படுகிறது. ஆட்கடத்தல்கள், கொலைகள் உள்ளிட்ட பல மனித உரிமை மீறல்கள் – குறிப்பாக கருணா ஆதரவாளர்கள் இடையிடையே ஏற்பட்ட தகராறுகளின்போது பல மனி உரிமை மீறல்களை இவரது தற்போதைய ஆதரவாளர்கள் செய்த்தாக குற்றம்சாட்டப்படுகிறது. சந்திரகாந்தனின் விசாரணை மற்றவர்களுடையதைவிட பலவீனமானதாக கையாளப்பட்டிருந்தது. உண்மையை வெளிக்கொண்டும் எண்ணம் LLRC க்கு இருந்திருக்கவில்லை.

பிள்ளையான் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் கடந்த காலத்தில் செய்த மற்றும்

தற்காலத்தில் செய்துவருவதாக சொல்லப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றிய பொதுப்படையான கவலைகள் பற்றி LLRC அவரிடம் கேட்டபோது, என்ன குற்றம் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படி அவர் கூறினார். ஆனால் ஆணையாளர்களோ அந்த விஷயத்தை விட்டுவிட்டு வேறு விஷயங்களுக்கு சென்றிருந்தனர். ஆகவே குற்றங்கள் செய்தவர்களை அவற்றுக்கு பதில் சொல்ல வைக்கவும் சட்டத்தின் முன் நிறுத்தவும் LLRCக்கு ஆர்வம் இல்லை என்று தெளிவாகத் தெரிந்தது. வெறுமனே தீர்மானங்களை வாசிக்கும் அளவிலேயே ஆணைக்குழு விசாரணை செய்தது:

**Excerpt of exchanges between Commissioners and Chief Minister Sivanesathurai Chandrakanthan[73]**

**Mr Palihakkara:** Thank you Mr Santhirakanthan [as the name appears in the transcript, hereafter Amnesty International will use the more common spelling, Chandrakanthan]. I have two questions. Firstly, when we visited the Eastern Province people have told us that although the LTTE is no more, LTTE-like practices continue. They complain about harassment, extortions and sometimes problems about children. What are your views about solutions to this, as to what should be done?

**Chandrakanthan:** Very importantly there are some incidents which do take place. If you could be very specific about and directly say what it is I may be able to give an answer. But like in other provinces, like in other areas, similar incidents do take place in our area also. But through the legal and judicial means we are trying to take action.

**Palihakkara:** What are the actions that can be taken?

**Chandrakanthan:** If you could specifically say about the incidents I may be able to tell you, but there are one or two abductions that have taken place.

**Palihakkara:** Well I have been specific enough. I think they also mentioned some political party names.

**Chandrakanthan:** I also saw it in the papers. It may be those incidents similar to what I have told you now. Lot of incidents have taken place between the period 2002 to 2008. For example, if you take the framework of our organizations you will see that in one particular family, one member of the family will be a supporter of the LTTE and the other member of the very same family will be a supporter of the TMVP. So there were confrontations or conflict of opinions based on that. Through a legal framework, a legal system these matters have been taken up and inquiries or investigations are proceeding.

குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்கவும், தெளிவற்ற பதில்கள் வரும்போது தொடர்ந்து விசாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவும், பரிகாரம் கிடைக்கச் செய்யவும் ஆணையாளர்கள் தவறியிருந்தனர். பின்னர்,

காணிப் பிரச்சினைகள் பற்றிப் பேசும்போது, மட்டக்களப்பில் வாக்குமூலம் அளித்த சாட்சிகள் சந்திரகாந்தனுக்கு எதிராகப் பேசுவதற்கு பயந்ததாக ஆணையாளர் ஒருவர் கூறினார். ஆனால் அந்த விவகாரத்தை அவர் ஆழமாக விசாரிக்கவில்லை:

> **Mrs Manohari Ramanathan: ...**We have been to Batticaloa and when we came back we were very sad. Lot of people in Batticaloa spoke to us in camera. They say that they were unable to get their lands back, unable to sell their lands because of the conflict they got displaced. We asked them why they are so scared. Of you.
>
> **Chandrakanthan:** I feel sorry. If that is the situation there then I really feel sorry for them.
>
> **Ramanathan:** If they are frightened of you is that the truth or is it a rumour?
>
> **Chandrakanthan:** They should not be frightened. They should not be reluctant or have any fear to claim their rights and get their rights, and whenever their problems are surfaced I immediately go to the place instantly and try to solve the problem, and if it is possible by you and if you have confidence and trust in me please tell me those problems, submit those problems to me, and I will study it and solve it.
>
> **Ramanathan:** We told them so, but they are frightened.

ஆயுதக் குழு ஒன்றின் (தற்போதையத்) தலைவராக இருக்கின்ற பிள்ளையானுக்கு சாட்சிகள் பயப்பட்ட விஷயத்தை ஒழுங்காக புரிந்துகொள்ள LLRC தவறியது என்பதைத் தாண்டி, அவருக்கு சார்பாகப் அது பேசியது என்றும் தெரிகிறது. இது வியப்பளிப்பதாக உள்ளது.

சந்திரகாந்தனுடன் நடந்த விசாரணையில் LLRC தலைமை ஆணையாளர், 1990ல் கிழக்கு இலங்கையில் சரணடைந்த பொலிஸ்காரர்கள் 600 பேருக்கும் அதிகமானோரை விடுதலைப் புலிகள் கொன்ற விவகாரத்தைப் பற்றி மறுபடியும் கேட்டார். அந்த படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்த ஆட்கள் தற்போது சாட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளனர் ("உங்களது குழுவில் உறுப்பினராக உள்ளவர்கள்") என்பதையும் ஆணையாளர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் சம்பந்தப்பட்ட ஆட்கள் யார் என்று அடையாளம் காணும் நோக்கில் தொடர்ந்து கேள்வி கேட்காமல், அவ்விதமான சம்பவங்களுக்கு பொதுப்படையாக மன்னிப்பு கேட்பது பற்றி சாட்சி என்ன நினைக்கிறார் என்று மட்டும் ஆணையாளர் கேட்டிருந்தார். இலங்கையின் நெடுங்கால உள்நாட்டு யுத்த சரித்திரத்தில் பெரியதொரு சம்பவமாக அமைந்திருக்கும் இச்சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் முயற்சி எதனையுமே LLRC எடுக்கவில்லை என்பது விநோதமாக உள்ளது.

இந்தப் படுகொலையில் தனக்கு சம்பந்தம் இருப்பதாக கூறப்படுவதை சந்திரகாந்தன் மறுத்தார். தனது முன்னாள் தளபதியும் இந்நாள் அரசியல் வைரியுமான அமைச்சர் முரளீதரன்தான் இவ்விஷயத்தில் மன்னிப்பு கோர வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார்:

**Chairman:** Mr Chandrakanthan, you know that over 600 policemen were asked to surrender and they were all lined up and shot and persons who are members of your group were instrumental in that massacre. Now, don't you think for the purpose of bringing about ethnic reconciliation that your group should make a public apology to the members of the families of those officers who were killed?

**Chandrakanthan:** That is a good question that you have asked. If we are asked to ask for a public pardon for being members of the LTTE....

**Chairman:** No. Not pardon, but apology.

**Chandrakanthan:** As I told you in the course of my evidence earlier, on the 11th of June 1990 I was in school at that time and I know that the LTTE encircled many areas. I went to join the LTTE on the 4th of February 1991, but I remember having been told by the people that all those police officers who were encircled and taken by the LTTE were killed after two or three weeks. I think that if you say that we must make a public apology to those people, I think the most appropriate person would be Mr Karuna who was the leader at that time.

அதேபோல பின்வரும் விவாதமும் சஞ்சலம் தருவதாகவே இருக்கிறது. இலங்கை அரசாங்கப் படையினர் உரிமை மீறல்களில் ஈடுபட்டதை தான் கண்டதுண்டா என்று சந்திரகாந்தனிடம் கேட்கப்பட்டது. 1990களில் ஒரு பதின்ம வயது இளைஞனாக தான் கண்டிருந்த அட்டூழியங்களை அவர் பட்டியலிட்டிருந்தார். அச்சமயத்தில் ஆணையாளர் அவரிடம் கேட்டிருந்த கேள்விகள் எல்லாம் "யுத்தத்தின் அங்கமாக" இவையனைத்தையும் நியாயப்படுத்திவிட முடியும் என்று கூறுவதுபோல அமைந்திருந்தன. மேலும் சாட்சி சொன்ன சம்பவங்கள் எல்லாம் எந்தெந்த இடங்களில் யார் யாரால் செய்யப்பட்டன என்று கண்டறிவதற்கான ஆழமான கேள்விகள் எதுவும் அவரிடம் கேட்கப்பட்டிருக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் பொருத்தமான பரிகாரம் பொதுமனிப்புதான் என்று அவர்கள் முடிவுதந்திருந்தனர்.

**Mr M P Paranagama:** In fairness to what Chairman asked you, you might think that we are only asking about the wrong done by the LTTE. Can you say of any instance where our forces have done any grave crime like that?

**Chandrakanthan:** I was an eye-witness to similar incidents by the forces in the year 1990.

**Paranagama:** How many incidents?

**Chandrakanthan:** I was an eye-witness to an incident where one Seeni Thambi who was an immediate neighbour to me was shot by the forces, and I saw partly burnt bodies scattered on the roads at that time, and there was a special force that was brought to our area at that time and they were called *vettu* party, that is slaughtering

group. I have seen many people taken alive and shot, cut and thrown into the rivers. I saw two of my classmates taken away at midnight and I saw one Rasa who was another neighbour of mine, at midnight the army came took him and he prayed at their feet, worshipped at their feet, but they kicked him and I saw them shooting him on the spot. I was a teenager of 16 years and I got assaulted by the army.

**Paranagama:** But weren't that a part of the war that was at the time?

**Chandrakanthan:** Yes, of course. We must look at the political background for those incidents and all the political leaders and all the political leaders who worked or who injected these incidents must make a public apology.

**Chairman:** Mr Chandrakanthan, I also concede that if there were excesses the government also must tender an apology. Now, I must take this opportunity for thanking you for coming over here and expressing your views very candidly and I think some of the views you expressed were very important and we will take that into consideration in formulating our recommendations. Thank you.

[விசாரணை அமர்வு முடிவுக்கு வந்தது]

LLRC ஆணைக்குழுவின் முன்பு சாட்சியம் அளித்த மற்ற சாட்சிகளைப் போலவே, டக்ளஸ் தேவானந்தா, விநாயகமூர்த்தி முரளீதரன், சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோருக்கும் ஜனாதிபதி உத்திரவாதம் வழங்கியதற்கு இணங்க விசாரணை ஆணையங்கள் சட்டம் பிரிவு 14ன் கீழ் பாதுகாப்பு உண்டு. (LLRC உருவாக்கப்பட்டது இச்சட்டத்தின் கீழ்தான்). சாட்சிகளுக்கு சட்டங்களிலிருந்து விசேட விலக்களிப்பதாக இப்பிரிவு அமைந்துள்ளது. ஆகவே ஆணையத்தின் முன்பு இவர்கள் சொல்வதை வைத்து அவர்கள் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது.

## சாட்சிகளை விசாரித்தபோது தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை ஆணையாளர்கள் திணித்திருந்தனர்

சாட்சிகளின் வாக்குமூலங்களை ஆராய்வதைத் தாண்டி தனிப்பட்ட முறையில் கருத்து தலையீடுகள் செய்வதாக ஆணையாளர்கள் நடந்துகொண்டிருந்தனர். விசாரணை ஆணைய செயற்பாடுகளில் தமது சொந்த அபிப்பிராயங்களை அவர்கள் திணிக்கின்றனர் என்றும் சிலவேளை தெரிந்தது:

**Excerpt of exchange between Commission Chair, C R de Silva and Major General Kamal Gooneratne**

**Chairman:** General there is one thing that concerns us. We are fully possessed of what you are saying but there is one thing that concerns us because this was a report by the International Press. Regarding the surrender procedures and also the fact that the persons who were surrendering were assassinated. Now there was an allegation like that. Now we would like to have your views on that because that is very relevant to our ...to the final recommendations that we propose to make.

**Security Forces Commander, Wanni:** Yes, I don’t agree with that allegation sir

because I told you that we went into action of this humanitarian operation with a clear mind set and whoever surrendered were handed over to the authorities and nobody was assassinated as surrendees.

**Chairman:** As a matter of fact some of the people who surrendered were questioned by us and they said that the Forces were assisting them and there was no question of them being in any way humiliated or in any way subject to any type of force by the Forces. So that is why I asked you this question because there were some of the LTTE cadres who had surrendered who informed us that while surrendering that the Army was very helpful and in other words the Army went to the extent of guiding them to avoid the land mines and other obstacles. That was what they said. So in view of this allegation that was levelled against the Forces that is why I asked this question from you so that you deny any type of force used by the Armed Forces on the persons who were surrendering.

**Security Forces Commander, Wanni:** Correct sir. I can strongly deny this allegation and in addition to that we being professionals in the military field we consider a surrendered LTTE cadre as a very valuable source of information. So unless otherwise you treat him properly he will not come out with his heart out.

**Excerpt of exchange between Commissioner Palihakkara and Commander of the Navy Tisara Samarasinghe[74]**

**Commander:** Finally, let me wind up, I don't know whether this letter has been forwarded by any other person Secretary would have sent. We worked very closely with the ICRC and they know exactly, this Mr Paul when I was in charge of operations in 2009, we were very clear of our attitude and the mission, that is filtered from the top of the country when as it is a said it is a humanitarian operation, zero casualties, help people and it was demonstrated that soldiering is a noble profession so I wind up by saying that and which was said by none other than the head of the ICRC.

**Mr. Palihakkara:** Thank you very much Commander knowing your commitment to humanitarian principles personally. This to ask you, during the last part of the operation I think you described the role you played, the Navy together with the CBS (sic) to maintain the only life line to those 300,000 people held hostage by the LTTE and we would like to for the Commission's record get those details, I think you had a slide on that about the supplies and also on your return journey you took the wounded and amongst would have been LTTE cadres, those details and also my question to you, specially the Navy under the ceasefire and since our mandate also includes lessons learnt part, we would like your thoughts on that. The Navy was actually excluded, I wouldn't say excluded but the naval surveillance was excluded from the ceasefire agreement and the seas was basically free for the LTTE, having suffered that handicap and the Navy going to the rescue assistance to the people trapped by the LTTE at that point it was a dilemma. When you supply food you know very well a part of that goes to the fighting cadres so in effect you had to feed and fight both. How was that handled basically that is one and we would like to have the date (sic) [presumably means data] from you or the CDS [Chief of Defence Staff].

## அரசாங்கத்தை விமர்சித்த நிபுணர்களையும் சாட்சிகளையும் கடுமையாக எதிர்க்கேள்வி கேட்டது

சாட்சியம் வழங்கிய அதிகாரிகளை மென்மையாக நோகாமல் விசாரித்ததற்கு மாறாக அரசாங்கத்தின் மீது குறைகூறுகிற அல்லது குற்றம்சாட்டுகிற சாட்சிகளின் வாக்குமூலங்களை ஆணையாளர்கள் கடுமையாக எதிர்க்கேள்வி கேட்டு விசாரித்தனர் என்று விசாரணை அமர்வுகளின் பதிவுகள் காட்டுகின்றன. மற்ற சாட்சிகள் கொடுத்த வாக்குமூலங்களுக்கு முரணாக அதிகாரிகளின் வாக்குமூலங்கள் அமைந்திருந்தன என்றாலும் அந்த அதிகாரிகளின் கூற்றை மேற்கோள்காட்டி ஆணையாளர்கள் முடிவுகளும் பரிந்துரைகளும் வழங்கியிருந்ததைக் காண முடிந்தது. இன்னும் சில சந்தர்ப்பங்களில், சாட்சிகள் வழங்கும் வாக்குமூலங்கள் உண்மையல்ல என்பது போல ஆணையாளர்கள் வெளிப்படையாகவே பேசியிருந்தனர்.

**Excerpt of exchange between Commission Chair, C.R. de Silva and Sri Lanka's Anglican Bishop – Rev Duleep de Chickera**[75]

> …**Bishop Rev Duleep de Chickera:** Certainly the military has done a great deal of good work in the post-war situation and that is not being questioned. But there is a perception that 100,000 military families will be settled in that area. Now 100,000 military families – if this is correct – would amount to one fourth of that population and that is going to have an impact on the demography of that area.
>
> **Chairman:** Actually we asked this same question from Mr Gotabhaya Rajapaksa and he said there is absolutely no truth in that type of settlement. There is absolutely no intention on the part of the Government to settle military families and he completely denied because we asked this question, because there were certain witnesses who came before us who expressed certain fears about the change of demographic patterns by the settlement of these people. But he completely denied that position.

இலங்கையின் ஆயுத மோதல் என்பது இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டது. தமிழ் சிறுபான்மை சமூகத்துக்காக தனி நாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும், தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் போராடியிருந்தனர். ஆகவே இலங்கையைப் பொறுத்த அளவில் ஒரு இடத்தில் வாழும் மக்கள், அவர்களுடைய இனப் பின்புலம் எல்லாம் மிகவும் முக்கியமானது. தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சென்று புதிய பொருளீட்டும் வாய்ப்புகளை ஏன் தேடக்கூடாது என்றா சிங்கள மக்கள் பலர் நினைக்கின்றனர். அல்லது வன்முறை அதிகரித்ததன் காரணமாக அப்பகுதிகளில் இருந்து வெளியேற

நேரந்தவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதிகளுக்குத் திரும்ப நினைக்கின்றனர். ஆனால் மறுபக்கம் முந்தைய யுத்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் சமூகத்தவரோ, யுத்தம் முடிந்ததை காரணமாக வைத்து எங்கே சிங்களப் பெரும்பான்மையினர் (முதலில் இராணுவத்தினர் குடும்பங்கள் என ஆரம்பித்து பின்னர் சிறுகச் சிறுக) தமது பகுதிகளுக்கு வந்து தங்களிடம் இருந்துவருகின்ற இடங்களை எடுத்துவிடுவார்களோ என்று அஞ்சுகின்றனர். இந்நிலையால் காணிக்கும், பொருளாதார வளங்களுக்கும், அரசியல் மற்றும் கலாச்சார மேலாண்மைக்கும் இரு இனங்களிடையே போட்டி உருவாகியுள்ளது. இந்த உணர்வை பல்வேறு தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் தங்கள் வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் முஸ்லிம் சிறுபான்மை இனம் என்பது, , தமிழ் ஆகிய இரு இனங்களையும் விட கணிசமான அளவில் சிறியது. இவ்வினத்தில் பெரும்பான்மையானோர் தமிழ் பேசுகின்றவர்கள்தான். யுத்தத்தின்போது அரசியல் சக்திகள் தமிழர்கள் முஸ்லிம்கள் இடையிலான வேற்றுமைகளையும் பயன்படுத்திக் கொண்டனர். இதன் காரணமாக இவ்விரு இனங்கள் இடையில் வன்முறையும், மனித உரிமை மீறல்களும் நடந்திருந்தன. கிழக்கில் முஸ்லிகள் படுகொலை செய்யப்பட்டது, தமிழ் கிராமவாசிகள் கொல்லப்பட்டது, வட இலங்கையில் வாழ்ந்துவந்த முஸ்லிம்கள் 1990ல் அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்டது போன்றவை நிகழ்ந்திருந்தன.

**Excerpt of exchange between Commission Members and M I M Mohideen, Executive Director, Muslim Documentation Centre:**[76]

> **Dr Rohan Perera:** Thank you very much Mr Mohideen for your submissions, you did refer to a particular incident I believe in Muttur. You referred to the fact that both the LTTE and the security forces attacks resulted in civilian deaths. Could you shed more light on this. Was it a case of deliberate targeting of civilian population or installations or were the civilians caught in a cross fire between the LTTE and the security forces, were the LTTE using civilians as a buffer as part of a strategy, so was it a case of deliberate targeting or civilians being caught in a cross fire. Could you clarify please.
>
> **Mr Mohideen:** ... they never specifically targeted Muslims but what happened had Muttur been a Sinhala dominated area, the approach would have been entirely different, they would have considered the security of the people who were there the Sinhalese, on the other hand if Muttur had been a Tamil dominated area, LTTE also would also have seen that the Tamils are not seriously affected by this war. But these two parties, the government forces and the LTTE were not interested in the security of the majority community, the Muslims and also those people there, but to answer the question here, they never cared for the security of the majority Muslim people.
>
> LTTE abducted 200 people and thousands of people left the place because they

had no food, no water, nothing for 48 hours. The government forces did nothing as far as the safety of the Muslims [were] concerned. Therefore, what I am trying to say here is the responsibility of the government to see that innocent people are not victimized. War crimes, regardless they were firing at innocent people, they rocketed, they bombed the schools, the hospitals, the mosques all those places.

My experience in this is that the government forces, we were not looking for any consideration or safeguard from the LTTE. We were promised, don't leave Muttur the government security forces would safeguard you. Shifting of the 400 military personnel who were stationed in Kinniya to Mavilaru gave an opening to the LTTE to come and capture and massacre the Muslims. Muslims were not only massacred in Muttur, they have been killing Muslims all over the north east so they wanted to kill as many Muslims as possible. This war gave them a good opportunity and the government forces did nothing. We can call it as neglected by our experience the lessons that we have learnt is that they never cared for it, neglecting is something and don't care let anybody come kill anybody and go, something like that attitude. Our people the Muslims lost all hope because we never supported terrorism.

**Dr Rohan Perera:** Just to sum up in the light of that clarification, your position is that rather than deliberate targeting, it was failure to take adequate precautions where civilians were concerned, failure to take adequate precautions to protect civilians rather than a matter of deliberate targeting. That's your position?

**Mr Mohideen**. My position is, again I am repeating, if Muttur had been a Sinhala majority area government forces would have adopted a different procedure to get rid of the LTTE, if Muttur was a Tamil majority area, the LTTE would have adopted a different procedure. This war is a crime against the Muslims.

**Mr Hangawatte:** Mr Mohideen, thank you for coming. When you say that the forces failed to provide adequate security which resulted in some massacre by the LTTE, you are assuming that this is the case, there is no evidence to support that, I guess. Do you have any? I mean you are just assuming because it was a Muslim area they failed to provide adequate security. Why I am saying this is that there were many Sinhala villages in the East as well where the villagers had been massacred by the LTTE according to documented data and whole villages have been expelled. Again did the forces fail to provide security because these were Sinhala villages.

**Mr Mohideen**. I am not directly accusing that they have been deliberately targeting or committing families became refugees. 32 Muslims have been killed, 7 are still missing, that is sufficient evidence for us to prove that this war has caused so much of damages to the Muslim interest.

**Mr Hangawatte:** I would grant you that, just like it caused damages to other populations as well.

**Mr Mohideen:** The approach was entirely different with regard to Muslims.

அதேபோல, வடக்கிலும் கிழக்கிலும் நடந்த விசாரணை அமர்வுகளின்போது[77], சில

முக்கிய சாட்சியங்கள் இலங்கை அரசாங்கத்தை விமர்சித்தும், அல்லது மனித உரிமை மீறல்களாக அமையக்கூடிய விடயங்களை குறிப்பிட்டும் பேசியபோது, பேச்சை திசை திருப்பும் வகையிலோ அல்லது இலங்கை அரசாங்கத்தை விமர்சனங்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலோ ஆணையாளர்கள் செயல்பட்டிருந்தனர். இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றத்தை உறுதிப்படுத்தும் வகையிலான தடயங்கள் பற்றிப் பேசாமல் நழுவிக்கொண்டுபோக LLRC முயற்சித்தது என்பதற்கு முக்கிய உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் தனது வாக்குமூலத்தில், யுத்தமற்ற பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களில் விடுதலைப் புலிகளிடம் எவ்வித ஆயுதமும் இருந்திருக்கவில்லை என்று வாக்குமூலம் அளித்திருந்தார். பொதுமக்களை இலக்குவைத்து தாக்கக்கூடாது என்ற சட்ட விதியை மீறியது அல்லது இராணுவ நிலைகளை பொதுமக்கள் உள்ள இடங்களுக்கு அருகில் சென்று வைத்து தெரிந்தே அவர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தியது போன்றவற்றை விடுதலைப் புலிகள் செய்தார்களா, இலங்கை அரசாங்தினர் செய்தார்களா அல்லது இருதரப்புமே செய்தார்களா என்பனவற்றை உறுதிப்படுத்த இந்த வாக்குமூலம் மிகவும் முக்கியம். அப்படியிருந்தும் மேலும் உண்மைகளை வெளிக்கொண்டுவர முயலுவதை விட்டுவிட்டு, இலங்கை அரசாங்கத்தின் நிலைபாட்டை உறுதிப்படுத்துவதிலேயே LLRC அதிக அக்கறை காட்டியிருந்தது:

**Excerpt of exchange between Commissioner Palihakkara and a high profile surrendered member of the LTTE media wing in St Anthony's Church, Kayts, 14 November 2010**

**Mr Palihakkara:** Do you have any idea of civilian casualties?

**Witness 13:** No

**Mr Palihakkara:** If the LTTE had not used the civilians as human shields could not the death toll have been minimized.

**Witness 13:** What really happened was at the last stage of the [battle] the people converged to a very narrow area of Mathalan and Kakanai. The LTTE launched their shelling attacks on the army from these places. The government forces retaliated to the spot where the LTTE was staying, as a result there was a number of deaths which is why I referred to both sides. At the last phase of the battle if the LTTE has allowed these people to go out all these casualties could have been avoided.

**Mr Palihakkara:** Did the LTTE bring in arms into the no fire zone?

**Witness13:** There was no weapons to be seen.

**Mr Palihakkara:** There were three no fire zones. The LTTE was firing from the no fire zone.

**Witness 13:** Neither side respected the no fire zone.[78]

## பாதிக்கப்பட்டவர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தத் தவறியது

முன்னாள் யுத்தப் பிரதேசங்களில் விசாரணை அமர்வுகளை நடத்தப்போவதாக LLRC அறிவித்தபோது பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் அவற்றில் சாட்சியம் வழங்க முன்வந்திருந்தனர். அவர்களில் சிலர் தங்களுக்கு அதிலுள்ள பெரும் ஆபத்திருப்பதை உணர்ந்தும் முன்வந்திருந்தனர். (நேரம் குறைவாக இருப்பதன் காரணத்தால் எழுத்துமூலமாக வாக்குமூலங்களைக் கொடுத்துவிடுங்கள் என பெரும்பான்மையானோரிடம் சொல்லபட்டிருந்தது.) பாதுகாப்புப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று நம்பப்படும் தமது காணாமல்போன உறவுக்காரர்களை தேடிக்கொண்டிருக்கும் தமிழ்ப் பெண்கள் பலரும் இதில் அடங்குவர். அரசபடைகள் அல்லது விடுதலைப் புலிகள் பலவந்தமாக ஆட்களைப் பிடித்துச் சென்றது உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாக இவர்களில் சிலர் தெரிவித்திருந்தனர்.

துஷ்பிரயோகங்கள் நடந்திருந்தன என்பதற்கான முக்கிய குற்றச்சாட்டுகளை வடக்கிலும் கிழக்கிலும் நடந்த LLRC விசாரணை அமர்வுகள் வெளிக்கொணர்ந்திருந்தன. ஆனால் அந்த குற்றச்சாட்டுகளை ஆழமாக விசாரிக்க ஆணையாளர்கள் தவறியிருந்தனர் என்று விசாரணை அமர்வு நடவடிக்கைகளின் பதிவுக் குறிப்புகள் காட்டுகின்றன. பல இடங்களில் விசாரணை அமர்வுகள் சட்டென முடித்துக்கொள்ளப்பட்டன. சாட்சிகளுக்கு ஆணையாளர்கள் தெரிவித்த பதில்களும் பல சந்தர்ப்பங்களில் கடனே என்ற பாணியில்தான் இருந்தன. தொடர்ந்து விசாரிக்கும் வகையான கேள்விகளை மிக அரிதாகவே அவர்கள் கேட்டிருந்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்துமூல புகார்களை அனுப்பிவைக்கிறோம் என்று கூறுவதோடு அவர்கள் நிறுத்திக்கொண்டனர். கீழே வருவது LLRC இணையதளத்தில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்ப இரண்டு விசாரணை அமர்வுகளின் முழுமையான நடவடிக்கை பதிவுக் குறிப்புகள் ஆகும். இப்பகுதியில் நடந்த பிற விசாரணை அமர்வுகளைப் போலவே, இவற்றில் நடந்த சின்ன உரையாடல்கள் மூலமாகவும், பரிவு ஏதுமற்ற முறையில் இந்த விசாரணைகள் நடந்துள்ளன என்பதைப் பார்க்கும்போது சஞ்சலம் ஏற்படுகின்றது:

**Testimony of Witness 9, District Secretariat Kilinochchi, 18 September 2010**[79]

> **Witness 9:** My son (X2) is under detention in the Welikanda Detention Camp. I have 4 daughters and my husband cannot do any work because he has been afflicted. The Army wanted all the people who had anything to do with the LTTE to register their names, so my son went and registered his name. They promised to release them within 6 months. So far they have not released them.
>
> **Q**. Tell her that we will be writing to the authorities.
>
> **Witness 9:** Please help us. We have registered a complaint … We have been

spending quite a lot of time. We went to Vavuniya Police also several times to make a complaint.

**Witness 9:** They promised to release them within 6 months, now it is more than a year.

**Q**. Right, right.

**Testimony of Witness 12, Gurunagar Cultural Hall, Jaffna, 12 November 2010**[80]

**Chairman:** Did you give particulars about a missing person?

**Translator** [apparently answering for Witness 12]**:** Yesterday she gave sir.

**Chairman:** Yesterday you gave. We did not have time.

**Witness 12:** I have 4 children. I haven't any support or any help. I don't know the whereabouts of my husband. Please try to trace him.

**Chairman:** We will try to do that.

**Witness 12:** My eldest son is 14; he is a school boy.

**Chairman** [apparently to translator]**:** Yesterday they gave it; they can't expect us to go through it today? You tell them.

வடக்கில் நடந்த விசாரணை அமர்வுகளை கண்காணித்த அரசு சாரா அமைப்புகளின் பார்வையாளர்கள், நிறைய எண்ணிக்கையிலான பொதுமக்கள் புகார்களுடன் வாக்குமூலம் அளிக்க முன்வந்ததை கையாள LLRC தயாராக இருந்திருக்கவில்லை என்று கூறினர். ஒருவரிடம் இருந்து வாக்குமூலம் பெறுவதற்கு மிகக் குறைந்த அவகாசமே ஒதுக்கப்பட்டிருந்தது என்றும், ஆணையாளர்களுக்கு தமிழிலிருந்து மொழிமாற்றிச் சொல்ல போதிய ஆட்கள் இல்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மேலும், LLRC முன்பு வாக்கு மூலம் அளித்தவர்களுக்கு உதவிகள் என்று எதுவும் கிடைத்திருக்கவில்லை. ஆனால் புதுப்பிக்கப்பட்ட கொள்கைகளின் தொகுதி "சமூகப் பணியாளர்கள் மற்றும்/அல்லது மனநல நிபுணர்கள் போன்றோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும், இந்த சேவைகள் பாதிக்கப்பட்டவரின் மொழியிலேயே அமைந்திருப்பது நல்லது, அவர்கள் வாக்குமூலம் வழங்கும் சமயத்திலும் அதன் பின்னரும் இந்த உதவிகள் கிடைக்க வேண்டும். குறிப்பாக பாலியல் வன்முறை சம்பவங்களில் இவ்வகையான உதவிகள் கிடைக்க வேண்டும்."[81] என்று கூறுகிறது. "வாக்குமூலம் வழங்க வருவதற்கான

சாட்சிகளுக்கு ஏற்படக்கூடிய செலவுகள் அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்."[82] என்றும் இந்த கொள்கை தெரிவிக்கிறது.

பச்சிலைப்பளைப் பிரிவு அரசு செயலகத்தில் 18 செப்டம்பர் 2010 அன்று நடந்த விசாரணை ஆரம்பிக்க தாமதம் ஆகியிருந்தது. இந்த தாமதத்தால் வெறுப்படைந்த சாட்சி ஒருவர் ஆணையத்தின் தலைவரைப் பார்த்து பின்வருமாறு அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

> ...இங்கே நாங்கள் இரண்டரை மணியிலிருந்து இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக காத்துக்கொண்டிருக்கிறோம். விசாரணை அமர்வு இரண்டரை மணிக்கு ஆரம்பிக்கும் என்று எங்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. நிறைய பேர் இங்கே வந்து காத்துக்கொண்டிருந்தனர். பலர் சற்று நேரம் முன்புதான் திரும்பிப் போய்விட்டார்கள்.[83]

மன்னாரில் 8 ஜனவரி 2011 அன்று நடந்த விசாரணை அமர்வில் வாக்குமூலம் அளிக்க வரும் முக்கியமான பிரமுகர்களுக்கு விசேட கவனிப்பும் ஆனால் சாமானிய மக்களுக்கு அப்படி கவனிப்பு எதுவும் இல்லை என்ற நிலையும் காணப்படதாக மனித உரிமைகளுக்கான மையம் என்ற இலங்கையின் அரசு சாரா அமைப்பு குறிப்பிட்டிருந்தது. LLRCயின் இவ்வகையான செயற்பாடுகள் அது குற்றச்செயல்கள் உரிமை மீறல்கள் போன்றவற்றை தனித்தனியாக தகவலும் ஆதாரமும் சேகரித்து அச்செயல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நோக்கில் செயல்படவில்லை என்பதையே காட்டுகின்றன. இது பற்றி மனித உரிமைகளுக்கான மையம் குறிப்பிடுகையில்:

ஜனவரி 8 அன்றைய அமர்வு காலை ஒன்பதரை மணிக்கு ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனால் பத்தரை மணிக்குத்தான் ஆரம்பித்தது. வாக்குமூலம் அளிக்க வந்தவர்களுக்கு அங்கு போதுமான இருக்கைகள் இல்லை என்பதை எமது பிரதிநிதிகள் அவதானிக்க முடிந்தது. வாக்குமூலம் அளிக்க வந்திருந்தவர்கள் பெரும்பாலானோர் நீண்ட தூரம் பயணித்து களைத்துப் போய் காணப்பட்டிருந்தனர். வந்தவர்களில் பலர் தரையில் அமர்ந்திருந்தனர். மன்னார் பிரிவு அரசு செயலகத்தில் 4.30 வாக்குமூலங்கள் வழங்கப்பட்டிருந்தன.

> மன்னார் ஆயர் ராயப்பு ஜோசம் மற்றும் பிற மத மற்றும் சமூகத் தலைவர்கள் LLRC முன்பு சாட்சியம் வழங்கினர். உள்ளூர் ஊடகங்களும் வெளிநாட்டு ஊடகங்களும் இந்த அமர்வு பற்றி செய்தி வழங்க ஆர்வமாக இருந்தனர். இந்த அமர்வில் வாக்குமூலம் வழங்க வரும் பிரமுகர்களுக்கு அவர்கள் முன்னுரிமை வழங்கினர். முன்னணிப் பிரமுகர்கள் நெடிய வாக்குமூலங்களை வழங்கினர். இந்த யுத்தத்தால் நேரடியாக பாதிப்புகளைச் சந்தித்திருந்த சாமானிய மகள் ஆணையாளர்களிடம் பேச மிகவும் ஆர்வமாக இருந்தனர் என்றாலும் அவர்களுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

> இவ்வகையான நிலை பற்றி மனித உரிமைகள் மையம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது.
>
> மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய சில வழிமுறைகளை தமது இடைக்கால அறிக்கையில் பரிந்துரைத்திருப்பது பற்றி LLRC ஆணையத்தின் தலைவர் இங்கு பேசினார். அவர் இந்த தகவல் வழங்கியது மக்களுக்கு மிகவும் அவசியமான தகவல் என்றாலும், அவரது ஆங்கில உரை தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லப்படவில்லை. இங்கே வந்திருந்தவர்களில் மிகப் பெரும்பான்மையானோருக்கு ஆங்கிலம் புரியாது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.[84]

நல்லிணக்கம் வரவேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் உண்மையான அக்கறை காட்டுகிறது என்றால் உண்மையை வெளிக்கொணருவது, நீதி கிடைக்கச்செய்வது ஆகியவற்றை அரசாங்அம் முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.யுத்தகாலத்தில் மக்கள் நடத்தப்பட்ட விதம் தொடர்பில் அவர்களுக்குள்ள பிரச்சினைகளை விசாரித்து பரிகாரம் வழங்குகிற எந்த ஒரு நடைமுறைக்கும் போதுமான அதிகாரம், ஆதாரம், இருக்க வேண்டும். எல்லோரும் நியாயமான அளவில் விசாரிக்கப்படுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். பரிகாரம் பரிந்துரைப்பதற்கு அதிகாரிகளுக்கு போதிய அதிகாரம் இருக்க வேண்டும். தவிர சாட்சிகள் அனைவரையும் பாதுகாப்புடனும், மனிதாபிமானத்துடனும், நடத்த வேண்டும். அரசு அதிகாரிகளுக்கு கொடுக்கின்ற அதே முக்கியத்துவதையும் மரியாதையும் சாமானிய மக்களுக்கும் ஆணையாளர்கள் வழங்க வேண்டும். ஆனால் வலுவான சாட்சிகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் இதனையெல்லாம் வழங்க முடியாது.

## சாட்சிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியது

இலங்கை மக்கள், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் வாழ்பவர்கள், தொடர்ந்தும் மோசமான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிவருகின்றனர். பலவந்தமாக கொண்டுசெல்லப்படுதல், சட்டத்துக்கு அப்பாற்பட்டு கொல்லபடுதல் போன்ற சம்பவங்கள் இங்கே நடப்பதாக தகவல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. முன்பு விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள், குறிப்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுபினர்களின் குடும்பத்தவர் போன்றோர் குறிப்பிட்ட சில ஆபத்துக்களை எதிர்கொள்கின்றனர். தவிர தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும் தம்முடைய வீடு திரும்ப முனைவர்களுக்கும் இம்மாதிரியான ஆபத்துகள் உள்ளன. மிரட்டல்கள், செயல்ரீதியான அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை இவர்கள் எதிர்கொள்கின்றனர். குற்றவியல் மற்றும் மனித உரிமை வழக்குகளில் சாட்சியங்களாக இருப்பவர்கள் கொல்லப்படும் சம்பவங்கள்கூட அங்கே தொடர்ந்து பிரச்சினையாகவே இருந்துவருகிறது.

பயனுள்ள சாட்சி வாக்குமூலங்களைப் பெறுவதற்குகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமாயின், சாட்சிகளுக்கெதிரான இந்த அச்சுறுத்தல்களை தடுக்க விசாரணை ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுப்பிக்கப்பட்ட கொள்கைகளின் பிரிவு எண் 10 "பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஆணையத்திடம் வாக்குமூலம் வழங்குகின்ற சாட்சிகளின் பாதுகாப்பு, உடல் ரீதியான மற்றும் உள ரீதியான நலம், கோரும் பட்சத்தில் அவர்களுடைய தனிமைச் சுதந்திரம் போன்றவற்றை உறுதிசெய்ய பலன் அளிக்கக்கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்." என்று கூறுகிறது.

சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான நடைமுறை எதுவும் LLRCயிடம் இல்லை. சாட்சிகளுக்கு போதுமான அளவில் பாதுகாப்பு வழங்கும் திட்டம் எதுவும் இலங்கையின் நீதித்துறையிலும் இல்லை. குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்குமான அமைப்பு ஒன்றை உறுவாக்கப்படுவதற்கு வகை செய்யும் மசோதா ஒன்று 2007ல் கொண்டுவரப்பட்டு பின்னர் 2008ல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது என்றாலும் இலங்கையின் நாடாளுமன்றம் அதனை ஒரு நாளும் சட்டமாக நிறைவேற்றியிருக்கவில்லை. (மேலும் இந்த மசோதாவில் தெரிவிக்கபட்ட பாதுகாப்பு வழிமுறைகள் போதாது என்று இலங்கையின் சட்ட நிபுணர்களே விமர்சித்தும் இருந்தனர்.)

LLRCயின் இடைக்காலப் பரிந்துரைகள் கடந்த செப்டம்பரில் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன, தாங்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக சாட்சியம் அளித்த பலர் குறிப்பிட்டிருந்தார்கள் என்றாலும் சாட்சிகள் பாதுகாப்பில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் அதில் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

யாழ் மாவட்டத்திலுள்ள வெள்ளணையில் 2010 நவம்பரில் நடந்த LLRC விசாரணை அமர்வில் வாக்குமூலம் அளிக்க முன்வந்த ஆட்களை ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படும் ஆயுததாரிகள் மிரட்டியதாக அரசு சாரா அமைப்புகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் கூறியிருந்தனர். பின்னர் நடந்த விசாரணை அமர்வுகளின்போது, சாட்சிகளையும் ஆணையாளர்களையும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் புகைப்படம் எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மடு பிரதேசத்தில் பெரியபன்றிவிரிச்சான் என்ற இடத்தில் உள்ள அரசாங்க துணையதிபர் அலுவலகத்தில் நடந்த விசாரணை அமர்வின்போது, LLRC முன்பு சாட்சியம் வழங்கியவர்களை இராணுவத்தினர் புகைப்படம் எடுத்தது பற்றி மனித உரிமைகளுக்கான மையம் பின்வருமாறு வருணித்திருந்தது:

விசாரணை அமர்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் 10.45 மணிக்குதான் அது ஆரம்பித்திருந்தது. சுமார் 10.15 மணியளவில் இராணுவ அதிகாரிகள் குழ்வினர் டி.எஸ். அலுவலகத்துக்கு வந்து அங்கிருகின்ற LLRC பணியாளர்கள் யார், வெளியிடங்களிலிருந்து வந்திருப்பவர்கள் யார் என்ற பெயர்

விபரங்களைப் பதிவுசெய்துகொண்டனர். இன்னொரு இராணுவ அதிகாரி LLRC ஆணையாளர்களையும் அங்கு சாட்சியம் வழங்க வந்திருந்தவர்களையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.[85]

## 4. LLRC யின் காரணமாய் எழுந்த அரசு நடவடிக்கைகள்

LLRCயின் இடைக்கால அறிக்கை செப்டம்பர் 2010ல் வெளியிடப்பட்டது.[86] சாட்சிகள் தெரிவித்த குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் சில பயனுள்ள பரிந்துரைகள் அதில் இருந்தன என்றாலும் கடந்த காலங்களில் நடந்த துஷ்பிரயோகங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட எந்த ஒரு பரிந்துரையும் அதில் இல்லை.

LLRCயின் இடைக்காலப் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்காக 2010 ஒக்டோபரில் நியமிக்கப்பட்ட அரசு அமைப்புகளுக்கான ஆலோசனைக் குழு (Inter Agency Advisory Committee சுருக்கமாக IAAC) இதுவரையில் செய்திருக்கும் பணியினை விளக்கும் வகையில் page "Progress Report on the Implementation of the Interim Recommendations of the LLRC" என்ற தலைப்பில் 2011 மார்ச்சில் இலங்கையின் சண்டே டைம்ஸ் நாளேடு கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. (LLRC ஆணையாளர்கள் வவுனியா பகுதியில் மட்டுமாக ஒரு மாத காலம் விசாரணை அமர்வுகளை நடத்திய பின்னர் அதன் இடைக்காலப் பரிந்துரைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன).
தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விவகாரம், காணிப் பிரச்சினைகள், சட்ட ஒழுங்கு, நிர்வாகம், மொழிப் பிரச்சினைகள், சமூக பொருளாதார மற்றும் வாழ்வாதாப் பிரச்சினைகள் சம்பந்தமாக LLRC வழங்கும் இடைக்காலப் பரிந்துரைகள் தொடர்பில் IAAC செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.[87]

IAAC தனது பணியை ஆரம்பித்துள்ளது என்றலும், முன்னேற்றம் என்பது மிகவும் மந்தகதியிலேயே உள்ளது.

### தடுத்துவைக்கப்படுள்ளவர்கள் விவகாரம்

இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் எவ்வித குற்றச்சாட்டும் இன்றியே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழும் அல்லது அவசரகால சட்டங்களின் கீழும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் சிறைகள், பொலிஸ் லாக்கப்புகள், தடுப்புக் காவல் மையங்கள், "புனர்வாழ்வு" மையங்கள் மற்றும் இதர உத்தியோகபூர்வமற்ற முறையிலும் அல்லது ரகசியமாகவும் ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடங்களிலும் (ஆயுதக் கும்பல்கள் வசமுள்ள இடங்களும் இதில் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது) இவ்வாறாக ஏராளமானோர் உள்ளனர்.

2010 செப்டம்பரில் வெளியிடப்பட்ட LLRCயின் இடைக்கால அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

> எந்தவித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமலேயே நெடுங்காலமாக ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளது பற்றி திரும்பத் திரும்ப புகார்கள் வந்திருந்தன.

அது தொடர்பில் ஆணையம் பின்வரும் பரிந்துரைகளை செய்கிறது -

a) இந்தப் புகார்களை ஒவ்வொன்றாக எடுத்து பரிசீலனை செய்வதற்கு ஒரு விசேட வழிமுறை உருவாக்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு வழக்கையும் அதன் தன்மைக்கு ஏற்ப முறைப்படி விசாரித்து தீர்ப்பதற்கான செயல்முறை கொண்டுவரப்பட வேண்டும். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நடத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

b) தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அடிக்கடி முகாம் விட்டு முகாம் என இடம் மாற்றப்பட்டுவருவதால், தமது குடும்ப உறுப்பினர் எங்கிருக்கின்றார் என்று உறவுக்காரர்களுக்கு தெரியாமல் போவது ஒரு பெரிய பிரச்சினையாக ஆணையத்தின் முன்பு எழுப்பப்படிருந்தது.

ஆகவேம் அரசாங்கத்தில் உதாரணமாக நீதித்துறையில் ஒரு சுயாதீன பிரிவொன்று பின்வரும் விவகாரங்களை கவனிப்பதற்காக உருவாக்கப்பட வேண்டும் என இந்த ஆணையம் பரிந்துரைக்கிறது -

1. தடுப்புக்காவலில் உள்ளவர்களின் பெயர்கள் பட்டியலாக வெளியிடப்படுதல்.

2. ஒரு நபரை விடுவிக்கும்போது விடுதலை சான்றிதல் வழங்கப்படுதல். விடுதலைப் புலிகளுடன் அவருக்கு தொடர்பு இருக்கிறது என்பதற்கு புதிய ஆதாரம் கிடைக்காத வரையில் அவர் மீண்டும் கைது செய்யபட வாய்ப்பு இல்லை என்ற நிலை உருவாக அது உதவியாக இருக்கும்.

3. சட்ட நடவடிக்கைகள் தாமதமாகின்ற பொதுவான பிரச்சினை தீர்க்கப்படுதல்.(வழக்கு விசாரணைகளையும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படுவதற்கான வழிமுறைகளையும் துரிதப்படுத்துவதற்கு இது உதவியாக இருக்கும்)[88]

"துணை சொலிசிட்டர் ஜெனரல் தலைமையில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து தடுப்புக்காவலில் உள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களின் விடயங்களை ஆராய்ந்து, உரிய சட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும்"[89] என காணப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலான IAAC அறிக்கை குறிப்பிட்டிருந்தது. மேற்பட்டு எந்த விபரமும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த மார்ச் மாதம், பூசா சிறையில் இருந்து பயங்கரவாத தடுப்புச் சட்ட கைதிகள் 118 விடுவிக்கப்பட்டதாக பெரிதும் விளம்பரம் செய்யப்பட்ட விஷயம் ஆட்களை ஒரு வகையான யதேச்சதிகார தடுப்புக்காவலில் இருந்து இன்னொரு வகையான

தடுப்புக்காவலுக்கு மாற்றியதுதான் என்று சர்வதேச பொது மன்னிப்பு சபைக்கு தெரியவந்துள்ளது. அதாவது பயங்கரவாத விசாரணை பிரிவு TID அதிகாரிகளின் தடுப்புக்காவலில் இருந்து அவசரகால விதிகளின் கீழ் இரண்டு ஆண்டுகள் வரையிலான தடுப்புக் காவலுக்கு பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு இவர்கள் மாற்றப்பட்டிருந்தனர். அங்கும் அவர்கள் எவ்வித குற்றச்சாட்டும் இல்லாமல்தான் தடுத்துவைக்கப்படுகிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

அதன் பின்னர், பெரிதாக அறிவிக்கப்பட்டு ஆட்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர், ஆனால் சுமார் மூவாயிரம் பேர் வரையிலானவர்கள் இன்னும் தன் மீதான குற்றச்சாட்டு என்ன என்று தெரியாமலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். [90]தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அத்தனை பெயரின் பெயர் விபரம் அடங்கிய மொத்த பட்டியல் எதுவும் பொதுவாக வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2011 ஜூன் மையப் பகுதியில், பயங்கரவாத விசாரனைப் பிரிவினரால் மூன்று தகவல் மையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு சென்று தடுப்புக் காவல் உத்தரவின் பேரிலும், பொலிஸ் தடுப்புக் காவலிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றி அவருடைய குடும்பத்தினர் விபரம் பெறலாம் என்றும் பொலிசார் அறிவித்திருந்தனர். குடும்பத்தவருக்கு மட்டுமே தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் வழங்கப்படும் வேறு எவருக்குமோ எந்த அமைப்புக்குமோ தகவல் வழங்கப்படமாட்டாது. தடுத்துவைக்கப்பட்டவர் விண்ணப்பித்தாலும்கூட அவை வழங்கப்படாது என்று TID பிரிவு கூறிவிட்டிருந்தது. வவுனியாவில் உள்ள துணை பொலிஸ் மா அதிபர் அலுவலகத்திலும், கொழும்பில் உள்ள TID தலைமை அலுவலகத்திலும், பூசா தடுப்புக்காவல் மையத்திலும் TID பிரிவினரால் நடத்தப்படும் இத்தகவல் மையங்கள் அமைக்கபட்டன. ஆனால் இவ்விடங்களில் இருந்து தகவல் பெற முனைந்தவர்கள் பலருக்கும் அதிருப்தி ஏற்பட்டது. குடும்பத்தவர்களும் உறவுக்காரர்களுமாக கிட்டத்தட்ட 1,300 பேர் இந்த மூன்று மையங்களிலிருந்தும் தகவல் பெற்றதாகவும், இந்த மையங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காணாமல் போன தமது உறவினர் பற்றி தகவல் கேட்டு சுமார் 250 பேர் TID பொலிசாருக்கு தொலைபேசி அழைத்திருந்ததாகவும், இவர்களில் சுமார் ஏழு சதவீதத்தினருக்கு மட்டுமே கேட்ட விபரம் கிடைத்ததனென்றும், பெரும்பாலான விண்ணப்பங்கள் இராணுவ தடுப்புக்காவலில் உள்ளவர்களைப் பற்றியதாக அமைந்திருந்தது, TID தடுப்புக்காவலில் உள்ளவர்கள் பற்றியதாக அவை இல்லை என்பது போன்றவற்றை ஜூன் 24 அன்று பொலிஸ் பேச்சாளர் பிரிஷாந்த ஜெயக்கொடி தெரிவித்திருந்தார். மிக நெருங்கிய உறவுக்காரர்களுக்கு மட்டும்தான் தகவல் வழங்கப்படும் என்றும் இந்த மையங்களில் உள்ள தகவல்கள் தடுத்துவைக்கப்பட்டவர்கள் அனைவர் பற்றியதான முழுமையான பதிவு இல்லை என்றும் அவர் கூறினார். இராணுவத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விபரங்களையோ, தடுப்புக் காவல் உத்தரவு இன்றி பொலிசால் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய

விபரங்களையோ இந்த மையங்களால் வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.[91]

அவசரகால விதிமுறைகளை படிப்படியாகத் தளர்த்துவதற்கும், 2011ஆம் ஆண்டுக் கடைசியோடு நாட்டில் நெடுங்காலமாக இருந்துவரும் அவசரநிலையை அகற்றுவதற்குமான அரசாங்கத்தின் திட்டம் பற்றி இலங்கை அமைச்சரவை ஜூலை 2011ல் அறிவித்திருந்தது. இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப்பட வேண்டும். ஏனென்றால் ஏற்கனவே வந்த இப்படியான அறிவிப்புகள் எல்லாம் அவசரகால விதிமுறைகளின் வீரியத்தை பெரிதாகக் குறைத்திருக்கவில்லை.[92]

## காணிப் பிரச்சினை

காணிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, தற்போது கிடைக்கக்கூடிய சட்டபூர்வ நிவாரண வழிமுறைகள் கொடுக்க முடியாத சில தீர்வுகள்" சில விஷயங்களில் தேவையாக இருப்பதாக LLRC தெரிவித்திருந்தது. நிலத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு புதியதொரு வழிமுறை தேவை என்று அது ஒப்புக்கொண்டிருந்தது. இலங்கையில் எங்கு வேண்டுமானாலும் தமது வாழ்விடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிற உரிமை மக்களுக்கு இருப்பதை அது வலியுறுத்தியிருந்தது. வலுக்காட்டாயமாக குடியமர்த்துகின்ற கொள்கை இல்லை என்றும், |பாதுகாப்பு தேவை இல்லாத பட்சத்தில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் (HSZ) மென்மேலும் அகற்றப்படுவதை" அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்று கூறியிருந்தது. யாழ்ப்பாணம் பலாலி பகுதியில் 256 வீடுகளுக்கு ஆட்களைத் திருப்பியனுப்புவதற்கான பணிகள் அரம்பித்துவிட்டன என்று அது கூறியிருந்தது. உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள 2500 ஹெக்டேருக்கும் அதிகமான நிலப்பரப்பில் 2392 வீடுகள் எதிர்காலத்தில் மக்கள் குடியமர்வதற்கு உகந்த இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கண்ணிவெடிகளை அகற்றும் பணி முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## மொழி

மொழி சம்பந்தமான விவகாரங்கள் என்று வரும்போது, "உத்தியோகபூர்வ மொழிக் கொள்கை தொடர்பாக ஏற்கனவே இருந்துவரும் வர்த்தமானி அறிவிப்புகள், பொது நிர்வாக சுற்றறிக்கைகள் போன்றவை பலனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் " என்பதற்கான அவசியம் உள்ளது என LLRC வலியுறுத்தியிருந்தது. 2010ல் பொலிஸ் துறையில் தமிழர்கள் சேர்க்கப்பட்டது போன்ற நடந்துவருகின்ற முயற்சிகளை அது சுட்டிக்காட்டிருந்தது.

## சட்டம் ஒழுங்கு

வட இலங்கையில் இருந்து LLRCக்கு சாட்சியம் அளித்திருந்தவர்களில் பலர், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து சாட்சியம் அளித்தவர்கள் பலர், சட்ட ஒழுங்கு பிரச்சினை பற்றி, அதிலும் குறிப்பாக ஆயுதக் கும்பல்கள் ஈடுபட்ட மிரட்டிப் பறித்தல், ஆட்கடத்தல் மற்றும் பிற குற்றச் செயல்கள் குறித்து கவலை தெரிவித்திருந்தனர். இந்த ஆயுதக் கும்பல்கள் சில இலங்கையின் அரச படைகளுடன் தொடர்பு கொண்டிருபவை என்றூம் கூறப்பட்டிருந்தது. "சட்டவிரோத ஆயுதக் குழுக்களிடம்" இருந்து இலங்கை அரசு ஆயுதங்களைக் களைய வேண்டும் என LLRC பரிந்துரைத்திருந்தது. சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான காலக்கெடு ஒன்றை விதிப்பதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுத்துள்ளது. இலங்கையின் கிழக்கு பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டிய பின்னர் அங்கிருந்த குழுக்களிடம் இருந்து அரசாங்கம் வெற்றிகரமாக ஆயுதங்களைக் களைந்திருந்தது" என்று IAAC தெரிவித்திருந்தது. ஆயுதங்கள் அல்லது வெடிப்பொருட்கள் வைத்திருக்கும் ஆட்கள் கைதுசெய்யபட்டால் அவர்களுக்கு பிணை வழங்கக் கூடாது என்ற வகையில் வெடி ஆயுதங்கள் சட்டத்தில் சீர்திருத்தங்களை இயற்ற இலங்கை அரசு எண்ணம் கொண்டுள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயுதங்கள் ஒப்படைக்கப்படும் வரையிலான இடைக்கால நடவடிக்கையாகவே இந்த மாற்றம் கொண்டுவரப்படும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் இவை தொடர்பில் எந்த முன்னேற்றமும் காணப்பட்டதா என தெளிவாகவில்லை. ஆனால் ஆட்கடத்தல்கள் கொலைகள் போன்றவை அடையாளம் காணப்படாத ஆயுதக் குழுக்களினால் செய்யப்படுவதாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து ஜூன் கடைசி வரையில் இருந்தும்கூட செய்திகள் வந்த வண்ணம்தான் இருந்தன. இவ்வகையான குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கை அரச படைகளுடன் தொடர்புடைய ஆயுதக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.[93] எதிர்க்கட்சி அரச்யல் வதிகளுகு எதிரான மிரட்டல்கள் மற்றும் செயல்ரீதியான அச்சுறுத்தல்கள் ஜூலை மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்பாக அதிகமாக இருந்ததாக முறையிடப்பட்டிருந்தது.

ஆயுதங்களைக் களைவதால் மட்டுமே இப்படியான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை நினைக்கவில்லை. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதென்பதும் அவசியம் என அது நம்புகிறது. இப்படியான குற்றச்செயல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் இருப்பதை ஒப்புக்கொண்டு அவற்றை விசாரிப்பதற்கும், அவற்றுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் இலங்கை அதிகாரிகள் மறுத்துவருவதும் நாட்டில் அராஜகம் வளர்ந்துவருவதை ஊக்குவிக்கிறது. அரசின்

பாதுகாப்பு படையினர், அவர்களோடு தொடர்புடைய ஆயுதக் கும்பல்கள் உள்ளிட்டோர் இவ்வாறான அராஜகங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

## சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள்

ஏ9 நெடுஞ்சாலை மீண்டும் திறக்கப்பட்டதென்பது, இலங்கையின் மத்தியில் உள்ள கண்டிக்கும் வடகோடியில் உள்ள யாழ்ப்பாணத்துக்கும் இடையே பொருட்களும் ஆட்களும் சென்றுவர மிக அவசியமான தரைவழிப்பாதையை ஏற்படுத்தித் தந்தது என IAACயின் அறிக்கை கூறுகிறது. இதன் விளைவாக வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தடையற்ற நடமாற்றம் ஏற்பட்டது என்றும் |"பொருளாதாரத்திலும் சமூகத்திலும் கலாச்சாரத்திலும் தடையின்றி பங்குகொள்ளும் உரிமை கிடைத்தது" என்றும் அது குறிப்பிட்டுள்ளது. இலங்கை அதிகாரிகள் " சமூக, பொருளாதார கலாச்சார செயற்பாடுகளில் அதிக பங்களிப்பை உறுதிசெய்யும் பொருட்டு ஏ9 பாதையூடாக மக்கள் தடையின்றி சென்றுவருவதை இலங்கை அதிகாரிகள் ஊக்குவிக்க வேண்டும் என்று LLRC பரிந்துரைத்தது உண்மைதான். ஆனால் இந்த நெடுஞ்சாலை பொதுமக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டது என்பது LLRC அமைக்கப்படுவதற்கு பல நாள் முன்பு 2009திலேயே நிகழ்ந்துவிட்டது.ஆதலால் இந்த முன்னேற்றத்துக்கு இந்த அமைப்புகள் காரணம் என்று கூற முடியாது.

"பொதுமக்களின் செயற்பாடுகளை இயல்பாக்கும்" நோக்கில் அரசாங்க முகவர்கள் (உள்ளூராட்சி நிர்வாகிகள்) மற்றும் பாதுகாப்பு படைகள் இடையில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் LLRC பரிந்துரைத்திருந்தது. இந்த பரிந்துரை தொடர்பில் IAAC ஒப்பீட்டளவில் பெரிதாக எதனையும் குறிப்பிடவில்லை. "உள்நாட்டளவில் இடம்பெயர்ந்தவர்களின் IDP மீள்குடியேற்றத்தினாலும், சங்குபிட்டி பாலம் கட்டப்பட்டதாலும், மீன்பிடித் தடைகள் தளர்த்தப்பட்டதாலும் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் வந்துள்ளது" என்று மட்டும் அது கூறியிருந்தது.

சொல்லப்போனால், வட இலங்கை இன்னும் அதிக அளவில் இராணுவமயமாகவே உள்ளது. அங்கு சிவில் நிர்வாகம், மனிதாபிமானப் நிவரணப் பணிகள், அபிவிருத்திப் பணிகள் போன்றவற்றில் இராணுவத்தினரும் பாதுகாப்பு அமைச்சகத்தினருமே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இலங்கையின் ஏனைய பகுதியிலும் சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்பு அமைச்சின் பங்கு என்பது மென்மேலும் அதிகரித்து வருகிறது.

## 5. சர்வதேச அளவிலான சுயாதீன விசாரணை தேவை

இலங்கையில் பலகாலமாக விசாரணை ஆணையங்கள் பலன் அளித்திருக்கவில்லை என்பதையும், LLRC இதுநாள்வரை செய்திருக்கின்ற பணிகளும் திருப்திகரமாக இல்லை என்பதையும் வைத்துப் பார்க்கையில், அதனால் ஒரு நாளும் ஒரு நீதி வழங்கவோ, உண்மையை வெளிக்கொண்டுவரவோ, இலங்ஜயில் மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருந்தவர்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்க முடியும் என்றோ சர்வதேச பொதுமன்னிப்பு சபை கருதவில்லை.

இலங்கையின் ஆயுத மோதல்களின் இறுதி நாட்களில் நடந்ததாகத் தெரிவிக்கபடும் பாரிய குற்றங்களை விசாரிப்பதற்கு பொருத்தமான ஒரு விசாரணை வழிமுறையாக LLRC எப்போதுமே இருந்திருக்கவில்லை. கொடுக்கப்பட்டிருந்த பணிவரம்பு, அதிகாரவரம்பு, கட்டமைக்கப்பட்ட விதம், ஆணையாளராக நியமிக்கபட்டவர்கள், செயல்பட்ட விதம் என்று பல்வேறு வகைகளிலுமே அதில் கோளாறுகள் இருக்கின்றன. மேலும், இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல், குற்றம்செய்தவற்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஏற்றதாக இல்லை. இலங்கையைப் பொறுத்தவரை குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருந்துவருவதென்பது விதிவிலக்காக இல்லாமல் அதுவே விதியாக இருந்துவரும் நிலைதான் நீடிக்கிறது. தசாப்தகாலங்களாக அங்கு இதே நிலைதான். மனித உரிமை மீறல்களை அதிகாரிகள் தொடர்ந்தும் கண்டும்காணாமல் இருந்துவருகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றியை எட்டும் வழியில் இலங்கைப் படைகள் செய்திருக்கக்கூடிய குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருகின்ற பொறுப்பை ஏற்க அதிகாரிகள் மறுப்பதற்கும், அதனை யாரும் விமர்சித்தால் அவர்களை தண்டிப்பதற்கும் யுத்த வெற்றி தந்துள்ள மமதை காரணமாக அமைந்துள்ளது. எஞ்சியுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களில் இவ்வாறான குற்றங்களைச் செய்திருக்கக்கூடியவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரவும் இலங்கை அதிகாரிகள் தவறி வருகின்றனர். ஆனால் காலப்போக்கில், இலங்கையின் தலைமை தனது பிடியை தளர்த்தும், உண்மையை வெளிக்கொணர்ந்து நீதியை நிலைநாட்டத் தேவையான நேர்மையான கேள்விகள் எழ அனுமதிக்கும், அதன் வழியாக இலங்கை மக்களிடையே நல்லிணக்கம் உருவாகும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் இந்த மாற்றங்கள் வர ஆண்டுகள் கணக்கில் காலம் எடுக்கலாம்.

நடந்த அட்டூழியங்களை வெளியில் சொல்வதென்பது முக்கியம். அந்நோக்கில் ஐ.நா. நிபுணர் குழு முக்கியக் கருவி ஆவர். "அந்த அறிக்கையை நான் உலகிற்கு, பொதுப்படையாக பிரசுரித்து விட்டேன்... ஆகவே இலங்கையில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்" என்று பிபிசிக்கு கடந்த ஜுனில் அளித்த பேட்டி ஒன்றில் நிபுணர் குழு அறிக்கை பற்றிப் பேசுகையில் தலைமைச் செயலர் பான் கீ

மூன் குறிப்பிட்டிருந்தார்."ஆனால் தகவல்கள் வெளியிட்டால் மட்டும் போதாது. ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்போதுதான் சர்வதேச கவனத்தின் விளைவாக மாறுதல்களைக் கொண்டுவர முடியும். கூடவே காத்திரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் சர்வதேச விசாரணைகள் வேண்டும் என்று அழுத்தம் தருவதில் சர்வதேச சமூகம் கண்டுள்ள தோல்வி, இலங்கையில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துகின்ற நோக்கிலான அனைத்து முயற்சிகளையும் - உள்நாட்டளவிலும் சர்வதேச அளவிலும் ஆன அனைத்து முயற்சிகளையும் பலவீனப்படுத்தியுள்ளது.

LLRC ஒரு பலன் தரும் வழிமுறைதான் என்று இலங்கை கூறுவதை சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளுமானால், இலங்ஜயில் நிதி மறுக்கப்படுவதற்கும், உண்மை நிராகரிக்கப்படுவதற்கும், சர்வதேச சட்டங்களின் மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மறுக்கபடுவதற்கும் மிகவும் ஆபத்தான ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும். அதுவும் தனது இந்த சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்துக்கு விருப்பமும் இல்லை, வழியும் இல்லை என்று காட்டும் தெளிவான ஆதாரங்கள் நிறைய இருந்தும் சர்வதேச சமூகம் வாளாவிருக்கிறது.

இலங்கை உள்நாட்டளவில் முயற்சி எடுக்கிறதோ இல்லையோ, சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்கள் பற்றிய புகார்களை தாமதமின்றி விசாரிக்கின்ற பொறுப்பு ஐ.நா.மன்றத்துக்கு உள்ளது. இந்த விசாரணைகள் சுயாதீனமாகவும், சர்வதேச தர அளவுகோல்களுக்கு ஏற்பவும் முன்னெடுக்கப்பட வேண்டும். சந்தேக நபர்கள் சர்வதேச தரத்தில் நியாயமாக விசாரிக்கபட்டு குற்றவாளிகள் என அடையாளம் காணப்படுவோருக்கு உரிய தண்டனை வழங்கப்படல் வேண்டும்.

உண்மையை வெளிக்கொண்டுவரவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் விஷயத்தை இலங்கை அரசு எப்போதாவது அங்கீகரிக்கும் என்றால் அது தொடர்பாகவும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை கண்காணித்து, தகவல் வெளியிடுகிற பொறுப்பும் ஐ.நா.மன்றத்துக்கு உள்ளது.

சர்வதேச அளவில் செய்யப்படுவதல்லாமல், மனித உரிமைகளைப் பாதுகாத்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துகிற பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டதற்கும் காயம்பட்டதற்கும் அரச படையினரும் பொறுப்பு என்பதை இலங்கை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளையும் கண்ணியத்தையும் அவர்கள் அங்கீகரிக்கவும் ஏற்று நடக்கவும் வேண்டும்.மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான தேசிய கொள்கை ஒன்றை

இலங்கை வகுக்க வேண்டும். தமது படைகள் குற்றங்கள் செய்ததாக புகார்கள் எழுகின்றன என்பதை அவர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும். மனித உரிமை மீறல்களை எதிர்த்து அவர்கள் வலுவாக குரல்கொடுக்க வேண்டும். ஆட்கடத்தல், பலவந்ததமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல் போதல் ஆட்கொலைகள் போன்றவை வட இலங்கையில் நடந்தாலும் சரி நாட்டின் வேறு பகுதிகளில் நடந்தாலும் சரி, அது பற்றி புதிதாக வரும் புகார்களை இலங்கை முழுமையாக விசாரிக்க வேண்டும். குற்றவாளிகள் அடையாள காணப்பட்டு, சர்வதேச தரத்தில் நியாயமான வழிமுறைகளில் முழுமையாக விசாரிக்கப்பட்டு அவர்கள் மீது இலங்கை சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# 6. நிறைவுக் குறிப்புகள்

---

[1] 2009 முதல் 2011 வரையிலான காலப்பகுதியில் இலங்கை மனித உரிமைகள் கவுன்சில் 11,000த்துக்கும் மேற்பட்ட புகார்களைப் பெற்றிருந்தது, சண்டே லீடர் (இணையதளம்), 21 ஜூலை 2011

http://www.thesundayleader.lk/?p=43073

[2] "சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையை மாற்றுவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுப்பில்" இதற்குரிய தர அளவுகோல்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைத் தொகுப்புக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 2005ல் ஒப்புதல் அளித்திருந்தது. , E/CN.4/2005/102/Add.1, 8 பிப்ரவரி 2005

http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G05/109/00/PDF/G0510900.pdf?OpenElement

இந்தக் கொள்கைகளை ஐநா மனித உரிமைகள் ஆணையம் அங்கீகரித்திருந்தது. தீர்மான எண் E/CN.4/RES/2005/81 of 21 ஏப்ரல் 2005. இதன் எழுத்து வடிவத்துக்காண இணைப்பு: http://www.unhcr.org/refworld/category,LEGAL,UNCHR,,,45377c930,0.html

[3] படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் முன்பு தெரிவிக்கப்பட்டது, 17 ஆகஸ்ட் 2010, (TG ASA 37/2010.001)

[4] சர்வதேச பொதுமன்னிப்பு சபை இலங்கை: குற்றம்சாட்டப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்(இலங்கையின் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவுக்கும், ஹியுமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்புக்கும், இண்டர்நேஷனல் கிரைஸிஸ் குரூப்புக்கும் ஒன்றாக எழுதப்பட்ட கடிதம் , 14 ஒக்டோபர் 2010 (Index: ASA 37/015/2010)

https://www.amnesty.org/en/library/asset/ASA37/015/2010/en/b8167216-c0aa-48be-99f8-bdcb5cab5d84/asa370152010en.pdf

[5] இலங்கை அரசாங்கமும், ஐநா தலைமைச் செயலரும் வழங்கிய கூட்டறிக்கை SG/2151, 26 மே 2009

https://www.un.org/News/Press/docs/2009/sg2151.doc.htm

[6] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, முக்கிய சாராம்சம் பக்கம் ii, http://www.un.org/News/dh/infocus/Sri_Lanka/POE_Report_Full.pdf

[7] மேலுள்ளதிலேயெ பக்கம் vii

[8] யுத்ததின் கடைசி கட்டத்தில் இலங்கையில் நடந்ததாக தெரிவிக்கப்படும் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கையை அவர்

---

வெளியிட்டார். SG/SM/13524, 25 ஏப்ரல் 2011

[9] மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் அதிபர், P.O. No CA/3/3/24, http://www.llrc.lk/images/stories/docs/Mandate%20English.pdf

[10] 2 ஜனவரி 2006 அன்று, திருகோணமலை கடற்கரையில் கூடிய ஐந்து மாணவர்கள் இலங்கை பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டிருந்தனர். இரண்டு பேர் காயமடைந்திருந்தனர். இவற்றைச் செய்தது எஸ்.டி.எஃப். எனப்படும் விசேட அதிரடிப் படையினர் என்று நம்பப்படுகிறது. இறந்தவர்கள் உடலில் நட்த்திய பிரேதப் பரிசோதனைகள், இவர்கள் குண்டு பாய்ந்து இறந்துள்ளனர் என்று தெரிவித்தன. மூன்று பேருக்கு தலையில் குண்டு பாய்ந்திருந்தது. இது தொடர்பில் திருகோணமலை காவல் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை தடுத்து வைக்கவும், எஸ்.டி.எஃப்.பைச் சேர்ந்த 12 பேரை விசாரணை முடியும் வரை ஒரு மாதத்துக்கு பணி இடைநீக்கம் செய்யவும் 13 பிப்ரவரி 2006 அன்று குற்றவியல் புலனாய்வு பிரிவான சி.ஐ.டி. பொலிசார் அவசரகால விதிகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சகத்தின் கையொப்பம் பெற்று பிடி ஆணைகளைப் வாங்கியிருந்தார். ஆனால் எஸ்.டி.எஃப். சந்தேக நபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் சி.ஐ.டி.யினருக்கு பின்னர் தெரிவித்திருந்தார். அதற்கான கரணம் ஒன்றையும் சட்டமா அதிபர் அலுவலகம் தந்திருக்கவில்லை. அதன் பின் விசாரணைகள் நடந்ததாகவும் தெரியவில்லை. “மோசமான” மனித உரிமை மீறல்களாகத் தெரியும் 16 சம்பவங்களை விசாரிக்க செப்டம்பர் 2006ல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்தார். இச்சம்பவத்தில் இறந்த ரஜீஹர் மனோகரனின் தந்தை இதில் சாட்சியம் வழங்கியிருந்தார். நாட்டுக்கு வெளியில் குறிப்பிட்டு சொல்லப்படாத ஒரு இட த்தில் இருந்து வீடியோ தொடர்பு வழியாக டாக்டர் மனோகரன் வாக்குமூலம் வழங்கியிருந்தார். இவருக்கு அச்சுறுத்தல்கள் இருந்த்தால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர் வாக்குமூலம் வழங்இயது தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டு பொதுமக்கள் கவனத்துக்கு வந்தது. ஆனால் இந்த விசாரணை ஆணையத்தின் அறிக்கை ஜனாதிபதியிடம் பிரத்யேகமாக கொடுக்கப்பட்டது. அதன் முடிவுகள் பிரசுரிக்கப்படவே இல்லை. குற்றம் முழுமையாக விசாரிக்கப்படவும் இல்லை. எவரும் இதற்கு சட்டத்தின் முன் பதில் சொல்லவும் இல்லை. (இருபது வருட ஏமாற்று வேலை; இலங்கையின் விசாரணை ஆணையங்கள் என்ற சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆவணத்தை பார்க்கவும்.) (Index: ASA 37/005/2009) https://www.amnesty.org/en/library/asset/ASA37/005/2009/en/c41db308-7612-4ca7-946d-03ad209aa900/asa370052009eng.pdf

[11] இருபது வருட ஏமாற்று வேலை; இலங்கையின் விசாரணை ஆணையங்கள் என்ற சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆவணத்தை பார்க்கவும். (Index: ASA 37/005/2009)

[12] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, முக்கிய சாராம்சம் பக்கம் v

---

[13] LLRC ஆணையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட பல வாக்குமூலங்களை சர்வதேச பொதுமன்னிப்பு சபையும் கிடைக்கப்பெற்றது. சாட்சியம் வழங்க ஆணையம் தங்களை அழைக்கவில்லை என்று இவர்கள் கூறுகின்றனர்.

[14] புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுதியின் 6ஆம் பிரிவு "பாதிக்கப்பட்டோரின் கருத்துகளை கேட்டுப் பெற்று, பொதுமக்களைக் கலந்து ஆலோசித்து, அவர்கள் சொன்னதை கூடியவரை உள்ளடக்கி உண்மை கண்டறியும் ஆணையத்தின் அதிகார வரம்பு, பணி வரம்பு, யார் உறுப்பினர்கள் போன்ற விடயங்கள் தீர்மானிக்கப்படுதல் நல்லது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்க விசேட முயற்சிகள் அளிக்கப்பட வேண்டும்." என்று கூறுகிறது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுதி பிரிவு 6, ஐநா மன்றம், E/CN.4/2005/102/Add.1, 8 பிப்ரவரி 2005 http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G05/109/00/PDF/G0510900.pdf?OpenElement

[15] "ஆணையத் தலைவரின் துவக்க உரை; விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பொதுமக்கள் விசாரணை அமர்வு பற்றிய பதிவுகள்" வெளிநாடுகளுடனான உறவு, வியூக ஆய்வுகள் போன்றவற்றுக்கான லக்ஷ்மண் கதிர்காமர் மையம், 24, Horton Place, Colombo 07, 11 ஆகஸ்ட் 2010 (LLRC/PS/11-08-10/01), பக்கம் 1

[16] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு வவுனியா பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வு பற்றிய பதிவுகள், 14 ஆகஸ்ட் 2010, http://www.llrc.lk/images/stories/docs/August2010/District_Secys_Office-Vavuniya-14.08.2010.pdf

[17] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு மன்னார் பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது சாட்சி எண் 4 வழங்கிய வாக்குமூலம், 8 ஜனவரி 2011, பக்கம் 19

[18] இருபது வருட ஏமாற்று வேலை; இலங்கையின் விசாரணை ஆணையங்கள் என்ற சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆவணம். (Index: ASA 37/005/2009)

[19] 2206ல் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தில் சட்டமா அதிபர் ஆற்றிய பங்கு பற்றிய முழுமையான விவாதத்துக்கு, இருபது வருட ஏமாற்று வேலை; இலங்கையின் விசாரணை ஆணையங்கள் என்ற சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆவணத்தை பார்க்கவும். (Index: ASA 37/005/2009)

[20] சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையை மாற்றுவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுப்பு , E/CN.4/2005/102/Add.1, 8 பிப்ரவரி 2005,

http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G05/109/00/PDF/G0510900.pdf?OpenElement

[21] உதாரணத்துக்கு டாக்டர் வரதராஜாவின் வாக்குமூலத்தை ஆணையம் கையாண்ட விதத்தை பார்க்கவும். (கீழ் வருவதையும் பார்க்கவும்).
http://www.llrc.lk/images/stories/LLRC_30.11_-_Dr._T.Vartharajah.pdf

[22] உதாரணத்துக்கு பாருங்கள், 2யுத்த காலத்துக்கு பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் வெளியுறவுக் கொள்கை சவால்கள்2 என்ற தலைப்பில் பேராசிரியர் ஜே.ஈ. ஜெயசூர்ய நினைவுரையில் உரையாற்றிய பாலிஹக்கார, "முன்னெச்சரிக்கையாக இலங்கை பதுகாப்பு படைகள் மனிதாபிமான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். யுத்தத்தின்போது சாதாரணப் பொதுமக்கள் பாதிக்கப்படுவதையும் சேதங்களை குறைக்க வேண்டும் என்ற நோக்கில் சுய கட்டுப்பாட்டை படையினர் கடைப்பிடித்திருந்தனர்" என வலியுறுத்தியிருந்தார். "நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எழுந்திருந்த அச்சுறுத்தலில் இருந்து நாடு விடுதலையாவதற்கு சிப்பாய்களும், ஜனாதிபதியுடைய அரசியல் தலைமையும் வழிவகுத்துள்ளது" என்று அவர் கூறியிருந்தார். நாட்டின் இறையாண்மையை "சிப்பாய்கள் காப்பாற்றினர்" "தீரத்துடன் மீட்டுத் தந்திருந்தனர்" என்றெல்லாம் அவர் கூறினார். "2009ல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையை எந்த நாடும் குலைத்துவிடாதபடி ஐநா மன்றத்தில் வெற்றிகரமான ராஜீய வழிமுறைகளை அரசாங்கம் கையாண்டிருந்தது." என்று அவர் பாராட்டியிருந்தார். இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பக்கம் 85

[23] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பத்திகள் 279-280, பக்கம் 78

[24] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பத்திகள் 281, பக்கம் 78

[25] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு செங்கலடி, ஏராவூர் பட்டு பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது சாட்சி எண் 6 வழங்கிய வாக்குமூலம், 10 ஒக்டோபர் 2010

[26] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு மட்டக்களப்பு பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது சாட்சி எண் 8 வழங்கிய வாக்குமூலம், 9 ஒக்டோபர் 2010

[27] LLRC இணையதளத்தில் போடப்பட்ட வாக்குமூல பதிவுகளில் நிறைய மொழிநடை குறைபாடுகள் எழுத்துப் பிழைகள் இருந்தன. ஆட்கள் மற்றும் இடங்களின் பெயரில் உள்ள எழுத்துக்கள் மாறியிருந்தன. ஆணையாளர்களின் பெயர்களுக்கும் இடப் பெயர்களுக்கும் அதில் உள்ளது போலவே எழுத்துக்களை எளிமை கருதி வழங்குகிறோம்.

[28] கர்ணல் கருணா அம்மான் என்று அழைக்கப்படுகின்ற, முன்னாள் விடுதலைப் புலி தலைவரும், அதிலிருந்து பிரிந்து உருவாகிய தமிழ்க மக்கள் விடுதலைப் புலிகள் (டி.எம்.வி.பி) அமைப்பின் தோற்றுநரான அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரனின் ஆதரவாளர்கள்

[29] ஈழமக்கள் ஜனநாயக கட்சி என்ற அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் தமிழ்க் கட்சி

[30] Testimony of Witness 2, Divisional Secretariat, Ariyalai, Jaffna, 11 November 2010

[31] Testimony of Witness 7, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat, Madhu, 9 January, 2011

[32] Testimony of Witnesses 2 and 3, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Velanai, 14 November, 2010

[33] Tamil Makkal Viduthalai Pulikal (Tamil People's Liberation Tigers); a government-aligned political party founded by Vinayagamoorthy Muralitharan as a breakaway faction of the LTTE. Now headed by another former LTTE member S Chandrakanthan, Chief Minister of the Eastern Province

[34] Testimony of Witness 16, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat, Eravur Pattu, Chenkalady, 10 October, 2010

[35] Testimony of Witness 19, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat, Eravur Pattu, Chenkalady, 10 October, 2010

[36] Testimony of Witness 2, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, District Secretariat, Mullaitivu, 20 September 2010, LLRC/PS/20-09-10/01

[37] Testimony of Witness 12, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Batticaloa District Secretariat, 9 October 2010

[38] Testimony of Witness 13, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, District Secretariat Kilinochchi, 18 September 2010

[39] Testimony of Witness 5, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, District Secretariat, Buttala Divisional Secretariat, 26 March 2011

[40] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு சியம்பலந்துவ பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது, 26 மார்ச் 2011

[41] Testimony of Witnesses 5, 6 and 7, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of

the Commissions of Inquiry Act, St Anthony's Church, Kayts, 14 November 2010

[42] Testimony of Witness 1, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Gurunagar Cultural Hall, 12th November, 2010

[43] Testimony of Witness 10, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, District Secretariat, Mullaitivu, 20 September 2010, LLRC/PS/20-09-10/01

[44] உதாரணத்துக்கு பாருங்கள், இலங்கையின் சட்டமா அதிபர் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழுவுக்கு வழங்கிய ஒரு அறிக்கையில், தனிப்பட்ட குற்ற சந்தேக நபர்களை அடையாளம் காணும் வேலையை LLRC செய்யவில்லை என்று கூறியிருந்தனர். இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பத்தி 281, பக்கம் 78

[45] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Velanai, 14 November, 2010

[46] As with many the LLRC transcripts, the text of this exchange includes without differentiation questions apparently addressed to the interpreter (and answered by the interpreter), as well as statements directly attributable to the witness

[47] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Chavakachcheri Cultural Hall, 13 November, 2010, LLRC/FV/13-11-10/02

[48] Evidence given by Witness 9, Divisional Secretariat, Ariyalai, Jaffna, 11 November 2010

[49] Excerpt of Testimony of Bishop of Mannar, Rt Rev Dr Rayappu Joseph, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Mannar District Secretariat, Mannar, 8 January 2011

[50] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, முக்கிய சாராம்சம் பக்கம் ii

[51] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பக்கம் 91

[52] அதிலேயே பார்க்கவும், மேலும் விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது, சாட்சி எண் 1 தெரிவித்தது, 20 செப்டம்பர் 2010, LLRC/PS/20-09-10/01

[53] Testimony of Witness 3, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions

of Inquiry Act, Mullaitivu Divisional Secretariat, 20 September, 2010, LLRC/PS/20-09-10/01

[54] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Chavakachcheri Cultural Hall, 13November, 2010, LLRC/FV/13-11-10/02

[55] Testimony of Witness 4, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat Poonagari, 19 September, 2010

[56] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Poonagari Common Hall, 19 September 2010

[57] இலங்கையில் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழு வழங்கிய அறிக்கை, பக்கம் 25, 26ல் “புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இலங்கை படைகள் ஷெல் வீசியது” என்ற தலைப்பை பார்க்கவும்.

[58] டாக்டர் டி.வரதராஜா வழங்கிய வாக்குமூலம், 30 நவம்பர் 2010, http://www.llrc.lk/images/stories/LLRC_30.11_-_Dr._T.Vartharajah.pdf

[59] சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆவணம், நான்கு மருத்துவர்கள் விடுவிக்கப்பட்டனர், ஒருவருக்கு இன்னும் ஆபத்து உள்ளது, , (UA: 129/09 Index: ASA 37/020/2009)

http://www.amnesty.org/en/library/asset/ASA37/020/2009/en/829e6aef-4a2a-4862-97dd-c8a40405b3bd/asa370202009eng.html

[60] Evidence given by Witness 21, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat, Madhu, 9 January 2011

[61] Evidence Given by Witness 8, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Divisional Secretariat Nedunkerny, 15 August

[62] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அரியாலையில் நடத்திய அமர்வின்போது சாட்சி எண் 1 தெரிவித்தது, 11 நவம்பர் 2010

[63] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Kandawalai Divisional Secretariat, 19 September 2010

[64] படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு லக்ஷ்மண் கதிர்காமர் மையத்தில் 17 ஆகஸ்ட் 2010 அன்று நடத்திய விசாரணை அமர்வில் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தது.
http://www.llrc.lk/images/stories/docs/August2010/Gotabaya%20Rajapakshe.pdf

ஏர் சீஃப் மார்ஷல் குணதிலக 8 செப்டம்பர் 2010 அன்று கொடுத்த

வாக்குமூலத்தையும் பார்க்கவும்,
http://www.llrc.lk/images/stories/docs/Roshan%20Gunatillake%20-%20Air%20Force%20Commander.pdf

[65] Excerpt of "Representations made by Mr Gotabhaya Rajapaksha, Secretary Ministry of Defence" Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation at its public sitting held on 17th August 2010 at the Lakshman Kadirigamar Institute of International Relations and Strategic Studies." http://www.llrc.lk/images/stories/docs/August2010/Gotabaya%20Rajapakshe.pdf

[66] இலங்கை: பிரச்சினையின் அளவு குறித்து தவறான தோற்றத்தை அரசாங்கம் கட்டமைப்பது என்ற தலைப்பில் சர்வதேச பொதுமன்னிப்பு சபை வெளியிட்ட ஆவணம் (Index: ASA 37/012/2009)
http://www.amnesty.org/en/library/asset/ASA37/012/2009/en/0a7a7b9b-93b8-4dc1-bb2b-3e1955c7e567/asa370122009en.html

[67] அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த வாக்குமூலம், விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பொதுமக்கள் விசாரணை அமர்வு பற்றிய பதிவுகள்" வெளிநாடுகளுடனான உறவு, வியூக ஆய்வுகள் போன்றவற்றுக்கான லக்ஷ்மண் கதிர்காமர் மையம், 24, Horton Place, Colombo 07, 3 செப்டம்பர் 2010 (LLRC/PS/11-08-10/01)

[68] Ibid

[69] Ibid

[70] Excerpts of "Hon Vinayagamoorthy Muralidaran (sic)," proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Lakshman Kadirigamar Institute of International Relations and Strategic Studies, No.24, Horton Place, Colombo 07, 13 December 2010

[71] Ibid

[72] Ibid

[73] Excerpts of "Representations made by Mr S Santhirakanthan (sic), Chief Minister, Eastern Province," proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Lakshman Kadirgamar Institute of International Relations and Strategic Studies, No.24, Horton Place, Colombo 07, 20 October, 2010

[74] Representations made by Commander of the Navy Tisara Samarasinghe, proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Venue: Lakshman Kadirgamar Institute of International Relations and Strategic Studies, No 24, Horton Place, Colombo 07, Date: 08th September 2010

[75] Duleep de Chickera was Sri Lanka's 14th Anglican Bishop. He served from May 2001 until he retired on 31 December 2010

[76] "Representations made by Mr M I M Mohideen, " proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Lakshman Kadirigamar Institute of International Relations

and Strategic Studies, No 24 , Horton Place, Colombo 07, 3rd September 2010

[77] 14 ஆகஸ்ட் 2010 முதல் 19 பிப்ரவரி 2011 வரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் விசாரணை அமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன: வவுனியா: 14 ஆகஸ்ட் 2010 அன்று வ வுனியா பி.செயலகம், செட்டிக்குளம் பி.செ., ஐ.டி.பி.பி. மையம், மெனிக் பார்ம், 15 ஆகஸ்ட் 2010 அன்று நெடுங்கேணி பி.செ., கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு; 18 செப்டம்பர் 2010 அன்று கிளிநொச்சி பி.செ., பச்சிலைப்பிள்ளை பி.செ., 19 செப்டம்பர் 2010 அன்று பூனகரி பி.செ., 20 செப்டம்பர் 2010 அன்று முல்லைத்தீவு பி.செ., 20 செப்டம்பர் 2010 அன்று முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகம். மட்டக்களப்பு: 9 ஒக்டோபர் 2010 மட்டக்களப்பு பி.செ., ஓட்டமாவடி பி.செ., 11 ஒக்டோபர் 2010 அன்று ஏராவூர்பத்து பி.செ. யாழ்ப்பாணம்: 11 நவம்பர் 2010 அன்று அரியாலை; 12 நவம்பர் 2010 அன்று குருநகர் கலாச்சார மண்டபம், 12 நவம்பர் 2010 அன்று வட்டுக்கோட்டை கிழக்கு, சிட்டங்கேணி, யாழ் மாவட்ட செயலகம், 14 நவம்பர் 2010, புனித அந்தோணியார் தேவாலயம்,வெள்ளணை. திருகோணமலை: 3 டிசம்பர் 2010 அன்று திருகோணமலை மாவட்ட செயலகம், 4 டிசம்பர் 2010 மூதூர் பி.செ., புத்தளம் & மன்னார்: 07.01.2011 அன்று புத்தளம் மாவட்ட செயலகம், 8.01.2011 அன்று மன்னார் மாவட்ட செயலகம், 9 ஜனவரி 2011 அன்று மடு பி.செ. காலி & மாத்தரை: 18 பிப்ரவரி 2011 அன்று மாத்தரை மாவட்ட செயலகம்; 19 பிப்ரவரி 2011 அன்று காலி மண்டபம், காலி.

[78] Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, Venue: St. Anthony's Church Kayts, Date: 14 November 2010
http://www.llrc.lk/images/stories/Kayts_Public_Sittings_Amended.pdf

[79] Representations made by the public at District Secretariat Killinochchi, Proceedings of public sittings of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation appointed by His Excellency the President in terms of Section 2 of the Commissions of Inquiry Act, 18th September 2010, LLRC/PS/18-09-10/01. http://www.llrc.lk/images/stories/docs/Sep2010/Killinochchi_Div_Sec_-_Amended.docx

[80] Testimony of Witness 12, Gurunagar Cultural Hall, Jaffna, 12 November 2010

[81] பிரிவு எண் 10(b), சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையை மாற்றுவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுப்பு, 2005ல் ஐநா மனித உரிமைகள் ஆணையம் இக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தது. E/CN.4/2005/102/Add.1, 8 பிப்ரவரி 2005, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G05/109/00/PDF/G0510900.pdf?OpenElement

[82] பிரிவு எண் 10(c), சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையை மாற்றுவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான புதுப்பிக்கப்பட்ட கொள்கைத் தொகுப்பு, 2005ல் ஐநா மனித உரிமைகள் ஆணையம் இக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தது. E/CN.4/2005/102/Add.1, 8 பிப்ரவரி 2005, http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G05/109/00/PDF/G0510900.pdf?OpenElement

[83] விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 2ன் கீழ் ஜனாதிபதி அமைத்த

---

படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு பச்சிலைப்பிள்ளை பிரதேச செயலகத்தில் நடத்திய அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது, 18 செப்டம்பர் 2010, , LLRC/PS/18-09-10/02, பக்கம் 1

[84] ரஜித் கீர்த்தி தென்னக்கோன், "LLRC யின் மன்னார் அமர்வுகள்: நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையிலான ஊசலாட்டம்" http://www.srilankaguardian.org/2011/01/llrc-mannar-sessions-oscillation.html

[85] ரஜித் கீர்த்தி தென்னக்கோன், "LLRC யின் மன்னார் அமர்வுகள்: நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையிலான ஊசலாட்டம்" http://www.srilankaguardian.org/2011/01/llrc-mannar-sessions-oscillation.html

[86] LLRC அரசாங்கத்துக்கு வழங்கிய இடைக்கால அறிக்கையை காண்க, களப்பார்வை, 11 நவம்பர் 2010, http://groundviews.org/2010/11/11/llrc-interim-report-to-government/

[87] இந்தக் குழுவுக்கு இலங்கையின் சட்டமா அதிபர் மோஹன் பீரிஸ் தலைவராக உள்ளார், பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, பொது நிர்வாகம் மற்றும் உள்துறை அமைச்சகச் செயலர் அபெய்கோன், நீதித்துறை அமைச்சகச் செயலர் சுஹாத கம்லத், பொருளாதார அபிவிருத்தி அமைச்சக செயலர் டாக்டர். வில்லி கமகெ, புனர்வாழ்வு மற்றும் சிறை மேம்மாட்டு அமைச்சக செயலர் திஸ்ஸநாயக, வெளியுறவு அமைச்சக செயலர் ரொமேஷ் ஜெயசிங்க ஆகியோர் இதில் உறுப்பினர்களாக இருந்தனர். IAACயின் செயலராக டி.எஸ். திவரட்ண இருக்கிறார். இவர் வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட செயலணியின் செயலரும் ஆவார். "Diplomatic lapses put SL under world pressure," *சண்டே டைம்ஸ் நாளேடு* , 6 மார்ச் 2011

http://www.sundaytimes.lk/110306/Columns/political.html

[88] ஜனாதிபதிக்கு கொடுக்கப்பட்ட இடைக்கால அறிக்கை, செப்டம்பர் 2010

[89] அதே குறிப்பு

[90] எஸ்.செல்வகுமார், ", "KP rehabilitated, says Keheliya" தி நேஷன் (இலங்கை), 10 ஜூலை 2011

http://www.nation.lk/2011/07/10/news5.htm

[91] "Missing Persons: only 7 % Gets Info," *டெய்லி மிர்ரர்* 24 ஜூன் 2011 http://www.dailymirror.lk/news/12099-only-seven-per-cent-get-information-on-detainees.html

[92] உதாரணமாக பாருங்கள் : "Govt. to relax Emergency Regulations", *டெய்லி நியூஸ்*, 28 ஜூலை 2011 http://www.dailymirror.lk/news/12658-govt-to-relax-emergency-regulations.html

மேலும் தகவலுக்கு: "Prolong Emergency Regulations not Govt's Desire", *இலங்கை அரசின் உத்தியோகபூர்வ செய்தித் தளம்*, 28 ஜூலை 2011

http://www.news.lk/home/18570-prolong-emergency-regulations-not-govts-desire

[93] கடைசியாக தெரிவிக்கப்பட்ட சம்பவங்களில் ஒன்று இது. பாலச்சந்திரன் சற்குணராஜா என்ற முப்பது வயது நபர் அடித்துக் கொலைசெய்யப்பட்டு

---

யாழ்ப்பாணம் அச்சுவெலியில் உள்ள மைதான கோல் கம்பியில் தொங்கவிடப்பட்டிருந்தது 26 ஜூன் அன்று தெரியவந்தது. இவரது கொலைக்கும் இராணுவ உளவுப் பிரிவு அதிகாரி ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கொலைக்கு தனிப்பட்ட விரோதம் காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டாலும், பாலச்சந்திரன் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் என்றும் அண்மையில்தான் இவர் விடுதலை ஆகியிருந்தார் என்றும் ஒரு செய்திக் குறிப்பு சொல்கிறது.



# நான் உதவ விரும்புகிறேன்

அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ள ஒரு பெரிய மோதல், ஆனாலும் சரி உலகம் மறந்துவிட்ட ஒரு மூலையில் நடக்கும் ஒரு இருட்டடிக்கப்பட்ட பிரச்சினை என்றாலும் சரி, நீதியும் நியாயமும் சுதந்திரமும் மரியாதையும் அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டும் என்று கோரிப் போராடுகிறது **சர்வதேச பொது மன்னிப்பு சபை.** ஒரு மேம்பட்ட உலகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் ஆதரவை ஒன்றுதிரட்ட அது எத்தனிக்கிறது

## நீங்கள் செய்யக்கூடியது என்ன?

மனித உரிமைகளைக் குலைக்கும் பயங்கர சக்திகளை எதிர்த்துப் போராடி கட்டுப்படுத்துவது சாத்தியமே என்று பல இடங்களில் ஆர்வலர்கள் நமக்குக் காட்டியுள்ளனர். ஆகவே இந்த இயக்கத்தின் ஒரு அங்கமாக இருங்கள். அச்சுறுத்தலையும் வெறுப்பையும் கட்டவிழ்த்துவிடுவோரை எதிர்த்துப் போராடுங்கள்.

■ சர்வதேச பொது மன்னிப்பு சபையில் உறுப்பினராவதன் மூலம் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு உலகளாவிய இயக்கத்தில் பங்காற்றுங்கள். மாற்றத்தைக் கொண்டுவருவதில் எமக்கு உதவுங்கள்.

■ சர்வதேச பொது மன்னிப்பு சபை செயல்படுவதற்கு உங்களால் முடிந்த தொகையைக் கொடுத்து உதவுங்கள்.

## ஒன்றாக குரலெழுப்புவதன் மூலம் நம்முடைய கோரிக்கைகளை ஓங்கி ஒலிக்கச் செய்யமுடியும்.

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபையின் உறுப்பினராவதற்கான மேலதிக விபரங்களைப் பெற நான் ஆர்வமாக இருக்கிறேன்

பெயர்

முகவரி

நாடு

மின்-அஞ்சல்

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபைக்கு நிதியுதவி செய்ய நான் விரும்புகிறேன். (ஐக்கிய இராஜ்ஜிய பவுண்டுகளாகவும் £, அமெரிக்க டொலர்களாகவும் $, ஐரோப்பிய யூரோக்களாகவும் € பணத்தை ஏற்றுக்கொள்வோம்)

தொகை

எனது வங்கி அட்டையிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளவும் விசா ☐ மாஸ்டர்கார்ட் ☐

அட்டை எண்

காலாவதியாகும் தேதி

கையொப்பம்

தயவுசெய்து இந்தப் படிவத்தை உமது நாட்டிலுள்ள சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகத்துக்கு திருப்பியனுப்பவும்.

உலக நாடுகளில் சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் அலுவலக முகவரிகளை அறிய: www.amnesty.org/en/worldwide-sites என்ற இணைய தளத்தைக் காண்க. உங்கள் நாட்டில் சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகம் இல்லை என்றால், திருப்பியனுப்ப வேண்டிய முகவரி:

**Amnesty International**, International Secretariat, Peter Benenson House,
1 Easton Street, London WC1X 0DW, United Kingdom

amnesty.org

# எப்போது அவர்களுக்கு நீதி கிடைக்கும்?

## இலங்கையின் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணையத்தின் தோல்விகள்

இலங்கையின் ஆயுத மோதல் தொடர்பிலான காரணங்களை உள்நாட்டு அரசாங்கம் விசாரிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் 2010 மே மாதம் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அமைக்கப்பட்டது முதல் மக்கள் ஆயிரக்கணக்கானோரிடம் இருந்து அது புகார்களைப் பெற்றுள்ளது. சர்வதேச சட்டங்களின் கீழ் மோசமான குற்றங்களாகவும், போர்க்குற்றங்களாகவும்கூட அமையக்கூடிய குற்றங்களை மோதலில் ஈடுபட்ட இருதரப்பினரும் செய்துள்ளனர் என்று குற்றம்சாட்டப்படும் நிலையில், பாதிக்கப்பட்டவர்களாகவும், குற்றச்செயல்களுக்குக் காரணமானவர்களாகவும் அமைந்திருக்கூடியவர்கள் இலங்கையின் படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் முன்பு தோன்றியிருந்தனர். சிலர் தமது எழுத்துபூர்வ மனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். ஆனால் அந்தப் புகார்களை விசாரிக்க ஆணைக்குழுவினர் தவறிவிட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் பதிவுகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆராய்ந்தபோது, பல நல்ல சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டுள்ளதும், சில சமயங்களில் ஆணைக்குழு அப்பட்டமாகவே கவனக் குறைவுடனும் அலட்சியத்துடனும் நடந்துகொண்டுள்ளதும் தெரியவருகிறது. தவிர ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சாட்சிகளிடம் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ளவில்லை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான எவ்விதமான முயற்சியையும் அவர்கள் எடுத்த்தாகவும் தெரியவில்லை. மேலும் சாட்சிகளை மிரட்டல்கள் மற்றும் பழிவாங்கல்களில் இருந்து பாதுக்கப்பதற்கான எந்த நடவடிக்கையையும் அவர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை.

நீதி கிடைக்கச்செய்யும் நோக்கில் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லிக்கொண்டு வந்தாலும், எவ்வித பலனும் தராத வழிமுறைகளாகவே இருந்துவிடுகின்ற இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் மேலும் ஒன்றாகவே இந்த ஆணைக்குழுவும் அமைந்துள்ளது. இந்த ஆணைக்குழுவைக் கண்டு சர்வதேச சமூகம் ஏமாந்துவிடக்கூடாது. சுயாதீனமான, சர்வதேச அளவிலான விசாரணை நடந்தால் மட்டுமே உண்மையை வெளிக்கொண்டுவர முடியும், நீதி கிடைக்கச்செய்ய முடியும், இலங்கையின் இரத்தக் களறியான யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நிவாரணம் கிடைக்கச் செய்ய முடியும். அப்படியான ஒரு விசாரணையில்தான் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகள் செவிமடுக்கப்படும்.

amnesty.org

Index: ASA 37/008/2011
செப்டம்பர் 2011

AMNESTY INTERNATIONAL